மலர் - 04 இதழ் - 10 ஏப்ரல் 2026

தமிழணங்கு

(தமிழால் இணைவோம்)

இலக்கிய
சமய
பண்பாட்டுப்
பன்மொழி
மின்னிதழ்

நிறுவனர் & தலைமைப் பதிப்பாசிரியர் முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி

சேரர், சோழர், பாண்டியர்

பெயர் ஒன்று, குரல்கள் பல: ஔவையார் பாட்டுகள்
கோவிந்தசாமி இராசகோபால்

குறிச்சி ஆவணங்கள்
மு. நளினி, இரா. கலைக்கோவன்

அறவியல் நோக்கில் வள்ளுவமும் மேகலையும்
முனைவர் ஜோதி எஸ். தேமொழி

போர்ப் பொருளாதாரம்
ச. அய்யம்பிள்ளை,

குறிஞ்சிக் கடவுள் குறுக்குத்துறை முருகன் கோயில்
பொதிகை குடும்பன் சண்முகக் குமார்

இன்னும் பல ...

தமிழர் இலக்கிய சமய பண்பாட்டு ஆய்விதழ்

தமிழணங்கு

(தமிழால் இணைவோம்)

மலர் - 04 இதழ் - 10

ஏப்ரல் 2026

நிறுவனர் & தலைமைப் பதிப்பாசிரியர்
முனைவர் திருமதி செ. இராஜேஸ்வரி

பொறுப்பாசிரியர்
முனைவர் சந்திரிகா சுப்பிரமணியன்

ஆசிரியர் குழு
முனைவர் தேமொழி (அமெரிக்கா)
Dr. புதேரி தானப்பன் (டில்லி)

வடிவமைப்பு
அருணேஷ்

செயற்கை நு ண்ணறிவு படங்கள்
முனைவர் திருமதி செ. ராஜேஸ்வரி

Thamizhanangu
Printed and Published by :
E.Satish Rajkumar (Advocate)
3/422, Thiruvalluvar Street, Dinamani Nagar,
Madhurai,
Tamil Nadu – 625 018.
Ph : +91 78711 23226, +91 70109 97639

கட்டுரைகள் அனுப்ப..
rajetamiljuly1@gmail.com

இவ்விதழில் இடம் பெற்றுள்ள கருத்துகள் அனைத்தும் கட்டுரையாளர்களின் கருத்துகளே ஆகும். அவற்றுக்கும் இதழாசிரியருக்கும் எந்தத் தொடர்பும் இல்லை
– இதழ் ஆசிரியர்

உள்ளடக்கம்

1. **பெயர் ஒன்று, குரல்கள் பல: ஔவையார் பாட்டுகள்** 3
கோவிந்தசாமி இராசகோபால்

2. **குறிச்சி ஆவணங்கள்** 33
மு. நளினி, இரா. கலைக்கோவன்

3. **அறவியல் நோக்கில் வள்ளுவமும் மேகலையும்** 37
முனைவர் ஜோதி எஸ். தேமொழி

4. **தமிழ் என்னும் பீனிக்ஸ் பறவை** 43
அ.திவ்யகுமாரி கண்ணம்மா

5. **முசிரியும் நைலும்: சேர–எகிப்திய தொடர்புகள், சீசரியனின் தப்பித்தல் மற்றும் எகிப்து அரசர்களின் பள்ளத்தாக்கில் தமிழ்-பிராமி கல்வெட்டுகள்:** 49
Bp Dr J இரவிக்குமார் ஸ்ரீஃபன் G

6. **போர்ப் பொருளாதாரம்** 55
ச. அய்யம்பிள்ளை,

7. **குறிஞ்சிக் கடவுள் குறுக்குத்துறை முருகன் கோயில்** 59
பொதிகை குடும்பன் சண்முகக் குமார்

8. **பொருள் நலத்தால் ஓரளவு ஒத்துச் செல்லும் குறட்பாக்கள்** 67
மு. பழநிச்சாமி

9. **எளிய முறையில் யாப்பறிவோம்.** 86
நெருப்பலையார்.இராம இளங்கோவன்

10. **தொடரும் இன்காவின் தங்க வேட்டை !!** 89
டாக்டர். அண்ணாமலை சுகுமாரன்

11. **மரபின் வேர்கள் - நூல் திறனாய்வு - 4 (முன் இதழ்த் தொடர்ச்சி)** 93
டாக்டர் புதேரி தானப்பன்

12. **திருவிதாங்கூர் சமஸ்தானம்: திரிக்கப்படும் வரலாறும் மறைக்கப்படும் உண்மைகளும்** 99
லயன் வெங்கடேசன்

13. *TAMILMAGAN's Gene Notes in Vengai Anchor* 101
Dr. C. Rajeswari M.A., M.Phil., Ph.D

14. *The Whispers of the Indian Ocean: Unveiling the Enigma of Lemuria and Kumari Kandam* 103
Ms. Prabha S. Rajesh, Chennai

மீனாட்சி திருக்கல்யாணம் ஏப்ரல் 28, 2026

பெயர் ஒன்று, குரல்கள் பல: ஔவையார் பாட்டுகள்

முனைவர் கோவிந்தசாமி ராஜகோபாலன்,
மேனாள் தமிழாசிரியர், டில்லி பல்கலைக்கழகம், டில்லி

ஈராயிரத்து இருநூறு ஆண்டுகளுக்கும் மேலான இலக்கிய-இலக்கண வரலாறு கொண்டது நம் அன்னைத் தமிழ்மொழி. இதன் நெடும்பரப்பில் எண்ணிறந்த கவிஞர்/புலவர் பெருமக்கள் தம் பாட்டுத்திறத்தாலே தமிழ் வையத்தைப் பாலித்திட வைத்துள்-ளனர். ஆயின் அவர்களுள் ஒரு சிலரே மக்கள் மனங்களிலே அரியாசனம் பெற்றுள்-ளனர். கம்பன், வள்ளுவர், இளங்கோ என்ற ஒரு மூன்று தமிழ்க்கவிஞர்களை மட்டுமே ஒரு முப்பெரும் கவிஞர்களாக, முத்திரைக்கவிஞர்களாக வரிசைப்படுத்துகிறார் மகாகவி சுப்பிரமணிய பாரதியார். இக் கவிஞர்களுக்கு நிகர் உலகில் எவரும் யாங்கணுமே பிறந்ததிலை எனவும் இறும்பூது எய்துகிறார் அவர் (1976:46). இந்த முன்னைக் கவிஞர் மூவருக்கும் ஒப்ப/ஒத்த நிலையில் வைத்து எண்ணத்தக்க ஒரே ஒரு பெண்பாற் கவிஞர்/புலவர் உளர் எனில், அவர் ‘ஔவையார்’ மட்டுமே ஆவர்.

பாட்டு: சொற்பொருள்

“பெயர் ஒன்று, குரல்கள் பல: ஔவையார் பாட்டுகள்” என்பது இக் கட்டுரைத் தலைப்பு. இதில் ‘பாட்டுகள்’ என்னும் சொல், ‘இலக்கியங்கள்’ என்ற பொருளிலே கையாளப்படுகிறது. ‘காவ்யா’ என்ற சம்ஸ்க்ருதச் சொல்லின், ‘சாஹித்யா’ என்ற ஹிந்திச்சொல்லின் பொருளில் வழங்கப்படும் தமிழ்ச்சொல்தான் ‘பாட்டு.’ ‘பாட்டு’ என்ற இந்தச் சொல்லுக்கு மூலச்சொல் அதாவது அடிச்சொல் ‘பா’ என்பதாகும். ‘பா’ என்பது யாப்பு இலக்கணப்படி இயற்றப்பட்ட ‘செய்யுள்’ என்பதாகும். இது வெண்பா, ஆசிரியப்பா, வஞ்சிப்பா, கலிப்பா என்ற நான்கு வகை ஓசை ஒழுங்கில் அமைந்த செய்யுள் வகைகளைக் குறிக்கும் ஒரு பொதுச்சொல். எனினும் வெண்பாவில் இயற்றப்பட்ட செய்யுள் வகையையே இது சிறப்பாகக் குறிக்கிறது. பிற செய்யுள் வகைகள் ‘கவிதை’ என்ற இலக்கிய வகைமையில் அடங்கும்.

‘பா’ என்ற அடிச்சொல்லிலிருந்தே ‘பாடல்,’ ‘பாட்டு’ என்ற சொற்கள் பிறக்கின்றன. இராகம், தாளம் என்னும் இசை நுணுக்க அறிவுடன் இசைக்கப்படுவது *(Singing)* ‘பாடல்.’ ஆங்கிலத்தில் இதை ‘ஸாங்க்’ *(Song)* என்பர். விரும்பத்தக்கவாறு ஓசை நயம்பட வாசிக்கப்படுவது *(Reciting)* கவிதை இலக்கியம். கவிதை இலக்கியத்தைக் குறிக்கும்

தனிச்சொல்லைப் ‘பாட்டு’ *(Poem)* எனலாம். பத்துப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, முல்லைப்பாட்டு, குயிற்பாட்டு என்ற நூற்பெயர்கள் இங்கு எண்ணத்தக்கன. இவை யாவும் ஒரு பொருள் பற்றிய நெடுங்கவிதைகள் அல்லது இலக்கியங்கள் ஆகும். எட்டுத்தொகையில் இடம்பெற்றுள்ள ‘பரிபாடல்’ என்ற நூற்பெயர் வேறு பொருள் நல்குகிறது. இதில் இடம்பெற்றுள்ள கவிதைகள், அடிப்-படையில் தோத்திரங்கள். வழிபாட்டின்போது இசைப்பதற்குரிய அதாவது பாடுவதற்-குரிய அவை. ஆகவே பா, பாடல், பாட்டு என்பன வெவ்வேறு பொருள் குறிப்பன என்பது அறியத்தகுந்தது. குறுந்தொகையில் இடம்பெற்ற ஔவையார் கவிதை ஒன்றிலும் ‘பாட்டு’ என்ற சொல் ‘கவிதை’ அல்லது ‘இலக்கியம்’ என்ற சொல்லின் பொருளில் குறிப்பிடப் பெற்றிருப்பது அறியத் தகுந்தது.

அகவன் மகளே அகவன் மகளே
மனவுக்கோப் பன்ன நன்னெடுங் கூந்தல்
அகவன் மகளே பாடுக பாட்டே
இன்னும் பாடுக பாட்டே அவர்
நன்னெடுங் குன்றம் பாடிய பாட்டே *(கு.தொ. 23)*

இந்தக் கவிதையில் இடம்பெற்றிருக்கும் “அகவன் மகளே பாடுக பாட்டே” என்ற தொடர் சரியாகப் புரிந்துகொள்ளப்பட வேண்டும். அகவன் என்ற சொல்லின் பொருள் அழைத்துப் புகழ்வோன் என்பதாகும். அக் காலத்தில் பொருள் வேண்டி ஒருவரை அழைத்துப் புகழ்ந்தோன் பாணனாக இருக்கலாம். அகவு என்ற வினைச்சொல்லின் ஆண்பால் பெயர்ச்சொல்தான் அகவன். மயில் அகவும். ஆயின் அது பாடாது. ஓசை நயம்பட அது எழுப்பும் குரலொலி யாரையோ அழைப்பது போல இருக்கும். இது போல ஓசைநயம்பட யாரையோ அழைத்து ஒரு பாட்டை அதாவது ஒரு நெடுங்-கவிதையை வாசிப்பது/ஓதுவது (Recitation) ‘பாடுதல்’ எனப்படும். இங்குப் பாடு என்பது வினைச்சொல். அகவன் மகள் எனக் குறிப்பிடப்படுபவள், ஓசை நயம்படக் கவிதையை வாசிக்கும்/ஓதும் ஒரு பாவாணர் மகளாக இருக்கலாம் அல்லது ஒரு பாணர் மகளாகவும் இருக்கலாம். பாணர் எல்லாரும் இசைவாணர் இல்லை. யாழ் என்ற இசைக்கருவியுடன் இசைத்தவர் யாழ்ப்பாணர் ஆவர். இவர் பாணர் என்பவரிடமிருந்து சற்று வேறுபட்டவர்.

ஔவையார்: சொற்பொருள்

ஔவை என்னும் சொல், ‘ஆர்’ எனும் மதிப்பு தரு விகுதி கூட்டப்பெற்று ‘ஔவையார்’ என ஆகிறது. ஔவையா? அவ்வையா? அப் பெண்கவிஞர் பெயரை எழுதுவதில் ஒரு குழப்பம். அவர் பெயர், ‘அவ்வை’ என எழுதப்பட்டதே முதல் வழக்கு/முன்னை வழக்கு.’ இதுவே பின்னர் ‘ஔவை’ எனத் திரிபு கண்டது என்கிறார் மு.வ. *(1977:27)*.

இவர்தம் கருத்திற்கு ஊற்றுக்களமாக இருப்பது, உரையாசிரியர்கள் இளம்பூரணரும் நச்சினார்க்-கினியரும்1 எழுத்ததிகார நூற்பா ஒன்றுக்கு முன்மொழிந்திருக்கும் பொழிப்புரை ஆகும்.

> அகரத்து இம்பர் யகரப் புள்ளியும்
> ஐயென் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும் (தொ.கா. 56)

என்ற நூற்பாவிற்கு உரை வரையும்போது இளம்பூரணர் (2010:29), "அகரத்தின் பின்னர் இகரமேயன்றி யகரமாகிய புள்ளியும், ஐ எனப்பட்ட நெட்டெழுத்தாம் வடிவு-பெறத் தோன்றும். எ-டு: ஐவனம், அய்வனம் என வரும். 'மெய்பெறத் தோன்றும்' என்றதனான், அகரத்தின் பின்னர் உகரமேயன்றி, வகரப் புள்ளியும் ஔகாரம் போல வருமெனக் கொள்க. எ-டு: ஔவை – அவ்வை எனக் கண்டு கொள்க" என விளக்கம் நல்குகிறார்.

'அவ்வை' எனும் சொல் 'தாய்', 'கிழவி', 'தவப்பெண்' எனப் பல பொருள்கள் பயப்பது என விளக்கம் அளிக்கிறது தமிழ் லெக்சிகன் (1982:150). இதே அகராதி, 'ஔவை' என்பதற்கும் மேற்சொன்ன பொருள்விளக்கங்களையே 'mother,' 'matron,' 'old woman' என ஆங்கிலத்தில் குறிப்பிடுகிறது (மேலது, ப. 632). ஆக, 'அவ்வை' என்பதும், 'ஔவை' என்பதும் ஒரே பொருள்கள் குறிக்கும் இரு வேறு எழுத்து வழக்குகள் என்பது தெளிவு. 'அவ்வை' எனும் சொல் 'அம்மை' என்ற சொல்லின் திரிபு என்கிறார் மு.வ. (மு.நூ.) இச் சொல், மூலத் திராவிடமொழிச் சொல்லாகப் புலப்படுகிறது. இது தெலுங்கு & கோண்டி (Gondi) மொழிகளில் 'அவ்வா' எனவும், கன்னடம் & கொடகு (Kodagu) மொழிகளில் 'அவ்வே' எனவும் வழங்கப்படுகிறது. தெலுங்கு மொழியில் இது பாட்டியை அதாவது அம்மாவின் அம்மாவைக் குறிக்கிறது. காலங்காலமாகத் தமிழ் மக்கள் ஔவையைப் 'பாட்டி' என்ற உறவுமுறைப் பெயரோடேதான் குறிப்பிடு-கின்றனர். ஆக, தாய், அம்மா, கிழவி என்ற பெயர்ச்சொற்களினும் 'அம்மை" (Reverent lady) எனப் பொருள்படும் 'பாட்டி' என்ற சொல்லே ஔவைக்குப் பெரிதும் பொருந்தும் சொல்லாகத் தெரிகிறது. ஆயின், இதில் நெருடலும் உண்டு. காரணம், எட்டுத்தொகை நூல்களில் இடம்பெற்றிருக்கும் அவர்தம் காமம் சார்ந்த காதல் உணர்வுகள் அவரைப் 'பாட்டி'யாக அடையாளம் காட்டவில்லை; காதல் உணர்ச்சி மிக்க ஒரு 'மங்கை'யாகவே அவரை மதிப்பிடத் தோன்றுகிறது. வீரம், போர் மறம், அரசாட்சி போற்றும் அவர்தம் புறக்கவிதைகள் அவரை ஒரு வீர மங்கையாக, அரசியலில் விவேகம் பேசும் ஒரு 'நங்கை'யாக அடையாளம் காட்டுகின்றன.

ஔவை யார்?

தமிழ் இலக்கிய உலகில் 'ஔவையார்' எனும் பெயரில் சங்க காலம் முதற்கொண்டு கி.பி. 19ஆம் நூற்றாண்டு வரை எண்ணிறந்த பாட்டுகள் காணப்படுகின்றன. இப் பெயரில் தமிழில் இலக்கியம் படைத்தோர் 9 பேருக்கும் மேல் இருக்கலாம் என்கிறார் தாயம்மாள் அறவாணன் (2015:174). ஔவையார் என்றதும் தமிழ் மக்களின் பொதுப்புத்தியில் நீக்கமற நிறைந்திருப்பவர் ஓர் அவ்வையாரே ஆவர். அந்த ஔவையார் யாரெனில், "சுட்ட பழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா?" என்று தமிழ்க்கடவுள் முருகப்பெருமான் கேட்டதாகக் கருதப்பெறும் தொன்மத் தமிழ்ப்புலவர் ஔவையாரே ஆவர். மிகச் சரியாகச்

சொல்ல வேண்டுமென்றால், ‘கொடுமுடி கோகிலம்’ என்று பாராட்டப்பட்ட கே.பி. சுந்தராம்பாள் ஆவர். ஆம், இவர்தான் ஔவையார் என்ற பண்டைக் காலத்துப் பெண்கவிஞருக்குப் புனைவடிவம் கொடுத்தவர். ஆக, புனைவிலும் நிஜத்திலும் வாழ்ந்த ஔவையார்கள் வெவ்வேறு என்பது தெளிவு.

சங்க காலம் முதற்கொண்டு ஆங்கிலேயர் ஆட்சிக்காலம் வரை ஔவையார் பெயரில் எண்ணிறந்த பாட்டுகள், மூன்று கால கட்டங்களில் வெளியாகி உள்ளன. அந்த மூன்று காலகட்டங்கள் / முக்கியமான பாட்டுகள் என்பன:

1. முதலாவது காலகட்டம்: சங்கக் காலம் – காதல் வீரம் குறித்த பாட்டுகள்.
2. இரண்டாவது காலகட்டம்: இடைக்காலம் – பல்வேறு பேசு பொருள்கள் குறித்த தனிப்பாடல்கள்.
3. மூன்றாவது காலகட்டம்: நவீன காலம் அதாவது *1800/1900* ஆம் நூற்றாண்டு – ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி என்ற நீதி நூல்கள் .

ஔவையார் பாட்டுகள்

ஔவையார் இயற்றியனவாக எண்ணிறந்த நூல்கள் வெளியாகியுள்ளன. காதல், வீரம், நீதி குறித்த தனிப்பாட்டுகள் மட்டுமன்றி, கோவை, அந்தாதி, நிகண்டு, குறள், பக்தி, ஒழுக்கம் தொடர்பான பாட்டுகளும் ஔவையார் பெயரில் படைக்கப்பட்டுள்ளன. அவையாவன: ‘அசதிக்கோவை,’ ‘பந்தன் அந்தாதி,’ ‘பெட்டகம்,’ ‘அவ்வை நிகண்டு,’ ‘அவ்வை குறள்,’ ‘தரிசனப்பத்து,’ ‘விநாயகர் அகவல்,’ ‘வேழமுகம்,’ ‘கணபதி ஆசிரிய விருத்தம்,’ ‘கல்வி ஒழுக்கம்,’ ‘நீதி ஒழுக்கம்’ என்பன.

சங்க காலம் முதல் நவீன காலம் வரை ஔவையார் என்ற பெயரில் பலர் பாட்டுகள் படைத்துள்ளனர் என்பது தெளிவு. பல காலகட்டங்களில் வாழ்ந்த தமிழ்க் கவிஞர்களை ஈர்த்த ஒரே பெண் கவிஞர் ஔவையார் மட்டுமே ஆவர். “அவ்வையார் அளவிற்குத் தமிழ்க்கவிதை உலகில் எந்தப் பெண்கவிஞரும் சாதிக்கவில்லை என்பது வரலாறு” என்கிறார் தாயம்மாள் *(2015:481)*.

ஔவையார் யார்? அவர் எங்கே பிறந்தார்? எப்போது பிறந்தார்? அவர் பெற்றோர் யாவர்? அவர் கன்னிப்பெண்ணா? திருமணமானவரா? சந்யாசினியா? அவர் எங்கே வாழ்ந்தார்? எங்கே இயற்கை எய்தினார்? என்ற எந்தக் கேள்விக்கும் வரலாற்றில் சான்று இல்லை. அவர் குறித்த பதிவுகள் எல்லாம் பெரும்பான்மை ஊகங்கள்தாம். அவர்தம் சங்கக்கவிதைகள் அளிக்கும் தரவுகள் அடிப்படையில், அவர் கொங்கு மண்டலத்தைச் சார்ந்தவர்; தகடூர் என்ற இன்றைய தருமபுரியை ஒட்டிய ஏதோ ஓர் ஊரில் வாழ்ந்தவர்; தகடூரை ஆண்ட அதியமான் நெடுமான் அஞ்சி என்ற குறுநில மன்னனோடு நெருங்கிய தோழமை கொண்டிருந்தவர்; காதல் உணர்ச்சியும், வீர எழுச்சியும் ஒருங்கே வாய்த்திருந்த ஒரு பெருங்கவிஞர்; நேர்படப் பேசியவர் என்ற-வாறான ஒரு பிம்பம் வெளிப்படுகிறது. ஆயின் இதற்கு முரணாக, நாடக மேடையில் டி.கே. சண்முகம் என்பவரும், திரைப்படத்தில் கே.பி. சுந்தராம்பாளும் முன்னிறுத்திய ஔவையாரே தமிழ் மக்களின் உள்ளங்களிலே

நீக்கமற நிறைந்துள்ளார். அவர் திருமணத்தை வெறுத்தவர்; சைவ சமயத்தினர்; இறையருளால் துறவியானவர் என்ற பிம்பமே நிலைபெற்றுள்ளது.

ஔவையார் தொடர்பான கதைகள்

- *அவ்வையார் சந்திரனில் அமர்ந்து வடை சுட்டுக் கொண்டிருக்கிறாள்.*
- *அவ்வையார் சந்திரனில் அமர்ந்து தோசை சுட்டுக் கொண்டிருக்கிறாள்.*
- *அவ்வையார் சந்திரனில் உட்கார்ந்து நூல் நூற்றுக் கொண்டிருக்கிறாள்.*
- *ஒரு முறை அவ்வையார் நடந்த களைப்பால் ஓர் ஊரில் சிவன் கோயிலில் சிவலிங்கம் பக்கமாகக் கால் நீட்டிப் படுத்திருந்தாராம். அங்கு வழிபட வந்த ஒரு பெண்மணி ஔவையாரை எழுப்பினாராம். சிவபெருமானுக்கு மதிப்பளிக்காமல் ஔவை கால் நீட்டிப் படுத்திருப்பதைக் குறை சொன்னாராம். அதை ஏற்றுக்-கொண்ட ஔவை, சிவன் இல்லாத பக்கம் எது என்று சொன்னால், தான் அப்- பக்கமாகக் கால் நீட்டிப் படுத்துக்கொள்வேன் என்றாராம்.*
- *நீள் ஆயுள் அளிக்கும் அரிய நெல்லிக்கனி ஒன்றை அதியமான் ஔவையாருக்கு அளித்தான். இது புறநானூற்றில் இடம்பெற்றுள்ள ஔவையார் கவிதைகளிலும் அவர் இயற்றியதாகச் சொல்லப்படும் 'தரிசனப்பத்து' என்ற ஆன்மிக நூலிலும் பதிவாகியுள்ளது.*
- *கடை எழு வள்ளல்களில் ஒருவனான பாரி கொல்லப்பட்ட பின், அவர்தம் பெண் மக்களுக்கு ஔவையார் திருமண நடத்தி வைத்ததாக ஒரு தனிப்பாடல் சுட்டுகிறது.*
- *அங்கவை, சங்கவை என்ற இரு வேறு பெண்களின் திருமணத்திற்குச் சேர, சோழ, பாண்டியர் ஆகிய மூவேந்தரையும் ஔவையார் சேலம் மாவட்டம், உத்தம சோழ-புரம் என்ற ஊருக்கு வரச்செய்து அவர்களை ஒருங்கிணைத்தார் எனக் 'கரபுர-நாதர் புராணம்' என்னும் கொங்கு நாட்டு நூல் கூறுகிறது.*
- *இதே போலச் சிறுமி ஒருத்தியின் திருமணத்திற்கு மூவேந்தரையும் குமரி மாவட்டத்தில் உள்ள முப்பந்தல் என்னும் ஊருக்கு வரச் செய்தார் என்று மற்றொரு கதையும் வழங்கப்படுகிறது.*
- *சேலபுரி என்னும் இடத்திற்கு அருகில் உள்ள 'கஞ்சமலை' என்னும் ஊரில் ஒரு காலத்தில் ஆதி-பகவன் என்னும் பெயர் கொண்டோர் வாழ்ந்தனர். அவர்-களுக்குக் கபிலர், திருவள்ளுவர், அதியமான், ஔவை, உப்பை, வள்ளி, உறுவை என்ற பிள்ளைகள் எழுவர் பிறந்தனர். 'கரபுரநாதர் புராணம்' என்னும் புராணத்-தில் பதிவாகியிருக்கும் இச் செய்தி வழி, அதியமான் ஔவையின் அண்ணனாகக் குறிப்பிடப்பெற்றிருக்கிறார்.*
- *சேரமான் பெருமாள் நாயனார் கயிலாயம் செல்கையில் ஔவையார் விநாயகப் பெருமானுக்கு வழிபாடு செய்து கொண்டிருந்தாராம். அவ் வேளையில், விநாயகர்*

தம் துதிக்கையால் நாயனாருக்கு முன்பே அம்மையாரைக் கைலாயம் சேர்த்து விட்டார் என்ற இன்னொரு கதையும் வழங்கப்படுகிறது.

- கம்பரோடு வாதிட்டவர்; அவர் கவித்திறனை விமர்சித்தவர்; ஒட்டக்கூத்தரோடு பழகியவர் ஔவையார் என்ற வேறு கதைகளும் உள.

ஔவையார் கோயில்கள்

- சேலம் மாவட்டம், ஆத்தூர்ப் பகுதியிலும், மலைமீது கராங்காட்டுப் பகுதியிலும் அவ்வையார்க்குச் சிலைகள் உள்ளன. மும்முடி ஊரில் அவ்வை வரலாற்றுக் கதை இன்றும் வழங்கப்படுகிறது.

- ஆத்தூரில் கல்வராயன் மலையின் அடிவாரத்தில் அவ்வையார் கோயில் ஒன்று உளது.

- முல்லைவாடி என்ற காடு சார்ந்த இடத்தில் சிறு குன்று ஒன்று உளது. அதற்கு அவ்வையார் கரடு என்று பெயர். அக்குன்றின் மேல் ஒரு சிறு கோயில் வட்டக்-குடை போன்றுள்ளது. கல்லும் சிமெண்டும் கொண்டு கட்டப்பெற்ற கருப்பக் கிரகம் மட்டுமே உடைய சிறுகோயில், மூன்று படிகளைக் கொண்ட அச் சிறு-கோயிலில் அவ்வையாரம்மன் சிலை நின்ற கோலத்தில் உள்ளது. சிலையின் இடது கையில் ஏடு இருக்கின்றது. தலையில் கொண்டை உள்ளது. மஞ்சள் வண்ணப் புடைவை கட்டப்பட்டுள்ளது. கழுத்தில் மாலை அணிவிக்கப்-பட்டுள்ளது. செவ்வாயும் வெள்ளியும் பூசை; ஆடு, கோழி பலியிடப்படுவதில்லை. பூசாரி அவ்வூர் மக்களில் ஒருவர் (மேலது, ப. 306). ஊரில் கவுண்டர், படையாட்சி மக்கள் வாழ்கின்றனர். இந்த அவ்வையார் அவ்வூர் மக்களைக் காத்து வருவதாக மக்கள் நம்புகின்றனர்.

- அவ்வையார் மீது சத்தியம் செய்தால் அது உண்மையென்று நம்பப்படுகிறது. சத்தியத்திற்குக் கட்டுப்பட்டு நடக்கின்றனர் ஆத்தூர் மக்கள். பொய்யாக அவ்வையார் மீது சத்தியம் செய்தால் அத்தெய்வம் துன்பம் செய்யும் என்று எண்ணுகின்றனர் (மேலது, ப. 307).

- வியாபாரிகள் அவ்வையார் கரடுவில் வந்து சுமை இறக்கி வைத்துக் கீழே விழுந்து வணங்கி “வியாபாரம் நன்றாக நடக்கணும்” என்று வேண்டிக் கொள்கின்றனர்.

- பெண்கள் அக்கோவிலுக்கு அதிகம் வருவதில்லை. அதிலும் தீட்டுக் காலத்தில் வருவதே இல்லை.

- சேலம் மாவட்ட ஆத்தூரை அடுத்த வடசென்னிமலைப் பகுதியில் முருகன் கோயில் மலை மீது உள்ளது. அக்கோயிலின் படிக்கட்டுப் பகுதியில் முருகன் சிலையும் ஔவையார் சிலையும் உள்ளன. முருகனையும் ஔவையாரையும் வணங்கிச் சென்றால் குழந்தை இல்லாதோர்க்குக் குழந்தைப்பேறு வாய்க்கும்; திருமணம் கைகூடாது இருப்போர்க்குத் திருமணம் நடக்கும் என்ற நம்பிக்கைகள் உள்ளன.

- *சேலம் மாவட்டக் கல்வராயன் மலை மீது உள்ள கராங்காடு என்ற ஊர் உள்ளது. அவ்வூரில் ஔவையாருக்குக் கோயில் உள்ளது (மேலது, ப. 310). ஐம்பொன்-னால் செய்யப்பெற்ற சிலை. அமர்ந்த நிலையில் மூன்றடி உயரம் உடையது.*

- *இக்கோயிலில் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் பூசை. ஆடு, கோழி வெட்டு-வதில்லை. தேங்காய், வெற்றிலை, பழம், நெய்விளக்கு இவை முதன்மை பெறும் (மேலது, ப. 311).*

- *இக்கோயிலில் மக்கள் 'அவ்வையார் சத்தியம்' செய்தால் அதற்குக் கட்டுப்பட்டு நடப்பர். இன்றும் 'ஔவை வாக்கு' என்ற சொல்லை மக்கள் பயன்படுத்து-கின்றனர்.*

- *தஞ்சை மாவட்டத்தில் வேதாரண்யம் செல்லும் வழியில் திருத்துறைப்பூண்டி என்ற ஊரின் பக்கத்தில் துளசியாப்பட்டினம் என்ற இடத்தில் அவ்வையாருக்குக் கோயில் இன்றும் சிறப்புடன் விளங்குகிறது. ஔவையார் கோயிலுக்குப் பக்கத்-தில் முருகன், வள்ளி, தெய்வானையுடன் காட்சி தருகின்றனர் (மேலது, ப. 315). வயது முதிர்ந்த பெண்ணின் வடிவில் அமர்ந்த நிலையில் ஔவையார் சிலை காணப்படுகிறது.*

- *குற்றாலத்தில் அருவியின் மேலே மலைப்பாறையில் அவ்வையார் கோயில் உள்ளது. செண்பகாதேவி அம்மன் கோயில் அருகில் சிறு குகையில் அவ்வையார் சிலை காணப்படுகிறது.*

- *குமரி மாவட்டத்திலுள்ள நுழைவாயிலில் ஆரல்வாய்மொழி என்ற ஊர் உள்ளது. அவ்வூருக்குச் சற்றுக் கிழக்கே முப்பந்தல் என்ற ஊர் உள்ளது. இங்கே உள்ள முப்பந்தல் இசக்கி என்ற அம்மன் கோயிலில் வெளிப்பிரகாரத்தில் வலப்புறத்தில் அவ்வையார் தெய்வமாக வழிபடப்படுகிறார் (மேலது, ப. 321). இங்கும் அவ்வை-யாருக்கு ஆடு, சேவல் பலியிடப்படுவதில்லை. கொழுக்கட்டைப் படையல் இடப்-படுகிறது.*

- *குமரி மாவட்டம், தாழக்குடியின் பக்கத்தில் நெல்லி மடம் என்ற ஊரில் ஒரு கோயில் அவ்வையாருக்கு உள்ளது (மேலது, ப. 324). நின்ற கோலத்தில் அவ்வையார் சிலை இந்தக் கோயிலில் இடம்பெற்றுள்ளது. கொழுக்கட்டை உணவு படைக்கப்படு-கிறது.*

- *நாஞ்சில் நாட்டின் வடக்கே குர(ற)த்தியறை என்ற ஊர் உள்ளது. இங்கே உள்ள மலையின் ஒரு கற்பாறையில் அவ்வையார் சித்திரம் வரையப்பட்டுள்ளது. (மேலது, ப. 329). அவ்வூர் மக்கள் கூழும் கொழுக்கட்டையும் செவ்வாய்க்-கிழமைகளில் செய்து வழிபடுகின்றனர்.*

- *சங்கப் புலவரிலே கோயில் கொண்டவர் இவர் மட்டுமே ஆவர். சிவனைப் பாடியதால் காரைக்கால் அம்மையாருக்கும், நாரணன் நம்பியைப் பாடியதால் ஆண்டாளுக்கும் கோயில்கள் உள்ளன.*

“அவ்வையார் பெயரிலேயே தமிழகத்தில் கோயில்கள் இருப்பதும், அவர் பெயரிலேயே தனி வழிபாடு நிகழ்த்தப்பெறுவதும் வேறு எந்தப் புலவருக்கும் இல்லாத தனிச்சிறப்பு” என்கிறார் ம.பொ. சிவஞானம் (2001:78)2

சங்க காலத்து ஔவையார்

சங்க காலத்து ஔவையார், தமிழ் அறிந்தோர் யாவரையும் ஈர்த்த ஒரு நட்சத்திரப் பெண் கவிஞர். இதில் சந்தேகம் இல்லை. அதனாலே பின் வந்த கவிஞர் பலர், அவர் பெயரில் ‘பாட்டுகள்’ இயற்றி வெளியிட்டிருக்கின்றனர். கபிலர், பரணர் என்ற பெரும்புலவர்களை அடுத்துச் சங்க காலத்தில் பெருவாரியான கவிதைகளைப் படைத்தவர் ஔவையார் என்ற பெண்பாற் கவிஞரே ஆவர். அவர் பெயரில் காணப்-படும் சங்கக் கவிதைகள் மொத்தம் 59.3 அவற்றுள் அகத்திணைக்கு உரியவை 26; புறத்திணைக்கு உரியவை 33.

நாவல் கனி கேட்கும் அவ்வையார்

பிரிவு பற்றிப் பேசிய ஔவையார்

அகத்திணைகள் ஐந்து. அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்பன. இவற்றுள் பாலைத்திணையை ‘நடுநாயகம்’ என்பர். அகத்திணை ஐந்து இல்லை; அவை இரண்டேதாம் என்பர் ஒரு சிலர். அவையாவன: குறிஞ்சியும் அது தவிர்ந்த பிற

திணைகளும். குறிஞ்சித்திணை மட்டுமே கூடலும் கூடல் நிமித்தமும் பற்றிப் பேசு-கிறது. பிற எல்லாம் பிரிதலும் பிரிதலும் நிமித்தமும் பற்றிப் பேசுபவை. கூடலைப் பேசும் அகக் கவிதைகளைவிடப் பிரிதலைப் பேசும் அகக் கவிதைகள்தாம் மிகுதி. காம உணர்ச்சி, பிரிவுத்துயரம், தனிமை, ஏக்கம், இயலாமை, கழிவிரக்கம் இப்படி பலதரப்-பட்ட உணர்ச்சிகளுக்கு இடமளிப்பவை பாலைத்திணைக் கவிதைகள். ‘உள்ளுறை,’ ‘இறைச்சி’ என்ற தமிழ்க்கவிதை எடுத்துரைப்பு உத்திகள் பிரிவுக்கவிதைகளில்தாம் பெரிதும் இடம்பெறுகின்றன.

அனைத்து உயிரினங்களிடமும் காணப்படும் ஓர் அடிப்படை உள்ளுணர்வு (Basic Instinct) காமம். இது பற்றி ஆண்கள் வெளிப்படையாகப் பேசலாம். ஆனால் பெண்கள் பேசக்கூடாது என்பது எழுதப்படாத சமூக நியதி. இதை மறுதலிக்கும் விதத்தில் காமத்தை, குறிப்பாகக் காதலனின்/கணவனின் பிரிவுத்துயரத்தைப் பல அகத்திணைக் கவிதைகளில் வெளிப்படையாகப் பேசியவர் ஔவையார். அகநானூற்றிலும் குறுந்-தொகையிலும் இடம்பெற்றிருக்கும் அவர்தம் இரு கவிதைகளே இதற்குச் சான்று. தலைமகன் ஒருவன் களவுக்காலத்தில் ஏதோ ஒரு வினை காரணமாகத் காதலியைப் பிரிகிறான். குறித்த காலத்திற்குள் திரும்பி வரவில்லை. காலம் கடக்கிறது. அவனின் பிரிவு தலைவியைப் பெரிதும் வாட்டுகிறது. தனிமைத் துயரம் தாங்காது தவிக்கிறாள் அவள். அவளின் முலைகளுக்கு இடையே பசலை படர்கிறது. அவளை அவன் கை-விட்டுவிட்டான் என ஊரார் கிசுகிசுக்கின்றனர். இதனால் நெஞ்சம் கலங்குகிறாள் தலைமகள். நாணமும் அவளைக் கைவிடுகிறது. உடலாலும் உள்ளத்தாலும் நொந்து நொடிந்திருக்கும் தலைவி தன் தோழியிடம் கையறு நிலையில் புலம்புகிறாள்.

புலம்புனிறு தீர்ந்த புதுவரல் அற்சிரம்
நலங்கவர் பசலை நலியவும் நந்துயர்
அறியார் கொல்லோ தாமே அறியினும்
நம்மனத் தன்ன மென்மை இன்மையின்
நம்முடை உலகம் உள்ளார் கொல்லோ
யாங்கென உணர்கோ யானே வீங்குபு
தலைவரம் பறியாத் தகைவரல் வாடையொடு
முலையிடைத் தோன்றிய நோய்வளர் இளமுளை
அசைவுடை நெஞ்சத் துயவுத்திரள் நீடி
ஊரோர் எடுத்த அம்பல் அஞ்சினை
ஆராக் காதல் அவிர்தளிர் பரப்பிப்
புலவர் புகழ்ந்த நாணில் பெருமரம்
நிலவரை எல்லாம் நிழற்றி
அலரம்பு ஊழ்ப்பவும் வாரா தோரே (அ.நா. 273)

“வாடைக் காற்றானது நாளுக்கு நாள் கூடிக்கொண்டே போவது போலவே, என் முலைகளுக்கிடையே தோன்றிய பசலை நோயும் நாளும் பெருகிப் படர்ந்துகொண்டே இருக்கிறது. ஊரார் தூற்றும் அம்பல் என்னும் முளையானது கிளை பரப்பி இப்போது மரமாக வளர்ந்துள்ளது. காதல் என்னும் ஒளியினையுடைய தளிர்களைப் பரப்பிக்

கொண்டதாகப் புலவர்கள் புகழ்ந்துரைத்த நாணமும் இல்லாது போன ஒரு பெருமர-மாகவும் அது ஆகிவிட்டது. நிலத்தின் எல்லை எங்கணுமே கவிழ்ந்து நிழல் பரப்பி, அலராகிய அரும்புகளைத் தோன்றச் செய்தும் விட்டது பசலை நோய். இந்த இக்-கட்டான சூழ்நிலையிலும் அவர் வரவில்லையே! நம் துயர் அவர் அறியாமல் இருக்கி-றாரா? அல்லது அறிந்தும் வாராமல் இருக்கிறாரா? நம் மனத்தின் மென்மை அவரிடம் இல்லையே! நாம் கையற்றுக் கலங்கியிருக்கும் உலகத்தை அவர் கொஞ்சமும் நினை-யாதிருக்கிறாரே! அய்யோ நான் என்னவென்று உணர்ந்து ஆற்றியிருப்பேன்?''

இவ்வாறு வாடைக் காலத்தில் பெண்களிடமும் காம உணர்வு தலைதூக்கி இருக்கும் என்பதை வெளிப்படையாகப் பதிவுசெய்திருக்கிறார் ஔவையார். தலை-மகனைத் தழுவப் பெறாததனால் தலைவியின் காமநோய் நாளுக்கு நாள் வளர்கிறது. முலைகளுக்கு இடையே பசலை நோய் படர்கிறது. இது ஒருபுறம் கிடக்க, தலைமகன் அவளை விட்டுப் பிரிந்துவிட்டான் என ஊரார் கிசுகிசுக்கின்றனர். இது முன்னே முளையாக இருந்தது, இப்போது கிளைகள் பல பரப்பி நிழல் தரும் ஒரு பெருமரமாக வளர்ந்திருக்கிறது என்ற உருவகப்படுத்துகிறார் ஔவையார்.

பெண்ணியவாதி ஔவையார்

பொருள் தேடல் காரணமாகத் தலைமகன் தன் மனைவியை விட்டுப் பிரிந்து சென்-றிருக்கிறான். காலம் கடக்கிறது. தனிமைத்துயரில் தவிக்கிறாள் தலைமகள். அவளின் காம நோய் தீவிரம் அடைகிறது. இது தெரியாது தென்றல் வேறு அவளைப் பாடாய்ப் படுத்துகிறது. தாங்காது தவிக்கிறாள் அவள். இது அறியாது, ஊர் மக்கள் இயல்பாக உறங்கிக் கொண்டிருக்கின்றனர். காதல் நோயில் தனியே தவியாய்த் தவிக்கும் தலை-மகளுக்கு ஊர் மேல் எரிச்சல். தாள முடியாத காமத்தீயில் தகிக்கும் அவளின் நிலையை மிகத் துல்லியமாகச் சித்திரிக்கிறார் ஔவையார்.

> மூட்டு வேன்கொல் தாக்கு வேன்கொல்
> ஓரேன் யானுமோர் பெற்றி மேலிட்டு
> ஆஅ ஒல்லெனக் கூவு வேன்கொல்
> அலமர லசைவளி அலைப்பவென்
> உயவுநோய் அறியாது துஞ்சும் ஊர்க்கே *(கு.தொ. 28)*

சங்க காலத்தில் இத்தகைய கூக்குரலை வேறு எந்தப் பெண்பாற் புலவரும் எழுப்ப-வில்லை என்பது குறிப்பிடத்தகுந்தது. காமத்தைப் பக்தி மொழியில் பேசிய ஆண்டா-ளும்கூட இவருக்குப் பின்னேதான். இரவு நேரத்தில் தலைமகன் பிரிவால் தனியே இருக்கும் திருமணமான பெண் தன் மனத்தில் பொங்கித் ததும்பும் காமத்தைத் தாங்க இயலாமல் ''சுவற்றில் முட்டுவேனோ, அதைக் கையால் தாக்குவேனோ, அல்லது உரத்த குரலெடுத்து ஆ! ஓ! எனக் கூவுவேனோ! என் செய்வேனோ தெரியவில்-லையே!'' எனத் தன் காதல்மனத்தின் தகிப்பை வெளிப்படுத்தியிருப்பது ஒரு தனிப்-பட்ட பெண்ணின் மொழியாகத் தெரியவில்லை. பாதிக்கப்பட்ட ஒட்டுமொத்த பெண் இனம் எதிர்கொள்ளும் தனிமையின் கூக்குரலாகவே புலப்படுகிறது. இந்த வகையில் 'ஔவையார்தான் முதல் தமிழ்ப்பெண்ணியவாதி' எனலாம்.

அதியமான் நெடுமான் அஞ்சி – ஔவையார் தோழமை

கடை ஏழு வள்ளல்களுள் ஒருவன் அதியமான் நெடுமான் அஞ்சி. இவன் தகடூர் என்னும் நிலப்பகுதியை ஆண்டவன். சங்க காலத்தில் தகடூர் கொங்கு மண்டலத்தில் இடம்பெற்றிருந்தது. தற்போதைய தருமபுரி என்னும் நகரமே அக் காலத்தில் தகடூர் என வழங்கப்பெற்றது.

குறுநில மன்னன் அதியமான் நெடுமான் அஞ்சிக்கும் பெண்பாற் கவிஞர் ஔவையாருக்கும் இடையே மிக நெருங்கிய தோழமை உறவு இருந்தது. மன்னர்களுக்கும் புலவர்களுக்கும் இடையே காலந்தோறும் நட்புறவு இருந்து வருகிறது. பாரி–கபிலர்; கோப்பெருஞ்சோழன்–பிசிராந்தையார் நட்பு சங்க காலத்தில் மிகவும் பேசப்பட்ட ஒன்று. இவர்களின் நட்பைவிடத் தனித்துவமானது நெடுமான் அஞ்சி–ஔவையார்தம் தோழமை. ஓர் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையேயான அவர்கள்தம் நட்பு மிகவும் உணர்வுவயப்பட்டது; தோழன்–தோழி, தந்தை–மகள் என்ற உறவுநிலைகளில் அமைந்தது. ஔவையாரின் கவிதைச்சொற்களைக் கட்டுடைத்து மறுவாசிப்பு செய்யும்போது இந்த உறவுநிலைகள் புலப்படுகின்றன.

பாரி மகளிர் அங்கவை, சங்கவையுடன் அவ்வையார்

அதியமானுக்காகவே வாழ்ந்த ஒரு புலவர் ஔவையார் மட்டுமே. அதிய-மானுக்கும் தொண்டைமானுக்கும் இடையே நிகழவிருந்த போரைத் தூதுவராகச் சென்று போர் நிகழாது பல உயிர்களைக் காத்தவர் ஔவையார் (பு.நா. 95).

வீரம் குறித்த சொல்லாடல்

சங்க காலத்தை ‘வீரயுகக் காலம்’ (கி.மு. 3000–கி.பி. 300) என்பர். நிலம் பொருட்டு மன்னர்களிடையே ஓயாமல் போர் நிகழ்ந்த காலம் சங்க காலம். “புறத்தில் நிலத்தைத் துய்ப்பதும், அகத்தில் பெண்ணுடலைத் துய்ப்பதும் ஆணுக்கானதாக முதன்மைப்-படுத்தப்பட்ட சங்க மரபில், புறத்திணைப் பாடல்கள் தனித்துவமானவை. இனக்குழு வாழ்க்கை சிதிலமடைந்து, வேந்தர்கள் உருவான காலகட்டத்தில் தமிழக நிலப்பரப்பு, போர்களின் மூலம் விரிவடைந்துகொண்டிருந்தது. குறுநில மன்னர்களின் ஆளுகைக்குட்பட்ட நிலமும் குடியும் சிதைக்கப்பட்ட நிலையில் வீரம் போற்றப் பட்டது. ஆணுக்கான புழங்குவெளி, புறத்தில் என்ற நிலையில், வீரத்தை முன்னிறுத்திய பேச்சினை உருவாக்கச் சங்கப் புறப்பாடல்கள் பெரிதும் பயன்பட்டுள்ளன” (முருகேசபாண்டியன் 2016: 79–80). அரிசில் கிழார், உறையூர் ஏணிச்சேரி, முடமோசியார், கபிலர், கழாத்தலையார், கோவூர்கிழார், பரணர், பெருஞ்-சித்திரனார், மாங்குடி மருதனார் என எண்ணற்ற ஆண்பாற் கவிஞர்கள் அக் காலத்து மன்னர்களின் வீரம், போர்மறம் குறித்து, உண்மையில் புளகாங்கிதத்துடன் ஏகத்துக்கும் புகழ்ந்து கவிதை யாத்துள்ளனர். ஆண் இனம் வல்லாற்றல் கொண்டது; வலிமை பாராட்டுவது. இந்த வகையில், ஆண்பாற் கவிஞர்கள் போர்மறம் குறித்துப் பாட்டுகள் கட்டியதில் வியப்பொன்றும் இல்லை. இனம் இனத்தோடுதானே சேரும். ஆயின், மெல்லியல்பு கொண்ட பெண்களும்கூட நீரையும் நிலத்தையும், மக்களையும் வீட்டுவிலங்குகளையும் அழித்தொழிக்கும் போர் என்னும் பொல்லாவினையைப் போற்றிப் புகழ்ந்திருப்பது புரிந்துகொள்ள முடியாததாக இருக்கிறது.

அள்ளூர் நன்முல்லையார், ஒக்கூர் மாசாத்தியார், காக்கை பாடினியார், காவற்-பெண்டு, குறமகள் இளவெயினியார், தாயங் கண்ணியார், நக்கண்ணையார், நெட்டி-மையார், பாரி மகளிர், பூதப்பாண்டியன் பெருங்கோப்பெண்டு, பெருங்கோழி நாய்கன் மகள் நக்கண்ணையார், பேய்மகள் இளவெயினியார், பொன்முடியார், மாறோக்கத்து நப்பசலையார், மாற்பித்தியார், வெண்ணி குயத்தியார், வெறிபாடிய காமக் கண்ணி-யார் உள்ளிட்ட ஒரு பெரிய பெண்கள்பட்டாளமே வீரத்தையும் போர்மறத்தையும் போற்றிப் பாட்டுகள் இயற்றியிருக்கின்றது. உலகில் வேறெந்த மொழியிலேனும் போர் குறித்து இந்த அளவிற்குப் பெண்பாற் கவிஞர்கள் சொல்லாடல் நிகழ்த்தி இருக்கின்றனரா என்பது தெரியவில்லை. இது ஆய்தற்குரியது.

புறம் பாடிய பெண்பாற்கவிஞர் கூட்டத்தில், ஔவையார் ஒரு தனித்த பெருங்-கவிஞர்; ஒரு பேராளுமை. ஆண்கவிஞர்களுக்கு நிகரான போர்மறம் பேசியவர். அவர் பெயரில் வெளியான புறக்கவிதைகள் ஒரு பெண்ணின் எழுத்தாக இருக்கலாம். ஆனால் ‘அவற்றில் ஒலித்திருப்பது என்னமோ ஆண்குரலே’ எனலாம். குறிப்பாக, அதியமான் நெடுமான் அஞ்சியின் போர்த்திறம் குறித்துப் பேசும்போது, அவர் எழுத்து-களில் வீரம் பீடுநடை போடுகிறது.

அக் காலத்தில் மன்னர்களிடையே மண்ணுக்காகப் பெரும்பூசல் இருந்தது. போர் நிகழ்த்துவதே அவர்களின் வாழ்வாக இருந்தது. நெடுமான் அஞ்சிக்கும் பகை மன்னர் பல பேர் இருந்தனர். அவர்களிடம் அச்சத்தை ஏற்படுத்திப் போரைத் தடுப்பது ஔவை-யாரின் நோக்கமாக இருந்தது. ஒப்பாரும் மிக்காரும் இல்லாத ஒரு பெரும்வீரனாக அதியமானைக் கண்ட ஔவையார், அவனின் வீரத்தை விவேகமுடன் பகைமன்னர் முன்னே பறைசாற்றுகிறார்.

களம்புகல் ஓம்புமின் தெவ்விர் போரெதிர்ந்து
எம்முளுள் உளனொரு பொருநன் வைகல்
எண்தேர் செய்யும் தச்சன்
திங்கள் வலித்த காலன் னோனே *(பு.நா. 87)*

"பகைவர்களே! போர்க்களம் சேர்வதைப் போற்றுங்கள். எதிர்த்துப் போரிடும் ஆற்றல் உள்ளவன் ஒருவன் எம்முள்ளும் ஒருவன் இருக்கின்றான். அவன் எத்தகையவன் எனில், ஒரு நாள் பொழுதில் எட்டுத்தேர்கள் உருவாக்கும் தச்சன், ஒரு மாதம் கூடி உரு-வாக்கிய தேர்க்காலைப் போன்ற அழகும் வலிமையும் கொண்ட தோள்களை-யுடையவன் அவன்!" என அதியமானின் பெருமிதம் பேசுகிறார் ஔவையார். வேறொரு புறநானூற்றுக் கவிதையிலேயும் (பு.நா. 90) அஞ்சியின் வீரம் பற்றிக் கிளக்கும் போது அவர் சொல்கிறார்: "மான் கூட்டத்தை ஒற்றையாக இருந்து தாக்கி அழிக்கும் மறப்புலி போன்றவன் அவன். காரிருளைக் கிழித்து மேல் எழுந்து வரும் சூரியன் போன்றவன் அவன். ஆற்றல் மிக்க காளை போன்றவன் அவன். வீராதி வீரர்களுக்குத் தலைவன் அவன். அவன் போர்க்களம் புகுந்தால் அவனை எதிர்க்கவல்லவர் எவருமில்லை." இச் சொற்கள் அதியமானின் வீரத்தை மெச்சிப் புகழ்வது ஒரு நிலை. எதிரி மன்னர்களை அச்சமூட்டி அதியமானுக்குப் பணிய வைப்பது மற்றொரு நிலை. இது ஔவையார் கவிதைகளில் காணப்படும் ஓர் எடுத்துரைப்பு உத்தி.

மாவீரம் செறிந்த கோமான் அதியமான் நெடுமான் அஞ்சி, அவனுக்கு ஒரு நாள் நீண்ட ஆயுளைத் தரும் அரும் நெல்லிக்கனி ஒன்று கிடைக்கிறது. அதைத் தான் உண்ணாமல், தான் பெரிதும் நேசிக்கும் ஔவையாருக்கு ஈத்துவக்கிறான். அவனின் தன்னலமற்ற ஈகைப்பண்பைப் பாராட்டும் ஔவையார், அவனைப் "பால்புரை பிறைநுதற் றொருவன் போல / மன்னுக பெரும நீயே" (பு.நா. 91) என வாழ்த்துகிறார். இந்த அடிகளிலிருந்து சில செய்திகள் நமக்குப் புலனாகின்றன. சாதல் நீங்க அதிய-மான் தனக்கு நெல்லிக்கனியை அளித்ததால், அதே நிலையில் அவனும் சிவபெருமான் போல என்றைக்கும் நிலைத்து வாழ வேண்டும் என வாழ்த்துகிறார் ஔவையார். பிறைநுதல் ஒருவன் எனக் குறிப்பிடப்பட்டதன்வழிச் சிவபெருமான் குறித்த புராணச் செய்திகள் சங்க காலத்திலேயே தமிழ்ச்சமூகத்தில் பரவியிருந்தன என்பதும் தெரிய வருகிறது. ஔவையார் சிவ வழிபாட்டாளாராக இருந்திருப்பார் என்ற குறிப்புச்-செய்தியும் புலப்படுகிறது.

போர்வீரனின் வீரமரணம்

காதலையும் வீரத்தையும் மனிதனின் இரு கண்களாகச் சித்திரிக்கின்றன சங்க இலக்-கியங்கள். நாட்டின் மண்ணைக் காக்க ஆண்பிள்ளைகளைப் பெற்றெடுப்பதே தலையாய கடன் எனத் தாய்மார்கள் வீரம் பேசினர். இதனாலே போலும் பெண்பிள்ளைகள் பற்றிய

சித்திரிப்பு சங்க இலக்கியங்களில் காணப்படவில்லை. போர்க்களத்தில் பகைவர்களோடு போராடி மடிகிறான் ஒரு வீரன். அவன் புற முதுகிட்டு மாண்டு போனான் என யாரோ கதைக்கின்றனர். போர்க்களத்திற்கு பதை-பதைப்போடு உடனே விரைகிறாள் அவன் தாய். வீழ்ந்திருக்கும் வீரனின் உடலைப் புரட்டிப் பார்க்கிறாள். அவன் மார்பிலே விழுப்புண் ஏற்றே வீரமரணம் அடைந்-திருக்கிறான் என்ற உண்மை தெளிவாகிறது அவளுக்கு. அதற்காக உண்மையிலே அகம் மகிழ்கிறாள். வற்றிய அவள் முலைகளிலே அவளையும் அறியாமல் பாலூறிச் சுரக்கிறது (பு.நா. 295).

“போர்க்களத்தில் ‘வீர மரணம்’ என்ற வீரப்புனைவு மூலம் பெண் பெருமைப்பட்டுக் கொள்ளலாம் என்பது புறம் சித்திரிக்க விழையும் குடும்ப உறவில் முக்கியமான செய்தி. மேலாதிக்கம் அல்லது நிலம் காரணமாக நடைபெறும் குருதி சிந்தும் அரசியலில் ஆணுடல்கள் தேவைப்படுகின்றன. பெற்ற குழந்தையின்மீது பாசம் வைத்திருக்கும் பெண்ணின் இயல்பைச் சிதைத்துவிட்டுப் புதிய வகைப்பட்ட பேச்சுகளைப் புறப்பாடல்கள் உருவாக்கிட விழைந்துள்ளன. இறந்த மகனுக்காக அழுது புலம்புவதைவிட, அவனின் வீரத்தினுக்காக மகிழ்வது மேலானது என்ற கருத்தியல் பெண் கவிஞர்களின் கவிதைகளிலும் வெளிப்பட்டுள்ளது” என மறுவாசிப்பு செய்திருக்கும் ந. முருகேச பாண்டியனின் கருத்துரை (மு.நூ., ப. 52) குறிப்பிடத்தக்கது.

வாழ்வின் இலக்கணம்

“தேடிச் சோறுநிதந் தின்று, பல சின்னஞ் சிறுகதைகள் பேசி, மனம் வாடித் துன்பமிகு உழன்று, பிறர் வாடப் பலசெயல்கள் செய்து, நரை கூடிக் கிழப்பருவம் எய்தி, கொடுங் கூற்றுக் கிரையெனப் பின்மாயும் வேடிக்கை மனித”ராய் (பாரதியார் 1976:131) பெரும்-பாலான மக்கள் மாண்டு மடிகின்றனர். ஆயின் ஒரு சிலரே அலையடிக்கும் கடலாக, அரவணைக்கும் தென்றலாக என்றும் இந்த நிலவுலகில் நற்பெயரோடு நிலை-பெறுகின்றனர். பொன்னையும் பொருளையும் சேர்த்து வைத்து, மண்ணையும் பெண்-ணையும் ஆண்டு அனுபவித்து மாண்டு மடிவது வாழ்க்கையாகாது. பிறக்கின்ற போதே இறக்கின்ற தேதி இருக்கின்றது என்பது நிஜம். அதனால் உயிரோடு இருக்கின்ற போதே, யாரும் தம்மிடம் இருக்கின்ற பொருளைத் தேவைப்படுவோர்க்குத் தானம் கொடுத்துப் பயன்மரமாய் வாழ வேண்டும். இதுவே வாழ்க்கையின் இலக்கணம். இது ஔவை கூறியது.

ஓயாமல் போர் செய்யும் வீரயுகக் காலத்தில், போர்க்களம் தவிர மன்னர்கள் எங்கும் வேறோரிடத்தில் சந்திப்பது வழக்கமில்லை. ஆயின் விதிவிலக்காக ஒரு முறை சேரமான் மாரிவெண்கோ, பாண்டியன் கானப்பேர் தந்த உக்கிரப் பெருவழுதி, சோழன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி என்ற மூவேந்தரும் ஓரிடத்தில் வேதியர் வளர்க்கும் வேள்வி காண ஒருங்கே கூடுகின்றனர். அவர்களை ஓரிடத்தில் ஒருங்கே கண்ட ஔவையார் பெரிதும் அகம் மகிழ்கிறார். நிறைந்த மனத்துடன் அவர்கள் என்றும் அப்படியே ஒரு தாய் வயிற்றுப்பிள்ளைகளாய் இருக்கவேண்டும் என விரும்புகிறார். அந்தச் சூழ்நிலையில் அவர் ‘பாடிய பாட்டு’ (இசைத்த கவிதை) மிகவும் மனங்கொளத்-தக்கதாய், வாழ்வின் இலக்கணத்தை வரையறை செய்வதாய், பார்ப்பார்க்கு அளிக்க வேண்டிய தானம் பற்றிப் பேசுவதாய் இருக்கிறது.

நாகத் தன்ன பாகார் மண்டிலம்
தமவே ஆயினும் தம்மொடு செல்ல
வேற்றோர் ஆயினும் நோற்றோர்க்கு ஒழியும்
ஏற்ற பார்ப்பார்க்கு ஈர்ங்கை நிறையப்
பூவும் பொன்னும் புனல்படச் சொரிந்து
பாசிழை மகளிர் பொலங்கலத் தேந்திய
நாரரி தேறல் மாந்தி மகிழ்சிறந்து
இரவலர்க்கு அருங்கலம் அருகாது வீசி
வாழ்தல் வேண்டுமிவண் வரைந்த வைகல்
வாழச் செய்த நல்வினை அல்லது
ஆழுங் காலைப் புணைபிறி தில்லை
ஒன்றுபுரிந் தடங்கிய இருபிறப் பாளர்
முத்தீப் புரையக் காண்தக இருந்த
கொற்ற வெண்குடைக் கொடித்தேர் வேந்திர்
யானறி அளவையோ இதுவே வானத்து
வயங்கித் தோன்றும் மீனினும் இம்மெனப்
பரந்தியங்கு மாமழை உறையினும்
உயர்ந்துமேந் தோன்றிப் பொலிகநும் நாளே *(பு.நா. 367)*

“வேந்தர்களே! எப்பேர்பட்ட வலிமை மிக்க மன்னனாயினும் வையக வாழ்வு முடிந்து வானுலகம் செல்லும் நாளில், அவன் நிலத்தை உடன் கொண்டு போக முடியாது. அது துறக்கம் போலவே அவனுக்கு இனிமையை நல்கியிருந்தாலும் பின்னர் ஒரு நாளில் அவனினும் வலிமை மிக்க பிறருக்கு, அவர்கள் அயலவர்களாகவே இருந்தாலும் சொந்தமாகும். அதனால், உயிரோடு இருக்கும் காலத்தில் ஈரக்கையுடன் இரந்து நிற்கும் பார்ப்பார்க்கு, பூவையுடன் பொன்னையும் நீருடன் வார்த்துத் தருக. பெண்கள் பொற்கலத்திலே ஏந்தித் தரும் கள்ளை உண்டு மகிழ்ந்து, வரும் இரவலர்க்கு அருங்-கலம் குறையாது வழங்கி வாழ்க! ஆராய்ந்து பார்க்கில், இவ் உலகில் உயிரோடு இருக்கும் காலம் வரையும் புகழுடம்புடன் இங்கு நிலைத்து வாழச் செய்யும் நல்வினை-கள் அல்லாமல் நாம் இந்த மண்ணை விட்டுப் போகும் நாளில் நமக்குப் புணையாவது வேறு எதுவும் இல்லை. தன் மனத்தை அடக்கி வென்ற இருபிறப்பாளர் வளர்க்கும் முத்தீயைக் கண்டவராக இங்கிருக்கும் கொற்ற வெண்குடைக் கொடித்தேர் வேந்தரே! யான் அறிந்தவரை வாழ்வின் இலக்கணம் இதுவேயாகும். வானத்து மீனினும், மேகங்களிலிருந்து வீழும் மாமழையின் துளிகளினும் நெடுநாள் நும் வாழ்நாள் பொலிகவே!”

இந்தக் கவிதைவழிப் பல செய்திகள் நமக்குத் தெரியவருகின்றன. சங்க காலத்திலேயே வேதம் நன்கு அறிந்த பார்ப்பார் இருந்தனர். இருபிறப்பாளர் எனக் குறிப்பிடப்பட்ட பார்ப்பாரால் வேள்வித்தீ (யாகம்) நடத்தப்பட்டது. தமிழ் மன்னர்கள் தீவளர்க்கும் யாகச்சடங்கில் பங்கேற்றனர்

பார்ப்பார் ஏழ்மையில் இருந்துள்ளனர். எனினும் உள்ளங்கையில் நீரைச் சொரிந்து அவர்களுக்கு பூவையும் பொன்னையும் தாரை வார்த்துக் கொடுக்கப் பட்டுள்ளது. சொர்க்கம் பற்றிய நம்பிக்கை இருந்துள்ளது.

ஆடவர் முதன்மை

தற்காலத்தில் மட்டுமில்லாமல் சங்க காலத்திலும் சமூகம் ஆணின் மேலாதிக்கத்தின் கீழேயே செயல்பட்டிருக்கிறது. ஆண்தலைமையை ஏற்றுக் கொண்டாடி இருக்கிறது. இது ஔவையாரின் கவிதை ஒன்றிலும் வெளிப்பட்டிருக்கிறது.

நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே *(பு.நா. 187)*

“ஆடவர் நல்லவராக விளங்கும் இடத்தில் நிலமும் நன்முறையில் விளங்கும் என்ற ஔவையாரின் கருத்து ஆண் பற்றிய மதிப்பீட்டை உருவாக்குகிறது. வன்முறையும் ஆதிக்கமும் மிக்க அரசியலை முன்னெடுத்துச் செல்லும் ஆண்களில் உலகம் பற்றிய ஔவையாரின் மதிப்பீடு இன்றைய காலகட்டத்துக்கும் பொருத்தமாக உள்ளது” (முருகேசபாண்டியன், மு.நூ., ப. 56). இங்கு ‘ஆடவர்’ என்ற சொல் எண்ணத்தக்கது. வெறுமனே ஆண்களைக் குறிக்கும் சொல்லில்லை. மாட்சிமை பொருந்திய ஆட்சியாளர்களாகிய மன்னர்களைக் குறிக்கும் சொல் ஆகும்.

கையறுநிலைப்பா

அதியமான் அஞ்சி நயவஞ்சமாகப் போர்க்களத்தில் மாண்டபோது ஔவையார் பாடிய இரங்கற்பாவுக்கு/கையறுநிலைப்பாவுக்கு ஈடு-இணை வேறொன்றைச் சொல்லுதற்கில்லை.

சிறியகள் பெறினே எமக்கீயும் மன்னே
பெரியகள் பெறினே
யாம்பாடத் தான்மகிழ்ந் துண்ணு மன்னே
சிறுசோற் றானும் நனிபல கலத்தன் மன்னே
பெருஞ்சோற் றானும் நனிபல கலத்தன் மன்னே
என்பொடு தடிபடு வழியெல்லாம் எமக்கீயும் மன்னே
அம்பொடு வேல்நுழை வழியெல்லாம் தானிற்கும் மன்னே
நரந்தம் நாறும் தன்கையால்
புலவுநாறும் என்தலை தைவரு மன்னே
அருந்தலை இரும்பாணர் அகன்மண்டைத் துளையுரீஇ
இரப்போர் கையுளும் போகிப்
புரப்போர் புன்கண் பாவை சோர
அஞ்சொல் நுண்தேர்ச்சிப் புலவர் நாவில்
சென்றுவீழ்ந் தன்று அவன்

அருநிறத்து இயங்கிய வேலே
ஆசாகு எந்தை யாண்டுளன் கொல்லோ
இனிப் பாடுநரும் இல்லை பாடுநர்க்கொன்று ஈகுநரும் இல்லை
பனித்துறைப் பகன்றை நறைக்கொள் மாமலர்
சூடாது வைகியாங்குப் பிறர்க்கு ஒன்று
ஈயாது வீயும் உயிர்தவப் பலவே'' *(பு.நா. 235)*

''கள் குறைவாக இருந்தால் முதலில் எங்களுக்குத் தந்து விடுவான். அது நிறைய இருந்தால் நாங்களும் அவனும் ஒன்றாகக் குடித்து மகிழ்வோம். அப்போது நாங்கள் பாடுவதைக் குடித்துக்கொண்டே கேட்டு மகிழ்வான். பெரிய அளவுக்குச் சோறு இருந்தால் மிகப் பலரோடு அமர்ந்து விருந்து அயர்வான். எலும்போடு கூடிய ஊன் இறைச்சி உணவை எங்களுக்குத் தந்துவிட்டு, அவன் அம்பும் வேலும் விளையாடும் போர்க்களத்தில் நின்று, வீரம் விளைத்திருப்பான். நரந்த மலர் மணம் வீசும் தன்-னுடைய திருக்கையால் புலால் நாற்றம் வீசும் எங்கள் தலையைத் தடவிக் கொடுப்பான் எந்தை. பாடி வரும் பாணர்கூட்டம் பதைபதைக்க அவர் உண்கலம் உடைந்து சிதற, கையேந்தி வருவோர் கைகளையும் துளைத்துக்கொண்டு, பாணரை நம்பியிருக்கும், பசியால் வாடும் சுற்றத்தார் கண்ணொளி மழுங்கிச் சோர்ந்துவிழ, அழகிய சொற்களை ஆய்ந்து பாடவல்ல புலவர் நாவிலும் சென்று தைத்தது, அதியமான் நெடுமான் அஞ்சி-யின் மார்பில் தைத்த வேல். எங்கள் உயிர்த்துணையாகிய எம் தலைவன் எங்கிருக்கிறானோ? இனி உலகில் பாடிப் பரிசில் பெற வருவாரும் இல்லை. வருவோர்க்குத் தருவாரும் இல்லை. குளிர்ந்த நீர்நிலையில் பூத்த, தேன் நிறைந்த அழகிய பெரிய பகன்றைப் பூ எவராலும் சூடப்படாது வீணே வாடி வதங்கி அழிவதைப் போல, பிறர்க்கு உதவாது, ஒன்றும் தாராது மடியும் உயிர்களும் உலகில் நிறையவே இருக்கின்றனவே!''

ஒருவர்க்கு உதவாது, ஒன்றும் தாராது வாழ்கிற பலர் உலகில் இருக்கையில், எல்லோர்க்கும் எப்போதும் உதவி வாழும் வள்ளல் அதியமான் நெடுமான் அஞ்சி இறந்துவிட்டானே என்று ஔவையார் வருந்திப் பாடிய இக் கையறுநிலைப்பாவில் இடம்பெற்றிருக்கும் பல தொடர்கள் கற்போர் கவனத்தை ஈர்க்கின்றன. முரண் தொடர்களாக இடம்பெற்றிருக்கும் சிறியகள்–பெரியகள், சிறுசோறு–பெருஞ்சோறு, இரப்போர்–புரப்போர், நரந்தம்–புலால் நாற்றம் என்ற தொடர்கள் அதியமானின் சிறப்பினை விளக்கிடும் மொழியாக வெளிப்பட்டுள்ளன. இம் மொழியமைப்பு பெண்பாற் புலவரான ஔவையாரிடம் மட்டுமே காணப்படுகிறது என்கிறார் முருகேச- பாண்டியன் *(2016:91)*. மேலும் 'இந்தக் கவிதையில் ஏழு தொடர்கள் 'மன்னே' என முடிவதும் குறிப்பிடத்தகுந்தது. அவை அசைச்சொற்களாயினும் கற்போர் உள்ளங்-களைக் கலங்க வைப்பனவாக உள்ளன. இந்த எடுத்துரைப்பு உத்தி வேறு எந்தப் புலவர் கவிதையிலும் காண முடியாதது.

நரந்தம் நாறும் தன்கையால்
புலவு நாறும் என்தலை தைவரும் மன்னே

என ஔவையார் அதியமானைப் பற்றிக் குறிப்பிட்டுள்ள அடிகள் உடல்மொழி சார்ந்தவை. பொதுவாக ஆண்புலவர்கள் இனக்குழுத் தலைவர் அல்லது குறுநில மன்னருடன் ஆன உறவு, நட்பு பற்றி விவரிப்பது வழக்கம். மன்னன் புலவரின் தலையைத்

தடவிக்கொடுத்தான்என்றவிவரிப்புபெண்பாற்புலவரால்மட்டுமேவிவரிக்கக்கூடியதாகும். இவ்வகையில் ஔவையின் இக் கவிதை தனித்துவமானது' *(முருகேசபாண்டியன் 2016:92).* இதில் இடம்பெற்றிருக்கும் 'எந்தை' என்ற சொல் 'எம் தந்தை' *(Our Father)* என்ற நேரடிப்பொருளையும், 'தானைத் தலைவன்' *(Lord)* என்ற குறிப்புப்பொருளையும் நல்குவதாக இருக்கிறது. ஆக, எவ்வகையிலேனும் அதியமா-னோடு ஔவையார் கொண்டிருந்த உறவு உணர்ச்சிவயப்பட்டது என்பது வெளிப்-படை.

தனிப்பாடல்கள்

சங்கத் தொகை நூல்களில் இடம்பெற்ற ஔவையார் கவிதைகளைத் தமிழ் கற்றோர் மட்டுமே அறிந்திருந்தனர். இன்றைக்கும் நிலைமை இதுதான். ஆயின் அவர் பெயரில் நிலவும் தனிப்பாடல்கள் பட்டிதொட்டி எங்கும், படிப்பறிவு இல்லாப் பாமரர் வரை சென்று சேர்ந்திருக்கின்றன. காரணங்கள் பல. இவற்றுள் முக்கியமானது, தனிப்-பாடல்களில் பேசப்பட்ட விஷயங்கள் எல்லாம் எல்லோர்க்கும் நன்கு தெரிந்தவை. வெண்பாவில் இயற்றப்பட்டன என்றாலும் தனிப்பாடல்களின் மொழி என்னமோ மிகவும் எளிமையானது; இலகுவானது. இவற்றில் பல்லுடைக்கும் சொற்கள் இல்லை. இவற்றைப் புரிந்துகொள்ள இலக்கண அறிவு தேவையில்லை. அகராதிகளுக்கு அவசியமில்லை. ஔவையார் என்ற பெயரில் காணப்படும் தனிப்பாடல்கள் பல உலக உண்மைகளைப் பதிவுசெய்திருக்கின்றன. எடுத்துக்காட்டிற்கு இங்கு ஓரிரண்டைக் காண்போம்.

"கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு" என்கிறார் ஒரு தனிப்பாடலில் ஔவையார். இந்தத் தனிப்பாடலைப் புரிந்துகொள்ள அரிச்சுவடி அறிவுகூடத் தேவை-யில்லை. பேச்சுத்தமிழ் தெரிந்திருந்தாலே போதும். இதிலே பேசப்பட்ட பொருள் யாருக்கும் தெரிந்ததுதான்; தேவையானதுதான். எக்காலத்திலும் எல்லாவற்றையும் முழுதாகக் கற்றவர்கள் எங்கும் எவரும் இல்லை. ஏதொன்றையும் முற்றாகக் கற்றுத் துறை போகியவர்கள் 'ஆணவ மலம்' கொண்டிருக்கமாட்டார்கள். நிறைகுடங்கள் தளும்பவதில்லை. குறைகுடங்களில் உள்ள நீர்தான் குலுங்கும்; நிலத்தில் சிதறும். கல்வி கற்றலுக்கு முற்றுப்புள்ளி இல்லை. எப்போதும் காற்புள்ளி மட்டுமே. இது தமிழ்த்தாத்தா உ.வே. சாமிநாதையர்தம் கீழ்வரும் கூற்றாலேயேயும் உறுதிப்படுகிறது.

பழந்தமிழ் இலக்கியங்கள் பலவற்றை ஊர்கள் தோறும் தேடியலைந்து, இல்லங்களில் இருந்து பிரதிகளை எல்லாம் சரிபார்த்து, பதிப்பித்துத் தமிழ் கூறு நல்லுலகிற்கு மகத்தான தொண்டு செய்தவர் உ.வே.சா. அதனால்தான் நாம் அவரைத் 'தமிழ்த்தாத்தா' என்கிறோம். அவர்தம் மாபெரும் தொண்டைப் பாராட்டும் வகையில் சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் அவருக்கு ஒரு நாள் விழா எடுக்கப்பட்டது. தள்ளாடும் வயதில் விழாவிற்கு மெல்ல நடந்து வந்தார் அவர். மாணவர் ஒருவர் விழா அரங்கிற்கு அவரைக் கைத்தாங்கி அழைத்துச் சென்றார். விழா அரங்கைச் சேரப் படிகள் பல ஏற வேண்டியிருந்தன. அப்போது அந்த மாணவர் சொன்னார்: "தாத்தா படி. இன்னும் படி. மேலே படி." புன்முறுவலுடன் படிகள் ஏறினார். அரங்கில் அமர்ந்தார். விழாவில் தமிழைப் பழுதறக் கற்றோர் பலர் அவரின் கடும் உழைப்பை, போற்றத்தக்க பெருந்தமிழ்த் தொண்டை மெச்சிப் புகழ்ந்தனர். ஏற்புரையில் உ.வே.சா. சொன்னார்: "அன்பர்களே! என்னை

வெகுவாகப் பாராட்டி-னீர்கள். நான் கற்காத நூலே இல்லை என்றீர்கள். என்னைப் போல் தமிழுக்குத் தொண்டு செய்தோர் யாரும் இல்லை என்றீர்கள். ஆனால் உண்மை நிலைமை வேறு. பெரிதாக எதையும் நான் சாதிக்கவில்லை. இன்னும் நான் செய்யவேண்டியது எவ்வளவோ இருக்கின்றன. நான் கற்றது கைம்மண் அளவுகூட இல்லை. கற்க வேண்டிய நூல்கள் இன்னும் எவ்வளவோ இருக்கின்றன. இதை என்னைக் கைப்பிடித்து இங்கே அழைத்து வந்த மாணவன் சொன்னதிலிருந்து நான் புரிந்து கொண்டேன். படியேறி வரும்போது அவன் சொன்னான்: ''தாத்தா படி. இன்னும் படி. மேலே படி,'' ஆமாம், அந்த மாணவன் சொன்னது நூற்றுக்கு நூறு சரி. நான் மேலே படிக்க வேண்டிய நூல்கள், பரிசோதிக்க வேண்டிய நூல்கள், பதிப்பிக்க வேண்டிய நூல்கள், இன்னுமும் எத்தனையோ இருக்கின்றன'' என்றார். ஆம், இது உண்மையிலும் உண்மை. ''கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு'' *(மூதுரை 26)*. ஆம். இதுவும் ஔவை சொன்னதுதான்.

அதியமான் நெடுமான் அஞ்சியுடன் அவ்வையார்

கற்றோர் என்போர் ஏடுகளைக் கற்றவர் மட்டுமல்ல. ஏதொன்றைப் பற்றியும் தெரிந்து கொண்டவரும், சரியாகப் புரிந்துகொண்டவரும் கற்றவர்தாம். ஏட்டுக்கல்வி, தொழிற்கல்வி என இருவகைக் கல்விகள் உள. ஏட்டுக்கல்வி கூட்டுக்கு உதவாது. கல்வி கற்றவன் கர்வம் கொள்ளக்கூடாது; சுயம் பேசக்கூடாது. கல்வி கற்றவன் பண்பட்டவனாக இருக்கவேண்டும்; பண்பாளனாக இருக்கவேண்டும்; சான்றோனாகச் சிறக்கவேண்டும்.

சான்றோர் என்பவர் யார்? இதற்கு ஔவையார் தனிப்பாடல் ஒன்றிலே விடை காணலாம். ஒரு காலத்தில் சேரநாடு, சோழநாடு, பாண்டியநாடு என மூன்றாக இருந்தது தமிழ்நாடு. இப்போது சேரநாடு (கேரளா) தனிநாடாக இருக்கிறது. இதோடு 'தொண்டைநாடு' என்ற ஒன்றையும் சேர்த்துத்

தமிழ்நாடு நான்கு என்கிறார் ஔவையார். இந்த நான்கு நாடுகளின் சிறப்பைப் பட்டியலிடும் ஔவையார்,

வேழ முடைத்து மலைநாடு மேதக்க
சோழ வளநாடு சோறுடைத்துப் – பூழியர்கோன்
தென்னாடு முத்துடைத்துத் தெண்ணீர் வயற்றொண்டை
நன்னாடு சான்றோ ருடைத்து (தனிப்பாடல் 112)

என்கிறார். இந்தத் தனிப்பாடலில் மலைநாடு அதாவது சேரநாடு வேழம் உடைத்து = யானைகள் நிறைந்தது. சோழநாடு சோறுடைத்து = ஒரு காலத்தில் காவிரி கரை புரண்டு ஓடியதால் சோழ நாட்டின் வயல்கள் நெல் விளைச்சல் அமோகமாக இருந்தது. தென்னாடு முத்துடைத்து = மதுரையைத் தலைநகராகக் கொண்டிருந்த பாண்டிய நாட்டில் இருந்த தூத்துக்குடி துறைமுகம் முத்துக்குப் பெயர் பெற்றது. இவை எல்லாம் மிகச்சரி. நன்றாகவே பொருள் விளங்குகிறது. ஆனால், “தொண்டை நன்னாடு சான்றோர் உடைத்து” என்ற ஈற்றடியின் பொருள் தெளிவாக விளங்கவில்லை. இத் தொடர் ஒரு வகையில் விடுகதை போன்றது. இதன் பொருள் விடுவிக்க வேண்டி உள்ளது. தொண்டை நாடு எது? நன்னாடு என அது சொல்லப்பட்டது ஏன்? சான்றோர் யாவர்?

சேரன்

பக்தி இயக்க காலத்தில் பல்லவர்கள் ஆண்ட நிலப்பகுதிதான் ‘தொண்டை நாடு.’ காரைக்காலிலிருந்து வடக்கே கடலூர், சிதம்பரம், மாமல்லபுரம், காஞ்சிபுரம், ஸ்ரீபெரும்புதூர், மயிலாப்பூர், திருமழிசை, திருப்பதி, காளஹஸ்தி உள்ளிட்டு, நெல்லூர் வரை பரவியிருந்த நிலப்பகுதிதான் தொண்டை நாடு. தொண்டை என்ற சொல் ‘தொண்டர்’ என்ற சொல்லின் திரிபு. தொண்டர் யார்? அடுத்த வினா தொடர்கிறது. காரைக்கால் அம்மையார், திருநாவுக்கரசர், திருக்கண்ணப்ப நாயனார், சேக்கிழார், திருமழிசை ஆழ்வார், பேய் ஆழ்வார், பூத்தாழ்வார், பொய்கை ஆழ்வார், இராமானுஜர் உள்ளிட்ட சைவ-வைணவ அடியார்கள்தாம் தொண்டர்கள். இவர்கள் பிறந்து

வாழ்ந்த புண்ணிய பூமிதான் ‘தொண்டர் நாடு.’ இதுவேதான், பின்னர்த் ‘தொண்டை நாடு’ எனத் திரிந்தது. பக்தி இயக்க காலத்தில் சிவன்–திருமால் அடியார்களாகிய தொண்டர்-தாம் ‘சான்றோர்’.

சோழன்

‘சான்றோர்’ என்ற சொல் ஓர் அருஞ்சொல்; காலந்தோறும் வெவ்வேறு பொருள் தருவது. சங்க இலக்கியத்தில் இச் சொல் ‘மாவீர’ரைக் குறிக்கிறது; திருக்குறளில் ‘ஒழுக்கங்களில் சிறந்த விழுமியோரை’க் குறிக்கிறது; சிலப்பதிகாரத்தில் இது ‘நீதிஞ்சரை’க் குறிக்கிறது; கம்பராமாயணத்தில் ‘சங்கப் புலவர்களை’க் குறிக்கிறது; தற்காலத்தில் ‘கல்வி-கேள்வி-பதவி-பண்புகளில் சிறந்திருப்போரை’க் குறிக்கிறது; பக்தி இயக்க காலத்தில் ‘சைவ நாயன்மார்களையும், வைணவ ஆழ்வார்களையும்’ குறிக்-கிறது. ஆக, இவர்களின் அவதரிப்புக் காரணமாகவே தொண்டை நாடு - சேர, சோழ, பாண்டிய நாடுகள் மூன்றினையும்விடத் சிறந்தது ஆகிறது. அதனாலேதான் இந் நாட்டை ‘நன்னாடு’ என்கிறார் ஔவையார். இன்னொரு செய்தியும் இங்குக் குறிப்பிடத்தக்கது. யானை, சோறு, முத்து என்ற மூன்றும் அஃறிணைப் பொருள்கள். ‘சான்றோர்’ என்போர் உயர்திணை; மக்களில் உயர்ந்தோர். இப்படிப் பல பொருள்களை நல்குவதுதான் “தொண்டை நன்னாடு சான்றோ ருடைத்து” என்ற சொற்றொடர்.

‘சான்றோர்’ என்போரே வீடுபேறு பெறத் தகுதியானவர்கள். வீடுபேறு என்பது பிறவாப் பெருநிலை. பரிபாடல் நீங்கலாக, அகநானூறு, புறநானூறு உள்ளிட்ட சங்க இலக்கியங்கள், திருக்குறள், நாலடியார் உள்ளிட்ட நீதி நூல்கள் எல்லாம் அறம், பொருள், இன்பம் என்ற மூன்றை மட்டுமே முன்னிறுத்தின. அடிப்படையில் இவை எல்லாம் சமயச் சார்பில்லா நூல்கள். ஆதலால் அங்கே சமய நம்பிக்கைக்கு இடமில்லை. பக்தி இலக்கியங்கள்தாம் முக்தியைப் பேசின. எது அறம்? எது பொருள்? எது இன்பம்? எது வீடு? இந்த நான்கு வினாக்களுக்கும் ஒரே வெண்பாவிலே விடை தருகிறார் ஔவையார்.

ஈதல்அறம் தீவினைவிட்டு ஈட்டல்பொருள் எஞ்ஞான்றும்
காதல் இருவர் கருத் தொருமித்து – ஆதரவு
பட்டதே இன்பம் பரனைநினைத் திம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு *(தனிப்பாடல் 105)*

அருமை! என்னே சொற்சிக்கனம், பொருள் தெளிவு! ஔவையார் தனிப்பாடல்களின் தனித்த கூறுகள் இவை. சான்றுகள் ஏராளம் உள. எவை எல்லாம் ஒருவன் வாழ்விலே உரியவர்களோடு முடிந்துபோகும்? பதில் தருகிறார் ஔவையார்.

தாயோடு அறுசுவைபோம் தந்தையோடு கல்விபோம்
சேயோடு தான்பெற்ற செல்வம்போம் – ஆயவாழ்வு
உற்றார் உடன்போம் உடன்பிறப்பால் தோள்வலிபோம்
பொற்றாலி யோடெவையும் போம் *(தனிப்பாடல் 106)*

ஓர் ஆணை மையப்படுத்தி இயற்றப்பட்டது இந்த வெண்பா. பெற்ற தாய்தான் ஓர் ஆண்பிள்ளைக்கு முதன்மையானவள். அடுத்துத்தான் தந்தை. இவர்களை அடுத்து, பெற்றெடுத்த ஆண்பிள்ளை, உற்றார் உறவினர், உடன்பிறப்புகள் என்ற வரிசை நிலை. ஆயின் இடையிலே உறவானாலும் மனைவி ஒருவனுக்கு எல்லாமும் ஆகிறாள். இவள் மட்டுமே இறுதி வரை அவனின் இன்ப–துன்பங்களில் துணை நிற்க வல்லவள். இந்த உறவுகள் எல்லாம் ஒருவனுக்கு முன்னே மடிகிறபோது வாழ்க்கையில் குறிப்பிட்ட ஒன்றை அவன் இழக்கிறான். தாயைவிடச் சாலப் பரிந்து விதம்விதமாகச் சமைத்து உள்ளன்போடு உணவு படைப்பவர் எவருமில்லை. தந்தையால் மட்டுமே ஒருவனுக்கு உரிய கல்வி கிட்டும். பெற்ற பிள்ளைதான் ஒருவனுக்கு உண்மையான செல்வம். உற்றார் உறவினரோடு கூடி வாழ்வதே நல்வாழ்வு. அண்ணன்–தம்பியே இன்னல் உற்ற காலை பக்கத்துணையாவர். தாலி கட்டிய தாரம் மட்டுமே ஒருவனுக்கு எல்லாம். ‘போம்’ என்ற சொல் ‘போகும்’ என்பதன் திரிபு. இதை இடைக்குறை என்பர்.

வாழ்வு என்பது ஒருவன் வெறுமனே பிறந்து இறப்பது அல்ல. இடையில் ஒருவன் எப்படி வாழ்ந்தான் என்பதுதான் மிகவும் முக்கியம். ஒருவன் ஏழையாக இருக்கலாம். ஆனால் தன்மானத்துடன் வாழ வேண்டும் அவன். அப்படி ஒருவன் வாழ்வானேயா-னால் அது கோடிப்பணம் கொண்டதற்கு ஈடாகும். இது குறித்துப் பேசும் ஔவையார்,

மதியார் முற்றம் மதித்து ஒருகால் சென்று
  மிதியாமை கோடி பெறும்
உண்ணீர்உண் ணீரென் றுபசரியார் தம்மனையில்
  உண்ணாமை கோடி பெறும் *(தனிப்பாடல் 84)*

ஒரு நாள், ஒருத்தியின் கணவன் ஔவையாரை மிகவும் அன்போடு விருந்துண்ண அழைக்கிறான். ஒப்பிச் செல்கிறார் அவர். ஆனால் அன்பில்லாத அவன் மனைவி ஔவையாருக்கு வேண்டா வெறுப்புடன் உணவு பரிமாறுகிறாள். நெஞ்சுடைந்த ஔவையார் உணவுண்ணத் தயங்குகிறார். அப்போதைய தன் மன வேதனையை ஒரு வெண்பாவில் கீழ்வருமாறு இறக்கி வைக்கிறார்.

காணக்கண் கூசுதே கையெடுக்க நாணுதே
மாணொக்க வாய்திறக்க மாட்டாதே – வீணுக்கென்
என்பெல்லாம் பற்றி எரிகின்ற தையையோ
அன்பில்லாள் இட்ட அமுது (தனிப்பாடல் 54)

அக் கொடியவளோடு அவன் வாழ்வதைவிடத் தீயில் விழுந்து இறப்பதே நல்லது என்கிறார் ஔவையார் கீழ்வரும் வெண்பாவில்.

சண்டாளி சூர்ப்பநகை தாடகையைப் போல் வடிவு
கொண்டாளைப் பெண்டென்று கொண்டாயே – ஏதடா
செருப்படிதான் செல்லாஉன் செல்வமென்ன செல்வம்
நெருப்பிலே வீழ்ந்திடுதல் நேர் (தனிப்பாடல் 57)

தமிழ்க்கடவுள் முருகப்பெருமானுக்கும் ஔவையாருக்கும் இடையே வினா-விடை அமைப்பிலான சுவாரசியமிக்க உரையாடல்கள் நடந்தனவாய்க் கற்பிதப் பாட்டுகள் உள. அவற்றுள் சிலவற்றை இங்குக் காண்போம். ஔவையாரின் புலமையை உலகுக்கு உணர்த்த விரும்பிய முருகப்பெருமான் அம்மையாரிடம் "உலகில் கொடியது எது" என வினவுகிறார். ஔவையார் விடை தருகிறார்.

கொடியது கேட்கின் நெடியவெவ் வேலோய்!
கொடிது கொடிது வறுமை கொடிது
அதனினுங் கொடிது இளமையில் வறுமை
அதனினுங் கொடிது ஆற்றொணாக் கொடுநோய்
அதனினுங் கொடிது அன்பிலாப் பெண்டிர்
அதனினுங் கொடிது இன்புற
அவர்கையில் உண்பது தானே (தனிப்பாடல் 96)
"இனியது எது?," எனக் கேட்கிறான் முருகன்.
இனியது கேட்கில் தனிநெடு வேலோய்!
இனிதுஇனிது ஏகாந்தம் இனிது
அதனினும் இனிது ஆதியைத் தொழுதல்
அதனினும் இனிது அறிவினர்ச் சேர்தல்
அதனினும் இனிது அறிவுள் ளாரைக்
கனவிலும் நனவிலும் காண்பது தானே (தனிப்பாடல் 97)
என்கிறார் ஔவையார். அடுத்த கேள்வி, "எது பெரியது?"
பெரியது கேட்கின் எரிதவழ் வேலோய்!
பெரிது பெரிது புவனம் பெரிது
புவனமோ நான்முகன் படைப்பு
நான்முகன் கரியமால் உந்தியில் வந்தோன்
கரிய மாலோ அலைகடல் துயின்றோன்
அலைகடல் குறுமுனி அங்கையில் அடக்கம்
குறுமுனியோ கலசத்திற் பிறந்தோன்
கலசமோ புவியிற் சிறுமண்

புவியோ அரவினுக்கு ஒருதலைப் பாரம்
அரவோ உமையவள் சிறுவிரல் மோதிரம்
உமையோ இறைவர் பாகத் தொடுக்கம்
இறைவரோ தொண்டர் உள்ளத் தொடுக்கம்
தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே *(தனிப்பாடல் 98)*

என விடையளித்தார் ஔவையார். அதோடு விட்டானா முருகன்? இல்லை. "அரியது எது?," மேலும் ஒரு வினாக்கணை தொடுக்கிறான். அப்போது ஔவையார்,

அரியது கேட்கின் வரிவடி வேலோய்!
அரிதரிது மானிட ராதல் அரிது
மானிட ராயினுங் கூன்குருடு செவிடு
பேடு நீங்கிப் பிறத்தல் அரிது
பேடு நீங்கிப் பிறந்த காலையும்
ஞானமுங் கல்வியும் நயத்தல் அரிது
ஞானமுங் கல்வியும் நயந்த காலையும்
தானமுந் தவமுந் தான்செயல் அரிது
தானமுந் தவமுந் தான்செய்வா ராயின்
வானவர் நாடு வழிதிறந் திடுமே *(தனிப்பாடல் 99)*

என உறுதிப்பொருளை உடனே எடுத்துரைக்கிறார். இறுதியிலே இன்னொரு வினா முருகனிடமிருந்து, "பயனில்லாதது எது?"

மாடில்லான் வாழ்வு மதியில்லான் வாணிப(ம்)நல்
நாடில்லான் செங்கோல் நடாத்துவதுங் – கூடுங்
குருவில்லா வித்தைக் குணமில்லாப் பெண்டிர்
விருந்தில்லான் வீடும் விழல் *(தனிப்பாடல் 100)*

இது வரை சொன்ன வெண்பாக்கள் தனித்தனி எனினும் இவற்றுள் ஒரு செய்தி எவரோ ஓர் ஔவையாரின் சொந்த அனுபவமாக மீண்டும் மீண்டும் எதிரொலிப்பதை நாம் அவதானிக்கலாம். வீடு, வாசல், குடும்பம், குழந்தை என்ற ஏதுமில்லாத ஒரு சந்நியாசினியாக ஔவையார் வாழ்ந்திருப்பது இவ் வெண்பாக்கள் வழி வெளிச்சம் ஆகின்றது. அவர் உணவுண்ண சென்ற சில வீடுகளில் பெண்மணிகள் அவரைச் சரியாக உபசரிக்கவில்லை என்பது குறிப்பாகப் புலப்படுகிறது.

நீதி நூல்கள்

தனிப்பாடல்களில் ஔவையார் பலர் தம் சொந்த அனுபவங்களைப் பதிவுசெய்திருக்-கிறார்கள். இவற்றில் மனிதன் கடைப்பிடிக்க வேண்டிய அறக்கருத்துகள் இடம்-பெறவில்லை. இவற்றுக்கு மாறாக ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி, கல்வி ஒழுக்கம் என்ற நீதிநூல்களில் ஔவையார்கள் ஏறக்குறைய ஒரே நோக்கில் ஒரே போக்கில் அறம் போதித்திருக்கிறார்கள். இவற்றுள் ஆத்திசூடி, கொன்றை வேந்தன் என்பன 15-ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர்க் குறிப்பாகக் கிறித்துவப் பாதிரிமார்களின் வரவின் பாதிப்பால்

பாடப்பட்டவையாக இருக்கலாம் என்பர். "திண்ணைப் பள்ளிக்-கூட மாணவர்களுக்கு அறச்சிந்தனையை விதைக்க அவ்வையார் ஆத்திசூடியைப் படைத்திருக்கலாம்" என்கிறார் தாயம்மாள் *(மு.நூ., ப. 144).*

பாண்டியன்

அகரவரிசையில் அமைந்த ஒலிநயமிக்க அடிகள் நினைவில் நிறுத்த மிகவும் எளிதாக இருக்கின்றன. ஆத்திசூடியில் *109* அடிகளும் கொன்றை வேந்தனில் *91* அடிகளும் ஏறக்குறைய ஒரே செய்திகளைத்தாம் போதிக்கின்றன. சிறுவர் முதல் பெரியோர் வரை எவரையும் ஈர்க்கவல்லனவாய், பண்டைய நீதி நூல்களிலும் காப்பியங்களிலும் பரக்கப் பேசிய அறங்களை எல்லாம் ஒரே அடியில் சிறக்கப் பேசுகின்றன இச் சிறுநூல்கள். ஆத்திசூடி, கொன்றை வேந்தன் என்ற இரு நூல்களில் சொல்லப்பட்ட கருத்துகளே மூதுரை, நல்வழி, கல்வி ஒழுக்கம் என்ற நீதி நூல்களில் வெண்பா வடிவில் இடம்பெற்றிருக்கின்றன.

தெய்வ நம்பிக்கை, நல்லொழுக்கம் போற்றல், கல்வி கற்றல், பெற்றோர் நலம் பேணல், பெண்கள் கற்பில் நின்றொழுகல், உழவுத்தொழிலை ஏத்தல், உடல் நலம் காத்தல் எனப் பல பொருள்கள் குறித்து ஆத்திசூடியும் கொன்றை வேந்தனும் பிற நீதி நூல்களும் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கின்றன.

தெய்வ நம்பிக்கை

ஆத்திசூடி உள்ளிட்ட நீதி நூல்களைப் படைத்த ஔவையார் கடவுள் நம்பிக்கை உள்ளவர். "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" *(கொ.வே. 2);* "வையந்தோறும் தெய்வம் தொழு" (கொ.

வே. 88) என்கிறார். கடவுள் நம்பிக்கை இல்லையாயினும் எவரும் கடவுள் இல்லை என்று நிந்தனை செய்யக் கூடாது என்பது ஔவையார் தரும் எச்சரிக்கை. "தெய்வம் இகழேல்" (ஆ.சூ. 59) என எச்சரிக்கிறார். ஏனெனில், "தெய்வம் சீறின் கைதவம் மாளும்" (கொ.வே. 43) என்பது அவர் தரும் விளக்கம். இவ்வாறு பொதுவாகக் கடவுள் நம்பிக்கையை வலியுறுத்தும் ஔவையார், "சிவத்தைப் பேணின் தவத்திற்கு அழகு" (கொ.வே. 28), "சக்கர நெறியில் நில்" (ஆ.சூ. 42), "திருமாலுக்கு அடிமை செய்" (ஆ.சூ. 55) எனத் தெளிவாகவே சிவனை வழிபடு, திருமாலுக்குத் தொண்டனாக இரு என்று ஆணைகள் பிறப்பிக்கிறார்.

இந்த நிலையில், இந் நூல்களின் கடவுள் வாழ்த்துப்பகுதிகளில் சிவபெருமானும் அவன் மூத்தபிள்ளை எனச் சொல்லப்படும் விநாயகப் பெருமானுமே குறிப்பிடப்-பட்டிருப்பது எண்ணத்தகுந்தது.

ஆத்திசூடி அமர்ந்த தேவனை
ஏத்திஏத்தித் தொழுவோம் யாமே (ஆ.சூ.)
கொன்றை வேந்தன் செல்வன் அடியிணை
என்றும் ஏத்தித் தொழுவோம் யாமே (கொ.வே)
சிவாயநம என்று சிந்தித்து இருப்போர்க்கு
அபாயம் ஒரு நாளும் இல்லை உபாயம்
இதுவே மதியாகும் அல்லாத எல்லாம்
விதியே மதியாய் விடும் (நல்வழி 15)
வாக்கு உண்டாம் நல்ல மனம் உண்டாம் மாமலராள்
நோக்கு உண்டாம் மேனி நுடங்காது பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கையான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு (மூதுரை)
பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் இவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன் – கோலம் செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே! நீஎனக்குச்
சங்கத் தமிழ்மூன்றும் தா (நல்வழி 15)

இந்தக் கடவுள் வாழ்த்துகள்வழி, இந் நூல்களை இயற்றிய ஔவையார் ஒருவராகவே இருந்தாலும், அன்றிப் பலராகவே இருந்தாலும், அவர் யாவரும் சைவ மதத்தினரே என உறுதிபடக் கூறலாம்.

நல்லொழுக்கம்

மனிதன் ஆறறிவு கொண்டவன். "அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது" என்றார் (தனிப்பாடல் 99). மண்ணில் ஒருவன் நல்ல வண்ணம் வாழ்ந்தால் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுவான். ஒழுக்கம் என்பது ஒருவன் தன் சிறுவயதிலிருந்தே உருவாக்கிக் கொள்ளும் வாழ்வியல் நெறி. அவனுக்கும் அவன் இயங்கும் சமூகத்-திற்கும் அவன் கடைப்பிடிக்கும் ஒழுக்கம் நன்மை பயக்கும் எனில் அது நல்லொழுக்கம் எனப்படும். இடும்பைத் தரும் எந்நெறியும் தீயொழுக்கம்தான். அதனால்தான் ஔவையார், சமூக உயிரியான மனிதனை நோக்கி, "அறம் செய விரும்பு" (ஆ.சூ. 1) என்கிறார்; "ஆறுவது சினம்" (ஆ.சூ. 2) அதாவது

அடக்கப்படவேண்டியது கோபம் என்கிறார். தன்னால் இயலக்கூடியதை ஒருவர் மறுக்கக்கூடாது என்றவர், ஒருவர் இன்னொருவருக்கு ஏதும் கொடுப்பதைத் தடுக்கக்கூடாது என்கிறார். இவை அவர் மொழியில், "இயல்வது கரவேல்" (ஆ.சூ. 3), "ஈவது விலக்கேல்" (ஆ.சூ. 4) என ஆக்கம் காண்கின்றன.

உயிரினங்கள் யாவும் பொதுவாகத் தன்னலம் கொண்டவை. மனிதன் இவ் விஷயத்தில் மிகவும் மோசம். தன் பிழையிருப்பினும் நெஞ்சறிந்தே பிறர் மீது குறை சொல்பவன்; இழி சொல்லால் பழிப்பவன்; சூதும் வாதும் நினைப்பவன். பலர் வாட ஈனச் செயல்கள் புரிபவன். இவற்றின் இருப்பை நன்கறிந்த ஔவையார், ஓ மானிடா! "பழிப்பன பகரேல்" (ஆ.சூ. 75), "பிழைபடச் சொல்லேல்" (ஆ.சூ. 77), "வஞ்சகம் பேசேல்" (ஆ.சூ. 27), "ஔவியம் பேசேல்" (ஆ.சூ. 12), "கண்டு ஒன்று சொல்லேல்" (ஆ.சூ. 14), "கௌவை அகற்று (ஆ.சூ. 41) "கெடுப்பது ஒழி" (ஆ.சூ. 37), "புலையும் கொலையும் களவும் தவிர்" (கொ.வே. 63), "சூது விரும்பேல்" (ஆ.சூ. 47) என அறிவுறுத்துகிறார். ஏனென்றால், "சூதும் வாதும் வேதனை செய்யும்" (கொ.வே. 31), "ஔவியம் பேசுதல் ஆக்கத்திற்கு அழிவு" (கொ.வே. 12). அதனால், "மேன்மக்கள் சொற் கேள்" (ஆ.சூ. 95) என்கிறார். மொத்தத்தில் மனிதனைப் "பொல்லாங்கு என்பவை எல்லாம் தவிர்" (கொ.வே. 68), "உத்தமனாய் இரு" (ஆ.சூ. 102) என்கிறார்.

எல்லா உயிர்களுக்கும் வேண்டிய உணவும் செல்வமும் இயற்கையிடம் இருக்கத்தாம் செய்கின்றன. எனினும் தன்னலம் மிக்க மனிதனின் பேராசையால் இவை எல்லாம் ஒரு சிலரிடத்திலேயே தங்கி விடுகின்றன. இதனால் ஏழ்மை மிகப் பலரிடம். மனிதன் ஏதொன்றையும் எவரிடமும் "ஏற்பது இகழ்ச்சி" (ஆ.சூ. 8). ஆனால் அதற்காக எவரும் ஈகையைத் துறக்கக் கூடாது. இதை வலியுறுத்தும் விதமாக ஔவையார், "தானமது விரும்பு" (ஆ.சூ. 54), "ஒப்புரவு ஒழுகு" (ஆ.சூ. 10), "நன்றி மறவேல்" (ஆ.சூ. 21), "குணமது கைவிடேல்" (ஆ.சூ. 35) என அடுக்குஅடுக்காக எண்ணிறந்த அறிவுறுத்தல்களை ஆணைகளாகப் பிறப்பிக்கிறார்.

கல்விச் சிறப்பு

மனிதன் பெற்றிருக்கும் செல்வங்களுள் தலையாயது; என்றைக்கும் நிலையாயது கல்விச்செல்வம். "கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி" (கொ.வே. 22). கல்வி கற்க ஏற்ற பருவம் இளமைப்பருவம். வரவுகள் இன்றிச் செலவுகள் செய்து மகிழ்ந்-திருக்கும் பருவம் இதுவே. அதனால், ஏதொன்றையும் ஒருவன் "இளமையில் கல்" (ஆ.சூ. 29), "நூல் பல கல்" (ஆ.சூ. 71), "வித்தை விரும்பு" (ஆ.சூ. 101) என வலியுறுத்து-கிறார் ஔவையார். கல்வியின் இரு வகைகளான "எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" (கொ.வே. 7) என்பதால், "எண்ணெழுத்து இகழேல்" (ஆ.சூ. 7) என அறிவுறுத்து-கிறார் அவர். கல்வி என்பது எது பற்றியதாகவும் இருக்கலாம். ஆனால் அதைப் பழுதறக் கற்க வேண்டும். அப்படிக் கற்றோரைத்தாம் எவரும் மதிப்பர். இதைத் தான் ஔவையார் மூதுரையில்,

மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனின் கற்றோன் சிறப்புடையன் மன்னற்குத்
தன்தேசம் அல்லால் சிறப்பில்லை கற்றோர்க்குச்
சென்ற இடமெல்லாம் சிறப்பு (மூதுரை 26)
எனப் பதிவுசெய்திருக்கிறார்.

தாய்-தந்தை பேணல்

இக்காலத்தில் எத்தனையோ மத்திய, மேல்தட்டு வர்க்கத்தாரின் வயதான தாய்-தந்தையர் முதியோர் காப்பகங்களில் வாசம். பெற்றெடுத்த பிள்ளைகளிடம் பணம் இருக்கிறது. ஆனால் பலரிடம் அவர்களை உடன்வைத்துப் பேணவேண்டும் என்ற மனம் இல்லை. சற்று படித்துவிட்டாலே தாய்-தந்தையர்க்குத் தம்மைவிடப் பெரிதாக ஏதும் தெரியாது என்ற தப்பு எண்ணம் தஞ்சம் புகுந்திருக்கிறது. இத்தகைய காரணங்களால் ஔவையார் ஒரு சில நூற்றாண்டுகளுக்கு முன்பே, "தந்தை தாய் பேண்" (ஆ.சூ. 20) என்றார். காரணங்கள், "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" (கொ.வே. 1), "தாயின் சிறந்த ஒரு கோயிலும் இல்லை" (கொ.வே. 38), "தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை" (கொ.வே. 37). இவை யாவும் ஔவையார் வாக்குகள்.

இல்லறமே நல்லறம்

தனியே பிறக்கும் எந்த ஓர் ஆணும் பெண்ணும் தனியாகவே வாழப் பிறக்கவில்லை. அப்படி அவர்கள்தம் பெற்றோர் வாழ்ந்திருந்தால் இவர்கள் பிறந்திருக்க வாய்ப்பு இல்லை. ஆணும் பெண்ணும் முறையாகத் திருமணம் செய்து கொண்டு வாழ்வது வரவேற்புக்கு உரியது. ஒருத்தனுக்கு ஒருத்தி என வாழும் இல்லறப் பண்பாட்டின் காரணமாகத்தான் மேலை நாடுகளில் இந்தியாவுக்குத் தனி மதிப்பு. "இல்லறம் அல்லது நல்லறம் அன்று" (கொ.வே. 3) என்று என்றைக்கோ முன்மொழிந்தனர் எத்தனையோ தமிழ்ப் புலவோர் ஔவையார் உள்பட. இல்லறத்தில் ஓர் ஆணும் பெண்ணும் இணைகிறபோது அங்கே தன்னலம் காணாமல் போகிறது. அவனும் அவளும் அவராகின்றனர். விட்டுக் கொடுக்கின்றனர்; விருந்தோம்புகின்றனர்; பிள்ளைகள் பெறுகின்றனர்; பெருமிதம் கொள்கின்றனர். வாழ்க்கை பொருள் உடையதாகிறது. தனக்கு என வாழாமல் பிள்ளைகளுக்காக என வாழ்வதால் இல்லறம் உண்மை-யிலேயே நல்லறம்தான்.

இல்லாள்

அகம், புறம் என்ற இருவெளிகளில் அகத்துக்கு அதிபதி மனைவி. அவளே 'இல்லாள்' – இல்லத்தை ஆள்பவள். அந்தப் பெண்மணி, நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு கொண்-டிருக்க வேண்டும்; "ஒருவனைப் பற்றி ஓரகத்து இரு"க்க வேண்டும் (கொ.வே. 10), இல்லையெனில் "ஆள் இல்லா மங்கைக்கு அழகு பாழ்" (மூதுரை 3); கற்பு வழுவாது என்றும் கண்ணியம் காக்க வேண்டும்; வருகின்ற விருந்தினர் எவரானாலும் இன்-முகத்துடன் உபசரிக்க வேண்டும்; கணவனின் கருத்தறிந்து கடமையாற்றி வாழ வேண்டும்; கணவன் கல்லானாலும் புல்லானாலும் அவனையே கண் கண்ட தெய்வமாகத் தொழுது வாழ வேண்டும் – இப்படி எத்தனையோ நியதிகளை வகுத்திருக்கின்றனர் ஆண்தலைமை போற்றும் அனுபூதிகள்.

ப்ரம்மச்சர்யம், க்ரஹஸ்தம், வனப்ரஸ்தம், சந்யாசம் என்ற புருஷார்த்த சித்தாந்தத்தில் பெண்ணுக்குச் சிறிதும் இடமில்லை. ஆணை மையப்படுத்தியே பழைய நியதிகள் எல்லாம் கட்டமைக்கப்பட்டிருக்கின்றன. இந்தச் சட்டதிட்டங்களை ஔவையார் என்ற பெண்பாற் புலவர் எப்படி எதிர்கொண்டார் என்று பார்த்தால் ஏமாற்றம்தான் மிஞ்சுகிறது.

'தனிப்பாடல்களிலும் நீதிநூல்களிலும் அவர் பெயரில் காணப்படும் எழுத்துகளில் ஆண் குரலே உரத்து ஒலிக்கிறது.'

இல்லாள் அகத்திருக்க இல்லாதது ஒன்றில்லை *(மூதுரை 21)*
…… …… …… பெண்ணீர்மை
கற்பழியா ஆற்றால் கடல்சூழ்ந்த வையத்துள்
அற்புதம் ஆமென்றே அறி *(நல்வழி 16)*
…… …… …… பாழே
மடக்கொடி இல்லா மனை *(நல்வழி 24)*
பேதைமை என்பது மாதர்க்கு அணிநலம் *(கொ.வே. 66)*
உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கு அழகு *(கொ.வே. 5)*
காவல்தானே பாவையர்க்கு அழகு *(கொ.வே. 15)*
தூற்றும் பெண்டிர் கூற்று எனத் தகும் *(கொ.வே. 42)*
துடியாப் பெண்டிர் மடியில் நெருப்பு *(கொ.வே. 41)*
பழிக்கஞ்சாத் தாரத்தின் நன்று தனி *(ந.வ. 31)*
…… …… …… ……
இல்லாளும் இல்லாளே ஆமாயில் இல்லாள்
வலிகிடந்த மாற்றம் உரைக்குமேல் அவ்வில்
புலிகிடந்த தூறாய் விடும் *(மூதுரை 21)*
…… …… …… கூற்றமே
இல்லிற்கு இசைந்தொழுகாப் பெண் *(மூதுரை 27)*

இப்படி எத்தனையோ அடிகளில் ஔவையார் என்ற பெண்பாற் புலவர் பெண்களைக் கண்டனம் செய்திருப்பது பெரும் வியப்பாகவே இருக்கிறது. யாரோ ஓர் ஆண்பாற் புலவரே, தான் சார்ந்திருக்கும் ஆண்தலைமைச் சமுதாயத்தின் கருத்துக்களைப் பெண்-ணினத்திற்குரிய வரையறைகளாகக் கட்டமைத்திருக்கிறார் என உறுதிபடச் சொல்ல- லாம். ஔவையாரின் இவ் வாக்குகள் வெளிப்படையாகவே பெண்ணின் இருப்பை, இயங்குதளத்தை மறுக்கின்றன. இவற்றுக்கு எல்லாம் உச்சமாக, "தையல் சொல் கேளேல்" (ஆ.சூ. 61) அதாவது "பெண் பேச்சைக் கேட்காதீர்கள்" என ஆண்களுக்கு அறிவுறுத்தல் அல்ல ஆணையே பிறப்பிக்கிறார் ஔவையார்.

ஔவையார் பாட்டுகளிலே பெண்களுக்கான எதிர்ச்சொற்கள் இவ்வளவு இருக்க, இல்லற நெறியில் ஆணுக்கு என அவர் சொன்னவை யாவை என ஆய்ந்தால், மிகமிகச் சொற்பம். "மெல்லின நல்லாள் தோள் சேர்" (ஆ.சூ. 93), அதாவது ஆடவனை ஒரு மென்மையான பெண்ணொடு கூடி வாழ் என்கிறார். உலகில் மயக்கும் பெண்கள் உளராம். அதனால், அவனை "மைவிழியார்தம் மனை அகன்று ஒழுகு" (கொ.வே. 78) என்கிறார். ஏனென்றால், "பிறன்மனை புகாமை அறம் எனத் தகும்" (கொ.வே. 61) என்பதாலே. இவ்வளவுதாம் ஆணுக்கு என ஔவையார் சொன்னவை!

இறுதியிலே ஒரு சொல். ஏதொன்றுக்கும் ஒரே ஒரு பொருள் இல்லை; பல பொருள்கள் உள்ளன என்கிறது பின்-நவீனத்துவம். ஒரு மனிதனுக்கு வெளிமுகம் ஒன்றே என்றாலும்

உள்முகங்கள் பல இருக்கும் என்பது உண்மை. ஆக, பல காலகட்டங்களில் வாழ்ந்த புலவோர் பலர், ஔவையார் என்ற பெயரிலே இட்டுக் கட்டியிருக்கின்ற 'பாட்டுகள்' எல்லாம் ஒரு பொருள் குறித்தே பேசவில்லை; ஒரே குரலிலேயே பேசவில்லை. பேசியவை பல குரல்கள். இதனாலே ஔவையார் பாட்டுகளுக்குப் பன்முகங்கள்/பல குரல்கள்.

சான்றெண் விளக்கங்கள்

1. "அகரத்தின் பின் இகரமே யன்றி யகரமாகிய புள்ளி வந்தாலும், ஐயெனப்பட்ட நெட்டெழுத்தின் வடிவு பெறத் தோன்றும். எ-டு: ஐவனம் அய்வனம் என வரும். மெய் பெற என்றதனான் அகரத்தின் பின்னர் உகரமே யன்றி வகரப்புள்ளியும் ஔகாரம் போல வருமென்று கொள்க. ஔவை அவ்வை என வரும்" என விளக்கம் நல்குகிறார் நச்சினார்க்கினியர்.

2. (நச்சினார்க்கினியர் உரை, தொல்காப்பியம் - எழுத்ததிகாரம், பாகம் *1*, மதுரை தமிழ் இலக்கிய மின்தொகுப்புத் திட்டம், ப. *82)*

3. ம.பொ. சிவஞானம். *2001*. ஔவை யார்? சென்னை: இன்ப நிலையம். ப. *78)* (மேற்கோள்: தாயம்மாள் *2015: 136)*

4. அகத்திணைக் கவிதைகளுள் தலைவி கூற்றாக வெளிப்பட்ட கவிதைகளே மிகுதி. அவை மொத்தம் *16*. தோழி கூற்று *4;* பரத்தை கூற்று *2*, தலைவன் கூற்று *2*, செவிலி கூற்று *1*, கண்டோர் கூற்று *1.*

5. இவற்றுள் பாலை பற்றிய கவிதைகள் *9;* குறிஞ்சி பற்றிய கவிதைகள் *4;* முல்லை பற்றிய கவிதைகள் *5*. மருதம் பற்றிய கவிதைகள் *4*. நெய்தல் பற்றிய கவிதைகள்.

6. அகநானூறு *(4* கவிதைகள்*): 11, 147, 273, 303;* குறுந்தொகை *(15* கவிதைகள்*): 15, 23, 28, 29, 39, 43, 80, 91, 99, 102, 158, 183, 200, 364, 388;* நற்றிணை *(7* கவிதைகள்*): 129, 187, 295, 371, 381, 390, 394.*

7. புறநானூறு *(33* கவிதைகள்*): 87-104, 140, 187, 206, 231, 232, 235, 269, 286, 290, 295, 311, 315, 367, 390, 392.*

8. பாடாண் திணைக் கவிதைகள் *(12): 91, 92, 95-97, 101-103, 140, 367, 390, 392;* வாகைத்திணைக் கவிதைகள் *(7): 93, 94, 98-100, 104, 315;* தும்பைத்திணைக் கவிதைகள் *(6): 87-90, 295, 311;* வெட்சித்திணைக் கவிதைகள் *(2): 269;* கரந்தைத்திணைக் கவிதைகள் *(2): 286, 290;* பொதுவியல் கவிதைகள் *(4): 187, 231, 232, 235.*

பார்வை நூல்கள்

1. அறவாணன், முனைவர் தாயம்மாள். *2015*. அவ்வையார் படைப்புக் களஞ்சியம். சென்னை: தமிழ்க் கோட்டம்.

2. பாரதியார், சுப்பிரமணிய(ன்). *1976*. பாரதியார் கவிதைகள். சென்னை: பூம்புகார் பிரசுரம்.

3. முருகேசபாண்டியன், ந. *2016*. மறுவாசிப்பில் செவ்வியல் இலக்கியப் படைப்புகள். சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.

4. வரதராசன், மு. *1977*. மொழிநூல். சென்னை: திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.

5. இளம்பூரணர் (உ.ஆ.). *2010*. தொல்காப்பியம் (எழுத்து-சொல்-பொருள்): மூலமும் உரையும். சென்னை: சாரதா பதிப்பகம்.

6. நச்சினார்க்கினியர் (உ.ஆ.). *1944*. தொல்காப்பியம்: எழுத்ததிகாரம். சென்னை: திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.

7. --------------------- 1982. Tamil Lexicon, Vol. I, Part I. Chennai: University of Madras.

8. பிள்ளை, வையாபுரி (தொ.ஆ.). *1967 (2*ஆம் பதி.) சங்க இலக்கியம். சென்னை: பாரி நிலையம்.

9. கோவிந்தசாமி இராசகோபால், மேனாள் தமிழ்ப்பேராசிரியர், இந்திய மொழிகள் மற்றும் இலக்கியவியல் துறை, தில்லிப் பல்கலைக்கழகம், தில்லி–*110 007*

குறிச்சி ஆவணங்கள்

மு. நளினி, இரா. கலைக்கோவன்
டாக்டர் மா. இராசமாணிக்கனார் வரலாற்றாய்வு மையம், திருச்சிராப்பள்ளி

சிராப்பள்ளி மாவட்டம் மணச்சநல்லூர் வட்டத்திலுள்ள பழைமையான ஊர் திருப்பைஞ்ஞீலி. வாழையின் பெயருடன் விளங்கும் இவ்வூரில், பதிகம் பெற்ற 1400 ஆண்டு வயதுடைய பெருங்கோயில் 71 கல்வெட்டுகளுடன் வாழ்கிறது. உள்ளிருக்கும் இறைவன் நீலிவனப்பெருமாள். இறைவி நீள்நெடுங்கண்ணி.

இங்குள்ள பெரும்பாலான கல்வெட்டுகள் அழுத்தமான வரலாற்றுப் பதிவுகளைக் கொண்டுள்ளன. அவற்றுள், நான்கு ஆவணங்கள் அடுத்தடுத்து சோழநாட்டை ஆண்ட இரண்டு மன்னர்களின் ஆட்சிக்காலத்தில், ஓர் ஊர் கோயிலுக்கும் தனியர்களுக்குமாகப் பிரித்து விற்கப்பட்ட கதையைக் கூறுகின்றன. சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள வேறெந்தக் கோயிலிலும் இது போல் நான்கு விற்பனை ஆவணங்கள் பெற்ற ஓர் ஊர் காட்சியாகவில்லை.

'குறிச்சி' என்ற பின்னொட்டுடன் பதிவாகும் இந்த ஊரின் கதை பொதுக்காலம் 12ஆம் நூற்றாண்டின் இறுதியில் தொடங்குகிறது. திரிபுவனவீரதேவராக அறியப்படும் மூன்றாம் குலோத்துங்கசோழரின் ஆட்சிக்காலத்தில் அறிமுகமாகும் இக்குறிச்சியின் முழுப்பெயர் பிள்ளையாண்டான்குறிச்சி யான நானூற்றுவன்குறிச்சி. அக்குறிச்சியில் பிள்ளையார் கோயில் ஒன்று இருந்தது.

முதல் ஆவணம்

சிராப்பள்ளி முசிறிச் சாலையில் ஏறத்தாழ 11 கி. மீ. தொலைவில் திருவாசியை அடுத்துள்ள துடையூர் அக்காலத்தே பிராமணர் குடியிருப்பாக, 'தொடையூர்' என்ற பெயருடன் திகழ்ந்தது. அவ்வூரில் வாழ்ந்த சிங்கப்பிள்ளை செந்தாமரைக்கண்ணர், திருவரங்கச் செல்வனான செல்வநம்பி, திருவரங்கப் பெருமாளான திருவரங்கபட்டன் ஆகிய மூவருக்கும் அக்குறிச்சியில் புன்செய் நிலமிருந்தது.

பைஞ்ஞீலி இறைவனின் வழிபாட்டுக்கெனப் பூந்தோட்டம் அமைக்க விழைந்த கோயில் அலுவலர் காத்தானுக்கு, இம்மூவரும் குறிச்சியில் தங்கள் காணியாக இருந்த 1600 குழிப் புன்செய் நிலத்தை 400 நற்காசுகளுக்கு விற்றனர். இந்நிலத்துண்டு குறிச்சியிலிருந்த பிள்ளையார் கோயிலுக்கும் அக்கோயில் நடைமுறைகளுக்கென ஒதுக்கப்பட்டிருந்த இரண்டு மா அளவு நிலத்திற்கும் வடக்கில் இருந்தது. இதற்கான நிலவிலை ஆவணம் ஓலையாகவும் கோயிலில் கல்வெட்டாகவும் அமைந்தது.

இரண்டாம் ஆவணம்

மூன்றாம் குலோத்துங்கரின் மகனான மூன்றாம் இராஜராஜரின் ஆறாம் ஆட்சியாண்டில், அதாவது பொ. கா. 13ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில், நடைமுறைக்கு வந்த இரண்டாவது விற்பனை ஆவணத்தில் இவ்வூரின் பெயர் முன்பின்னாக மாறி நானூற்றுவன்குறிச்சியான பிள்ளையாண்டான்குறிச்சியாகப் பதிவாகியுள்ளது. அக்காலத்தில் தொடையூர் சபை உறுப்பினர்களாய் விளங்கிய திருவரங்கப் பெருமாள் சிங்கப்பிள்ளையான செந்தாமரைக்கண்ணர், மண்டலபுருஷனான சூரியதேவன், வீற்றிருந்தான் திருவாலப்பிள்ளையான திருவரங்கமாளி, சுந்தரத்தோளுடையானான சீராமன் ஆகிய நால்வரும் அவ்விற்பனையை நிகழ்த்தியுள்ளனர்.

சிராப்பள்ளி மாவட்டத்தைச் சேர்ந்த மற்றொரு பழம் பெரும் ஊரான தவத்துறை(இலால்குடி)க்கு அருகிலுள்ள நகர் எனும் சிற்றூரைச் சேர்ந்த கல்லன் சதிரனான மழைநாட்டு விழுப்பரையனுக்கு இக்குறிச்சி நிலம் 40 வேலி 10, 300 காசுக்கு இவர்களால் விற்கப்பட்டது. இந்நிலத்தைக் குறிக்கும் சபையின் விற்பனை ஆவணம், 'நானூற்றுவன்குறிச்சியான பிள்ளையாண்டான்குறிச்சி நத்தமும் நீர்நிலைக் குளமும் இக்குளத்தால் விளையும் நிலமும் இது சூழ்ந்த புன்செயும் நிலக்குடியும்' என்று விற்கப்பட்ட இடத்தின் வளம் குறிப்பதுடன், இப்பகுதியிலிருந்த பைஞ்ஞீலி இறைவனுக்கும் பிள்ளையாருக்கும் உரிமையுடைய நிலப்பரப்புகளைத் தவிர்த்தே இவ்விற்பனை நிகழ்ந்தமை கூறுகிறது. இவ்விற்பனை ஆவணத்தை எழுதியவர் அன்பிலைச் சேர்ந்த துடையூர் மத்தியஸ்தர். ஆவணத்தில் அரசு அலுவலர் விக்கிரமசோழ பிரும்மராயர் உள்ளிட்டவர், 'இப்படி அறிவேன்' என்று சான்றாளர்களாகக் கையெழுத்திட்டுள்ளனர்.

மூன்றாம் ஆவணம்

இப்பதிவின் தொடர்ச்சியாக உள்ள மூன்றாம் ஆவணம், இக்குறிச்சி நிலம் 40 வேலியை விலைக்குப் பெற்ற கல்லன் சதிரனை, பாண்டிய அரசர் முதலாம் மாறவர்மர் சுந்தரபாண்டியரின் மண்டல முதலிகளுள் ஒருவரான கேரளத்துக் காலடியைச் சேர்ந்த சங்கரன் மகனாகக் குறிப்பதுடன், கல்லன் சதிரன் இக்குறிச்சியில் தாம் வாங்கிய நிலத்தின் உரிமையை வாங்கிய விரைவில் கைமாற்றியதைப் பதிவுசெய்துள்ளது.

சதிரன் வாங்கிய 40 வேலியைப் பைஞ்ஞீலி இறைவன் பெயரில் அவருக்கான திருநாமத்துக்காணியாக்க விரும்பிய தொடையூர் சபையார், சதிரனிடம் சபை உறுப்பினர் நால்வர் பெற்ற விலைத்தொகையைத் திருப்பியளிக்கச் செய்து, சதிரனை அந்த 40 வேலியையும் இறைவனுக்கான திருநாமத்துக்காணியாக மாற்றித்தருமாறு வேண்ட, சதிரன் அதையேற்று, பெற்ற கையோடு நிலத்தை விற்ற கையருமாயினார். இப்படி வாங்கியவுடன் நிலம் விற்கப்படுதல் திரிவிட்டுத் தருதலாகவும் அதற்கான ஆவணம் திரிவுத்தீட்டாகவும் அழைக்கப்பெற்றன. வாங்கியவுடன் விற்கும் இந்தப் பாங்கைப் பைஞ்ஞீலியின் வேறு கல்வெட்டுகளிலும் காணமுடிகிறது.

நான்காம் ஆவணம்

நானூற்றுவன்குறிச்சி பற்றிய நான்காம் ஆவணம் மூன்றாம் இராஜராஜரின் 11ஆம் ஆட்சியாண்டில் அமைந்தது. அதில் விற்பனையாளர்களாக அறிமுகமாகும் மூவருமே தொடையூர் சபையின் உறுப்பினர்கள். அவர்களை, 'சபைக்குச் சமைந்த' என்றழைத்தே ஆவணம் அறிமுகப்படுத்துகிறது. அவர்களுள் இருவர், கல்லன் சதிரனுக்கு நிலம் விற்ற ஆவணத்திலும் விற்பனையாளர்களாக இடம்பெற்றுள்ளனர். மூன்றாமவர், திருவரங்கப்பெருமாளாள செந்தாமரைக்கண்ணராக அறியப்படுகிறார். கல்லன் சதிரனின் தந்தையும் பாண்டிய அரசரான முதலாம் மாறவர்மர் சுந்தரபாண்டியரின் மண்டல முதலிகளில் ஒருவருமான கேரளத்தைச் சேர்ந்த காலடி சங்கரன் அழகனான மழவராயரே இந்த ஆவணம் வழி இக்குறிச்சியில் 60 வேலி

நிலத்தை 6, 000 காசுக்கு வாங்கியவராகக் காட்சியாகிறார். கல்லன் சதிரனுக்கு விற்பனையான 40 வேலி நிலம், பைஞ்ஞீலி இறைவனுக்கும் பிள்ளையாருக்கும் உரிமையுடைய நிலப்பகுதிகள் ஆகியன தவிர்த்த நிலையிலேயே இந்த 60 வேலி நிலம் விற்பனையானதாக அறியமுடிகிறது.

நானூற்றுவன்குறிச்சியான பிள்ளையாண்டான்குறிச்சி யின் எல்லைகளாகக் கிழக்கில் மீசெங்கோடு, தெற்கில் பாண்டிகுலாசனிப்புரம், மேற்கில் நெல்வேலி, வடக்கில் பைஞ்ஞீலி ஆகிய ஊர்கள் இருந்தமையை இரண்டு ஆவணங்கள் படம்பிடிக்கின்றன. இந்த ஆவணத்தில் சான்றாளர்களாகத் தொடையூர் மத்தியஸ்தர் உய்யநின்றாடுவான் வாளவரிசன் கையெழுத்திட்டுள்ளார்.

நச்சினார்க்கினியனும் தற்குறிகளும்

இந்தக் குறிச்சி ஆவணங்களில் நம்மைக் கவர்வது நச்சினார்க்கினியன் என்ற அழகிய தமிழ்ப் பெயரும் அக்காலத்தே இப்பகுதியில் இருந்த பல ஊர்களின் பெயர்களுமாகும். கையெழுத்தாளர்களுள் சிலர் தற்குறிகளாக இருந்தமையால் எழுதத் தெரிந்த வேறு சிலர் அவர்களுக்காகக் கையெழுத்திட்டுள்ளனர். இப்படி மாற்றுக் கையெழுத்திட்டவர்கள், முன்னவர் 'சயிஞ்ஞாதன்மை' (தற்குறி) அதனால் இக்கையெழுத்து என்று தெளிவாகச் சுட்டியுள்ளனர்.

தொடையூர் சபை உறுப்பினர்கள் சிலரால் நானூற்றுவன் குறிச்சியான பிள்ளையாண்டான்குறிச்சி நிலம் நான்கு முறை விற்பனைக்கு ஆளாகியது. அந்நிலத்தொகுதிகளின் பெரும்பகுதியைத் தந்தையும் மகனுமான கேரளத்தவர்களே வாங்கியதையும் அவர்களுள் மகன், வாங்கிய கையோடு பைஞ்ஞீலிக் கோயிலுக்கு அதை உரிமை மாற்றம் செய்ததையும் வெளிச்சமிடும் இந்நான்கு ஆவணங்களும் பிற்சோழராட்சியின் இறுதிக் காலத்தே, இப்பகுதியில் நிலவிய சமூக, பொருளாதாரச் சூழல்களையும் கோயில் தொடர்ந்து நிலப்பற்றாளராகவே நீடித்ததையும் வெளிப்படுத்துவதோடு, அக்கால ஆவண நடைமுறைகளையும் கண்முன் வைக்கின்றன. காலம் காத்துத் தந்திருக்கும் இந்தக் குறிச்சி ஆவணங்கள் தமிழ்நாட்டின் வரலாற்றுக்குப் பைஞ்ஞீலிக் கோயிலின் கொடை என்றே சொல்லலாம்.

அறவியல் நோக்கில் வள்ளுவமும் மேகலையும்

முனைவர் ஜோதி எஸ். தேமொழி
செயலாளர், தமிழ்மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு, சான் பிரான்சிஸ்கோ,

முன்னுரை:

தமிழ் அறவியல் புலம் பரந்துபட்டது. மக்களுக்கு அறநெறி உரைக்க இந்திய மண்ணில் தோன்றிய சமயங்களையும், அயலகத்தில் தோன்றிய சமயங்களையும் தமிழ்மக்கள் ஏற்றுக்கொண்டார்கள் என்பதால் பல சமய நெறிகளுக்கு ஆற்றுப்படுத்தும் இலக்கிய நூல்கள் தமிழில் உண்டு என்ற சிறப்பிற்கு உரியது நம் தமிழ்மொழி. அத்துடன் சமயக் கோட்பாடுகளை விமர்சிக்கும் சித்தர் பாடல்களுக்கும் தமிழில் இடமுண்டு. இத்தகைய தமிழ் அறநெறிச் சிந்தனையின் வளமான மரபில், மணிமேகலை காப்பியமும் திருக்குறளும் இரண்டு பெரும் தூண்களாகத் திகழ்கின்றன. இவ்விரண்டு படைப்புகளும் அறம், ஒழுக்கம், வாழ்வியல் நெறிமுறைகள் குறித்த ஆழமான பார்வைகளை முன்வைத்தாலும், அவற்றின் தத்துவப்பின்னணிகள் வேறுபட்டவை.

பௌத்தம் கூறும் அறம்:

அறத்தின் மையம் மனிதம், இப்பூமியில் மனிதருக்கும் மனிதச் சமூகத்துக்கும் இடையே உள்ள உறவு அன்பு என்று உரைத்த பௌத்தம்; எண்ணத்தாலும், சொல்லாலும், செயலாலும் ஏனைய பிற உயிர்களுக்குத் தீங்கு இழைக்காமல், அவ்வுயிர்களின் துயர் களைவதே அறமாகும் என்று வரையறுத்தது. பௌத்தம் காட்டும் அறம் என்பது அன்பு, இரக்கம், அருள் ஆகிய பண்புகளின் செயல் வடிவம்.

வள்ளுவம் காட்டும் அறம்:

மக்களுக்கு அறவழி காட்ட வந்த வள்ளுவர், தன் அறவுரைகளைச் சமய எல்லைகளுக்குள் கட்டுப்படுத்தவில்லை. உலக உயிர்கள் எல்லாம் அறம் என்ற குடையின் கீழ் அமைபவை என்ற கொள்கையுடன் சமயங்களிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு உலகில் எவருக்கும் பொருந்தும் வண்ணம் அறவழி காட்டினார். சீத்தலைச்சாத்தனாரின் மணிமேகலை காப்பியம் முன்னிறுத்தும் பௌத்த அறநெறிக் கோட்பாடுகளையும், திருவள்ளுவர் போதிக்கும் உலகப் பொதுவான அறக் கருத்துக்களையும் ஒப்பிட்டு ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். தமிழ் அறநெறிச் சிந்தனையின் இருபெரும் கிளைகளின் ஒற்றுமை, வேற்றுமை மற்றும் அவை ஒன்றுக்கொன்று துணைநிற்கும் பாங்கினை வெளிக்கொணர்வதே இந்த ஆய்வின் மையமாகும்.

மணிமேகலை காப்பியம்:

ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்றான மணிமேகலை, பௌத்த அறிஞரான சீத்தலைச்சாத்தனாரால் இயற்றப்பட்டது. மணிமேகலை காப்பியம், சிலப்பதிகாரத்தின் தொடர்ச்சியாக அமைந்திருந்தாலும், அதன் தனித்துவம் பௌத்த மெய்யியலை மையமாகக் கொண்டிருப்பதில் அடங்கியுள்ளது. உலக இன்பங்களைத் துறந்து, கருணை வழியில் பயணிக்கும் மணிமேகலை என்ற கதைநாயகியின் வழியே, பௌத்தத்தின் அடிப்படைக் கோட்பாடுகளான அறம், இரக்கம், கொடை, துறவு, அருள், நிலையாமை ஆகியவற்றை இக்காப்பியம் அழுத்தமாகப் பேசுகிறது. குறிப்பாக, பசித்தவருக்கு உணவளிக்கும் அமுதசுரபி என்னும் பாத்திரம், பௌத்த அறத்தின் செயல் வடிவமாகவும் குறியீடாகவும் விளங்குகிறது. எனவே மணிமேகலை என்றால் அறம், அறிவு, துறவு ஒருங்கிணைந்த ஓர் உருவம்.

திருக்குறள்:

திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள், தமிழ் அறநெறி மரபில் ஒரு தனித்துவமான இடத்தைப் பெற்று, ‘உலகப் பொதுமறை’ என்று போற்றப்படுகிறது. எந்த ஒரு குறிப்பிட்ட சமயம், இனம் அல்லது காலச் சூழலுக்குள் தன்னை வரையறுத்துக் கொள்ளாமல், மானுடப் பொதுமைக்கான அறக் கோட்பாடுகளைத் திருக்குறள் முன்வைக்கிறது.

[அ] அற விழுமியங்களில் ஒற்றுமையும் வேற்றுமையும்

திருக்குறளின் உலகப் பொது நெறியும், மணிமேகலையின் பௌத்த மெய்யியலும் பல முக்கிய அற விழுமியங்களைப் பகிர்ந்து கொள்கின்றன. அன்பு, இரக்கம், நிலையாமை மற்றும் வினைப்பயன் போன்ற அடிப்படைக் கோட்பாடுகளில் காணப்படும் ஒற்றுமைகள், தமிழ் அறநெறிச் சிந்தனையின் ஆழமான பொது நீரோட்டத்தை வெளிப்படுத்துகின்றன. இந்த ஒப்பீட்டு ஆய்வில், திருக்குறளின் அறக்கருத்துக்கள், மணிமேகலையின் பௌத்த அறநெறிகளுடன் ஒத்திருக்கும் இடங்களிலும் நுட்பமாக வேறுபடும் இடங்களிலும் ஓர் ஒப்பீட்டு அளவுகோலாகப் பயன்படுத்தப்படுகின்றன. பௌத்த அறக் கருத்துக்களுக்கு இணையான அல்லது மாற்றான வள்ளுவரின் சிந்தனைகள், தமிழ் அறநெறி மரபின் பன்முகத்தன்மையை எடுத்துக்காட்டுகின்றன.

அறத்தின் ஆற்றல்: இரு நூல்களிலும் ‘அறம்’ என்ற கருத்தாக்கம்

மணிமேகலை மற்றும் திருக்குறள் ஆகிய இரு நூல்களுக்கும் ‘அறம்’ என்ற கருத்தாக்கமே மைய அச்சாக விளங்குகிறது. அறம் என்பது வெறும் நீதி அல்லது சட்ட விதிகளை மட்டும் குறிக்காமல், அது அடிப்படை வாழ்வியல் கொள்கையாகப் பார்க்கப்படுகிறது. இவ்விரு படைப்புகளும் அறத்தை வரையறுக்கும் விதத்தினை ஆராய்வது, அவற்றின் தத்துவ அடித்தளத்தைப் புரிந்துகொள்ள உதவுகிறது. பௌத்த மரபில் அறம் என்பது அன்பு, இரக்கம், அருள் ஆகிய மூன்றின் ஒருங்கிணைந்த வடிவமாகும். அறம் எங்கிருக்கிறதோ அங்கு அன்பு, இரக்கம் ஆகியன தாமாகவே குடிகொண்டுவிடும் என்பது பௌத்த அறத்தின் உள்ளடக்கம். அறம் என்பது விதிகளின் தொகுப்பு அல்ல; அது அனைத்து உயிர்கள் மீதும் காட்டப்படும் பேரன்பின் வழியே பற்றற்ற நிலையை அடைய உதவும் மெய்யியல் பாதையாகும்.

மணிமேகலையின் செயல்கள் துறவற வாழ்க்கை ஆகிய அனைத்தும் இந்தப் பேரறத்தின் அடிப்படையிலேயே கட்டமைக்கப்பட்டுள்ளன. மணிமேகலை அன்பை, அறத்தின் உள்ளார்ந்த வெளிப்பாடாகக் காண்கிறது. துறவறம், தவம் ஆகிய வழிகளைத் தேர்வு செய்து அறம் என்பதைச் செயல்படுத்துகிறது.

> "மேற்றே யுலகின் மெய்நெறி வாழ்க்கை
> மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
> உண்டி கொடுத்தோ ருயிர்கொடுத் தோரே"
> [மணிமேகலை - பாத்திரம் பெற்ற காதை: 94-96]

உலகத்தின் உண்மை நெறியாகிய வாழ்க்கை, இந்த நிலவுலகில் வாழ்வோர்க்கெல்லாம் உணவினை அளித்தோரே உயிர்கொடுத்தோராவர் என்கிறது மணிமேகலையின் பௌத்தம். "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்பதைச் சங்ககாலப் புலவரான குடபுலவியனார் பாடிய புறநானூற்றுப் பாடலும் (பாடல் எண் 18) கூறும் முறைமையால் இக்கருத்தாக்கம் தமிழ் மண்ணின் பண்பாகவும் இருந்ததை அறிய முடிகிறது.

மறுபுறம், திருக்குறள், அறத்தை உலகியல் வாழ்வோடு இணைத்து, ஒரு நடைமுறை ஒழுக்கக் கோவையாக முன்வைக்கிறது.

> "அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
> பிறன்பழிப்ப தில்லாயின் நன்று" (குறள்: 49)

அறம் என்று சிறப்பித்துச் சொல்லப்பட்டது இல்வாழ்க்கையே ஆகும் என்று இல்லறமே அறம் என்று வலியுறுத்துகிறார் வள்ளுவர். தொடர்ந்து;

> "பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
> தொகுத்தவற்றுள் எல்லாந் தலை (குறள்: 322)

இருப்பதைப் பகிர்ந்து உண்டு, பல உயிர்களையும் பாதுகாப்பது, நூல் எழுதியவர்கள் தொகுத்த அறங்களுள் எல்லாம் முதன்மையான அறமாகும் என்று கூறும் வள்ளுவர் மணிமேகலை காட்டிய பல்லுயிர் ஓம்புவது என்கிற தலையாய அறத்தை இல்லறம் வழிச் செயல்படுத்த அறிவுறுத்துகிறார் என்பதைக் காணமுடிகிறது. திருக்குறள் துறவறம், தவம் ஆகியவற்றை விவரித்தாலும், அறத்தை இல்லற வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய முதன்மைக் கடமையாக வரையறுக்கிறது.

அத்துடன் தீய குணங்களிலிருந்து விலகி இருப்பதே அறத்தின் அடிப்படை என்கிறார் அவர்:

> "அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
> இழுக்கா இயன்றது அறம். (குறள்: 35)

பொறாமை, பேராசை, சினம், கடுஞ்சொல் ஆகிய நான்கு தீய குணங்களையும் விலக்கி வாழ்வதே அறம் என்பது இதன் பொருள். எனவே, திருக்குறள் தீயவற்றை நீக்குவதே அறத்தின் இயல்பு என ஒரு வாழ்வியல் நெறியை வரையறுப்பதுடன், இல்லறம் போற்றி அனைவருக்கும் உதவ அறிவுரை கூறுகிறது.

[ஆ] பொதுவான அற விழுமியங்கள்: அன்பும் இரக்கமும் அருளும் நன்னெறிகளும்

அன்பு, இரக்கம், நிலையாமை மற்றும் வினைப்பயன் போன்ற அடிப்படைக் கோட்பாடுகளில் ஒத்துக் காணப்படும் திருக்குறளும் மணிமேகலையும் தமிழ் அறநெறிச் சிந்தனையின் ஆழமான பொது நீரோட்டத்தை வெளிப்படுத்துகின்றன.

"அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு. *(குறள்: 80)*

அன்பு நெஞ்சத்தின் வழியில் இயங்குவதே உயிருள்ள உடலாகும்; இல்லையேல், அது எலும்பைத் தோல் போர்த்திய வெறும் உடலேயாகும் என்பது இதன் பொருள். அத்துடன்,

"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு" *(குறள்: 72)*

அன்பு இல்லாதவர், எல்லாம் தமக்கே என உரிமை கொண்டாடுவர்; அன்பு உடையவரோ தம் உடல், பொருள், ஆவி ஆகிய அனைத்தும் பிறருக்கென எண்ணிச் செயல்படுபவர்கள் என்று அத்தகையவர்கள் பண்பையும் குறள் சுட்டுகிறது. குறளின் அதிகாரங்கள் பலவும், பௌத்தப் பஞ்சசீலக் கொள்கைகளான 1. கொல்லாமை, 2. கள்ளாமை, 3. காமத்தில் தவறாமை, 4.பொய்யாமை, 5. கள் உண்ணாமை ஆகிய ஐந்து நல்லொழுக்கக் கொள்கைகளையும்; அத்துடன் பௌத்தம் போதிக்கும் ஈகை, நிலையாமை, அவா அறுத்தல், அன்புடைமை, அருளுடைமை, ஒழுக்கமுடைமை, ஊழ் போன்ற நெறிகளையும் அதிகார அளவில் விளக்கும் குறட்பாக்களைக் கொண்டிருப்பதையும் காணமுடிகிறது. அத்துடன், திருக்குறள் முன்வைக்கும் 'ஒழுக்கம்' என்பது எந்தவொரு குறிப்பிட்ட சமயத்தையும் சாராத, மனிதர் அனைவருக்கும் பொதுவான ஒரு வாழ்வியல் நெறியாகும்.

"ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்" *(குறள்: 131)*

ஒழுக்கம் உயிரை விட மேலானது என்பது திருக்குறளின் துணிபு. திருக்குறளில் வலியுறுத்தப்படும் 'ஒழுக்கம்' என்பது மதம், இனம், மொழி கடந்து அனைத்து மனிதர்களுக்கும் பொருந்தக்கூடிய ஓர் உலகப் பொதுவான அறநெறியாகும்.

[இ] உயிர்கள் அனைத்தையும் சமமாகக் கருதுதலும் ஈகையும்

மணிமேகலையின் ஆபுத்திரன் கதை மக்களிடம் உயர்வு தாழ்வு பேசுவதை மறுப்பதற்கும், அனைத்து உயிர்களையும் கருணையுடன் போற்றவதை வலியுறுத்தவும் படைக்கப்பட்டுள்ள கதாபாத்திரம். பிறந்த பின் அனாதையாக விடப்படும் ஆபுத்திரன், பார்ப்பனர் வேள்வியில் உயிர்ப்பலியைத் தடுப்பவனாகவும், அமுதசுரபி உதவியுடன் வறியவர்களுக்கும், மாற்றுத்திறனாளிகளுக்கும் உணவளிக்கும் இரக்கமுள்ளவனாகவும் காட்டப்படுகிறான்.

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்" *(குறள்: 972)*

எல்லா மக்களும் பிறப்பால் சமமே; அவரவர் செய்யும் செயல் வேறுபாடுகளால் மட்டுமே பெருமை வரும் என்று கூறும் குறளும்;

> "அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
> உயிர்செகுத் துண்ணாமை நன்று" (குறள்: 259)

அவிகளைத் தீயில் போட்டு ஆயிரம் வேள்வி செய்வதைக் காட்டிலும் ஓர் உயிரைப் போக்கி அதன் உடம்பை உண்ணாமல் இருப்பது நல்லது என்று கூறும் குறளும்;

> "வறியார்க்கொன்று ஈவதே ஈகைமற் றெல்லாம்
> குறியெதிர்ப்பை நீர துடைத்து" (குறள்: 221)

வறியவர்க்கு ஒரு பொருளைக் கொடுப்பதே ஈகை எனப்படுவது, மற்றவர்க்குக் கொடுப்பதெல்லாம் பயன் எதிர்பார்த்துக் கொடுக்கும் தன்மை உடையது என்று கூறும் குறளும் அனைவரும் சமம், பிறப்பில் பேதமில்லை என்று கூறுகிறது.

மணிமேகலையின் அறவியல் கட்டமைப்பு, பௌத்தத்தின் தத்துவார்த்த இலக்கான 'நிப்பானம்' (நிர்வாணம்/முக்தி) என்ற வீடுபேற்றை அடைவதோடு பிரிக்கமுடியாதபடி பிணைக்கப்பட்டுள்ளது. மணிமேகலை கூறும் அறங்கள் அனைத்தும் பிறவித் துன்பச் சங்கிலியை அறுக்கும் கருவிகளாகும். இதற்கு மாறாக, திருக்குறள் ஓர் உலகப் பொதுவான, சமயச் சார்பற்ற அறவியல் அமைப்பை முன்வைக்கிறது. அதன் நோக்கம், இவ்வுலகில் ஒரு சீரான, இணக்கமான, அறம் சார்ந்த வாழ்வை வாழ்ந்து சிறப்படைவதே ஆகும்.

> "நல்லாறு எனினும் கொளல்தீது மேலுலகம்
> இல்லெனினும் ஈதலே நன்று" (குறள்: 222)

பிறரிடம் பொருள் பெற்றுக் கொள்ளுதல் நல்ல நெறி என்றாலும் கொள்ளல் தீமையானது, மேலுலகம் இல்லை என்றாலும் பிறருக்குக் கொடுப்பதே சிறந்தது. நன்னெறி என்பதற்காக மட்டுமே அறம் செய்தல் சிறப்பாகும். மாறாக; முக்தி அடைதல், மேலுலகம் அடைதல் போன்ற நோக்கில் இல்லாமல், அதை எதிர்பார்க்காமல், பலன் எதிர் பார்க்காமல், அறவிலை வணிகம் செய்யாமல் நன்னெறி என்பதற்காகவே தேவையானவருக்கு உதவ வேண்டும் என்கிறது. இவ்வகையில், எந்த ஓர் உயிருக்கும் தீங்கு செய்யாமை, பல்லுயிர் ஓம்புதல் என்ற கொள்கையில் இவ்விரு நூல்களும் மிக வலுவாக ஒன்றிணைகின்றன. இது இவ்விரு அறவியல் மரபுகளுக்கும் இடையேயான ஒரு முக்கிய ஒற்றுமைப் புள்ளியாகும்.

மணிமேகலை, ஈகையைத் துறவறத்தின் ஒரு கடமையாகச் சித்திரிக்கிறது. திருக்குறளோ, அதை ஒரு சமூக மற்றும் தனிமனித அறமாக, ஒரு செம்மையான இல்லற வாழ்வின் இன்றியமையாத அங்கமாகக் கருதுகிறது. திருக்குறள் ஈகையை இல்லறத்தாரின் தலையாய கடமைகளில் ஒன்றாகக் குறிப்பிடுகிறது. துறவறம் போற்றவும் இல்லற வாழ்வினர் மேற்கொள்ளும் ஈகை உதவுகிறது என்று காட்டுகிறது.

முடிவுரை:

திருக்குறள் மணிமேகலை ஆகிய இவ்விரு நூல்களிலும் அறம் அடித்தளமாக விளங்குவதையும், அவ்வறச்சிந்தனைகளை இருவேறு கோணங்களில், ஆனால் ஒரே

குறிக்கோள் நோக்கி வெளிப்படுத்துவதையும், இரு நூல்களும் அறம், அன்பு, அருள், கருணை, கொல்லாமை, நிலையாமை, ஊழ்வினை போன்ற அடிப்படைக் கோட்பாடுகளில் ஆழமான ஒற்றுமைகளைக் கொண்டுள்ளமையையும், அவை மானுட வாழ்வின் மேன்மைக்கு அறமே அடித்தளம் என்பதை ஒருமித்த குரலில் பறைசாற்றுகின்றன என்பதையும் இந்த ஒப்பீட்டு ஆய்வானது எடுத்துரைக்கிறது.

குறள் சொல்லும் சமயம் கடந்த பொது நன்னெறி கோட்பாடுகளை விளக்க, அவற்றைக் கதைவடிவில் மக்களிடம் கொண்டு செல்ல ஒரு புனைவு எழுதப்படுமானால், ஒரு பௌத்தப் படைப்பாளரின் கருத்துரிமை அடிப்படையில் உருவான காப்பியமாக, மணிமேகலையாக அது திகழ்கிறது எனலாம். "பொய்யில் புலவன் பொருள்உரை தேறாய்" (மணிமேகலை - 22; சிறைசெய் காதை) என்று சீத்தலைச் சாத்தனார் வள்ளுவரை மேற்கோள் காட்டும் வரிகள் மேகலை ஆசிரியருக்கு வள்ளுவம் கொடுத்த தாக்கத்திற்கும் சான்றாக அமைகிறது.

மணிமேகலையின் கதை வடிவ விளக்கமும், திருக்குறளின் கோட்பாட்டு விளக்கமும் ஒரே அறத்தின் இருவேறு வெளிப்பாடுகளாகும். ஆக, மணிமேகலை ஓர் ஆன்மீகத் தலைவியாக மட்டுமின்றி, சமூகச் சீர்திருத்தவாதியாகவும் திகழ்கிறாள். உலக இன்பங்களைத் துறந்து, ஞானத்தைத் தேடி, மனிதக்குலத்திற்குச் சேவை செய்வதற்காக அர்ப்பணிக்கப்பட்ட ஓர் ஆழமான ஆன்மீகப் பயணத்தை மேற்கொள்கிறாள்.

இருப்பினும், அவற்றில் நுட்பமான சில வேறுபாடுகளும் காணப்படுகின்றன. மணிமேகலை, பௌத்த மெய்யியலின்படி, பற்றுகளை அறுக்கும் துறவு நெறியை வீடுபேற்றுக்கான வழியாக முன்வைக்கிறது. மேலும், ஆன்மா குறித்த அதன் அனாத்மா பார்வை, இந்திய மெய்யியலின் பிற மரபுகளிலிருந்து தனித்து நிற்கிறது. மறுபுறம், திருக்குறள் இல்லறத்தை மையமாகக் கொண்ட ஓர் உலகப் பொது நெறியை வகுத்து, அன்றாட வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய அறங்களை வலியுறுத்துகிறது வையத்தில் வாழ்வாங்கு வாழ அறிவுறுத்துகிறது.

இறுதியாக, இந்த இரு பெரும் நெறிகளும் முரண்பட்டவை அல்ல, மாறாகத் தமிழ் அறநெறிச் சிந்தனையின் ஒருங்கிணைந்த பார்வையை வழங்கும் இருவேறு கிளைகள் என்பது நிறுவுகிறது. 'தமிழ் இலக்கியங்களில் பன்முகத்தன்மை' என்ற பார்வையில் மணிமேகலையில், அறம் என்பது ஆன்மிக விடுதலையை நோக்கிய ஒரு பயணம்; திருக்குறளிலோ, அறம் என்பதே மனிதராக வாழ்வதன் இலக்கணம். இந்த இரு பெரும் மரபுகளும் இணைந்து தமிழ் அறநெறிச் சிந்தனையை வளப்படுத்தி, உலகிற்கே வழிகாட்டும் ஒருங்கிணைந்த பார்வையை வழங்குகின்றன.

சான்றாதாரங்கள்:

1. ஔவை சு. துரைசாமிப் பிள்ளை (ஆசிரியர்), ந.மு. வேங்கடசாமிநாட்டார் (ஆசிரியர்). மணிமேகலை (மூலமும் உரையும்), கௌரா பதிப்பகம், சென்னை, 2019
2. வரதராஜன்.மு, திருக்குறள் உரை விளக்கம், திருவள்ளுவர் நிலையம், திருச்சி, 1954.

தமிழ் என்னும் பீனிக்ஸ் பறவை

அ.திவ்யகுமாரி கண்ணம்மா
ஐயை உலக தமிழ் மகளிர் மன்றம்.

தமிழ்நாட்டின் பல மேடைகளிலும், விவாதங்களிலும் இன்று ஒரு வரி மிகத் தவறாக மேற்கோள் காட்டப்பட்டு வருகிறது. அது, 'மெல்லத் தமிழினிச் சாகும்'. இந்தப் பாடலை பாடியது மகாகவி பாரதியார் என்பதால், அவரே தமிழைச் சபித்துவிட்டார் என்பது போலவும், தமிழின் எதிர்காலம் முடிந்துவிட்டது என்பது போலவும் ஒரு மாயை இங்கே பரப்பப்படுகிறது.

தமிழுக்காகவும், அதன் உயர்வுக்காகவும் தன் ஆயுள் முழுவதையும் அர்ப்பணித்த ஒரு கவிஞன், தன் தாய்மொழியைச் சாவச் சொல்வானா?

உண்மையில், பாரதி இந்த வரியைத் தன் கருத்தாகச் சொல்லவில்லை. மாறாக, ஆங்கில மோகத்தில் இருந்த ஒரு அதிகாரமிக்க அறிவற்றவன் தமிழை இழிவுபடுத்திச் சொன்னதைக் கேட்டு, கொதித்தெழுந்து பாடியதுதான் அந்தப் பாடல்.

பாரதியார் மீது சுமத்தப்பட்ட அந்த நூறாண்டு காலப் பழியைத் துடைக்கவும், அந்த வசைச் சொல்லுக்குப் பின்னால் இருக்கும் உண்மையான வரலாற்றுச் சம்பவத்தை காண்போம்.

பாரதி தமிழைச் சாகச் சொல்லவில்லை; சாகும் என்று சொன்னவனின் நாவடக்கத்தையே அவர் கேள்வி கேட்டார் என்பதே உண்மை!"

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழ் மொழி ஒரு திக்கற்ற நிலையில் இருந்தது. அன்று தமிழகத்தை ஆண்ட ஆங்கிலேய அரசு, தமிழை ஒரு 'Vernacular' (நாட்டுப்புற மொழி அல்லது கீழ்நிலை மொழி) என்றுதான் வகைப்படுத்தியிருந்தது.

படித்த தமிழர்கள் ஆங்கிலம் பேசுவதையே கௌரவமாகக் கருதினர். தமிழ்ப் புலவர்கள் வறுமையில் வாடினர்.

ஒருபுறம், தமிழ் மொழி தனித்து இயங்க முடியாது, அது சமஸ்கிருதத்திலிருந்து பிறந்தது (கிளை மொழி) என்று ஒரு சாரார் தீவிரமாக வாதிட்டனர். இதனால் தமிழின் தனித்தன்மை கேள்விக்குறியானது.

நவீன உலகிற்குத் தேவையான அறிவியல், புவியியல், மருத்துவம் போன்ற எந்தத் துறையிலும் தமிழில் புதிய நூல்கள் இல்லை. ஓலைச்சுவடிகளில் இருந்த பழைய இலக்கியங்கள் கூடப் பலருக்குத் தெரியாமல் கறையானுக்கு இறையாகிக் கொண்டிருந்தன.

இப்படித் தமிழ் மொழி தன் சொந்த மண்ணிலேயே அகதியாக இருந்த காலமது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில், சென்னை பச்சையப்பன் கல்லூரியின் முதல்வராக பணியாற்றியவர் ஜான் ரோலோ (*John Rollo*). சுமார் 27 ஆண்டுகள் அந்தப் பதவியில் இருந்தவர். ஒரு கல்லூரி ஆண்டு விழாவில் மாணவர்களிடையே உரையாற்றும்போது மிகக் கொச்சையாக ஒரு கருத்தை முன்வைத்தார்:

"Tamil is a dying language. It is a dead language of the future."

தமிழ் ஒரு சாகின்ற மொழி. எதிர்காலத்தில் அது ஒரு இறந்த மொழியாகவே கருதப்படும்.

நவீன கால மாற்றங்களுக்குத் தமிழ் ஈடுகொடுக்காது என்றும், அதனால் அது லத்தீன் போல வழக்கொழிந்துவிடும் என்றும் அவர் கணித்தார். ஒரு புகழ்பெற்ற கல்லூரியின் முதல்வரே இவ்வாறு பேசியது, அன்றைய படித்த வர்க்கத்தினரிடையே "ரோலோ சொன்னது சரிதான் போல" என்ற தாழ்வு மனப்பான்மையை வளர்த்தது.

இந்தச் செய்தியை அறிந்த பாரதியார், தனது "தமிழ்" என்னும் கவிதையில் ரோலோவை ஒரு 'அறிவற்றவர்' என்ற பொருளில் "பேதை" என்று சாடினார்.

"ஒரு அன்னியன் வந்து என் தாயை (தமிழை)ச் சாவாய் என்று சொல்வதா?" என்று சீறினார். அந்தச் சீற்றத்தின் விளைவாகப் பிறந்ததே இந்தப் பாடல் வரிகள்:

''மெல்லத் தமிழினிச் சாகும் - அந்தப்
மேற்கு மொழிபெயர்த்தார் சொல்லும் மிசை"
"என்றந்தப் பேதை உரைத்தான் - ஆ!
இந்த வசை எனக்கெய்திட லாமோ?"

பாரதியார் ரோலோவின் பெயரை நேரடியாகக் குறிப்பிடாமல், அவரை "பேதை" (அறிவற்றவன்) என்று அழைத்தார். "மேற்கு மொழிபெயர்த்தார்" என்று மேற்கத்திய அதிகாரிகளைச் சுட்டிக்காட்டிய பாரதியார், "இந்த வசைச் சொல்லைக் கேட்டுக்கொண்டிருக்கும் நிலைக்குத் தமிழன் தள்ளப்பட்டுவிட்டானே" என்று வேதனைப்பட்டார்.

வெறும் கோபத்தோடு மட்டும் பாரதியார் நின்றுவிடவில்லை. ரோலோ போன்றவர்கள் ஏன் அப்படிச் சொல்கிறார்கள் என்பதையும் அவர் சிந்தித்தார்.

ரோலோவைத் திட்டுவதை விட, அந்த நிலைக்குத் தமிழைத் தள்ளிய தமிழர்களைத்தான் பாரதியார் அதிகமாகச் சாடினார். அவர் தனது கட்டுரைகளில் மூன்று முக்கியத் தரப்பினரைப் பட்டியலிடுகிறார்:

ஆங்கில மோகம் கொண்ட 'மேல்தட்டு' தமிழர்கள்: வீட்டில் மனைவியிடமும் குழந்தைகளிடமும் கூட ஆங்கிலத்தில் பேசி, தமிழைச் சாமான்ய மக்களின் மொழியாக (*Vernacular*) ஒதுக்கியவர்களைப் பாரதியார் கடுமையாகக் கண்டித்தார்.

பழைய பஞ்சாங்கப் பண்டிதர்கள் தமிழை வெறும் பக்திப் பாடல்களுக்கும், கடினமான இலக்கணங்களுக்கும் மட்டுமே பயன்படுத்தி, கால மாற்றத்திற்கு ஏற்ப மாற்றாதவர்களைச் சாடினார்.

மொழிபெயர்ப்புத் தட்டுப்பாடு "உலகில் புதிய கண்டுபிடிப்புகள் எவை நிகழ்ந்தாலும் அவை உடனுக்குடன் தமிழில் வரவேண்டும். அப்படி வராதவரை ரோலோ போன்றவர்கள் நம்மை இகழ்வது தொடரத்தான் செய்யும்" என்று எச்சரித்தார்.

தமிழர்களிடம் அறிவுச் செல்வங்கள் இல்லை என்பதுதான் ரோலோவின் துணிச்சலுக்குக் காரணம் என்பதை உணர்ந்து, தமிழை மீட்டெடுக்கப் பாரதியார் சில அதிரடிக் கட்டளைகளைப் பிறப்பித்தார்:

எட்டுத் திக்கும் செல்வீர் "வெறும் பழைய பெருமைகளைப் பேசிக் கொண்டிருக்காதீர்கள். எட்டுத் திக்கிலும் உள்ள அறிவுச் செல்வங்களைத் தமிழுக்குக் கொண்டு வாருங்கள்."

மொழிபெயர்ப்புத் தீவிரம்: "பிற நாட்டுச் சாத்திரங்கள் (Science) மற்றும் கலைகளைத் தமிழில் மொழிபெயர்க்க வேண்டும்."

செந்தமிழ் உயர்வு: அக்காலத்தில் ஒரு சாரார், "சமஸ்கிருதமே உயர்ந்த மொழி, தமிழ் அதிலிருந்து கிளைத்தது" என்று வாதிட்டனர். இதற்குப் பதிலடியாக பாரதியார் ஒரு நுட்பமான அணுகுமுறையைக் கையாண்டார்.

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" என்று பாடி, தமிழ் எதிலிருந்தும் வரவில்லை, அது தனித்துவமான தெய்வ மொழி என்பதை உலகுக்குப் பறைசாற்றினார்.

ரோலோவின் பேச்சு தமிழுக்கு ஒரு சாபமாக அமையாமல், ஒரு வரமாக அமைந்தது. அவர் "சாகும்" என்று சொன்ன பிறகுதான், பாரதியார் போன்றவர்கள் தமிழை நவீனப்படுத்தத் துடித்தனர்.

பாரதியார் தனது "சுதேசமித்திரன்" கட்டுரைகளில் (குறிப்பாக 'தனித்தமிழ்' கட்டுரையில்) சில முக்கியமான தீர்வுகளை முன்வைத்தார்:

- கல்வி முறை: "ஆங்கிலம் ஒரு மொழியாகக் கற்கப்படட்டும், ஆனால் பாடம் கற்பிக்கும் மொழி (Medium of Instruction) தமிழாகவே இருக்க வேண்டும். அப்போதுதான் சிந்தனை வளரும்" என்றார்.
- பத்திரிகை மொழி: பத்திரிகைகளில் மக்கள் பயன்படுத்தும் எளிய தமிழைப் பயன்படுத்த வேண்டும். அப்போதுதான் அறிவு சாமானியர்களிடம் சேரும் என்றார்.
- உலகத்தரம்: "பிற நாட்டுச் சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்" என்று கட்டளையிட்டார். ஷேக்ஸ்பியர் போன்ற உலக மகாகவிகளின் படைப்புகள் தமிழில் இல்லாததை ஒரு குறையாகவே கருதினார்.

அன்று "அறிவியல் மொழிப்பெயர்த்தல் தமிழில் இல்லை" என்ற குறையைத் தீர்க்க அரசு மற்றும் தனியார் அமைப்புகள் பெரும் முயற்சி எடுத்தன.

அறிவியல் தமிழ்: 1930-களில் இருந்தே 'கலைச்சொல் அகராதிகள்' உருவாகின. இன்று இயற்பியல், வேதியியல் முதல் விண்வெளி ஆராய்ச்சி வரை (Space Research) அனைத்துத் துறைகளுக்கும் நேரடித் தமிழ்ச் சொற்கள் உள்ளன.

ஆட்சி மொழி: 1950-களுக்குப் பிறகு தமிழக அரசின் ஆட்சி மொழியாகவும், பயிற்று மொழியாகவும் தமிழ் மாறியது. நீதிமன்றங்கள் மற்றும் நிர்வாகத்தில் தமிழ் கலைச்சொற்கள் நிலைபெற்றன.

பாரதியாரின் அந்த ஆவேசமான வரிகளுக்குப் பிறகு, தமிழகத்தில் ஒரு மிகப்பெரிய "மொழிச் வளர்ச்சி" ஏற்பட்டது. ஜான் ரோலோ போன்றவர்கள் தமிழை இகழ்ந்ததை ஒரு சவாலாக ஏற்றுக்கொண்டு, தமிழ் மொழியை மீட்டெடுக்க பல ஆளுமைகளை அயராது உழைத்தனர்.

ரோலோ "தமிழ் சாகப்போகும் மொழி" என்றார். அதற்குப் பதிலடி கொடுக்கும் விதமாக, உ.வே.சாமிநாதையர் அவர்கள் மண்ணுக்குள் புதைந்து கிடந்த தமிழின் பொக்கிஷங்களை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்தார்.கறையானுக்கு இரையாகிக் கொண்டிருந்த சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி போன்ற காப்பியங்களை ஓலைச்சுவடிகளில் இருந்து மீட்டு அச்சுக்குக் கொண்டு வந்தார்

"தமிழ் வெறும் பேச்சு மொழி அல்ல; இது இரண்டாயிரம் ஆண்டுக்கால செழுமையான இலக்கியங்களைக் கொண்ட மொழி" என்று உலகிற்கு நிரூபித்தார்.

தமிழைச் சமஸ்கிருதத்தின் கிளை மொழி என்று சொன்னவர்களுக்கு, மறைமலை அடிகள் 1916-ல் தொடங்கிய 'தனித்தமிழ் இயக்கம்' ஒரு பெரிய பலமாக அமைந்தது.

தன் பெயரான வேதாசலம் என்பதை 'மறைமலை' என்று மாற்றிக் கொண்டு, தமிழுக்கு ஒரு தனித்துவமான அடையாளத்தைக் கொடுத்தார்.

தமிழ் தனித்து இயங்கும் வல்லமை கொண்டது என்பதை மொழிவாரியாக நிரூபித்தார்.

ஆங்கிலமும் சமஸ்கிருதமும் கலந்தால்தான் தமிழ் வாழும் என்ற நிலையை மாற்றி, தூய தமிழுக்கு ஒரு கம்பீரத்தைக் கொடுத்தார்.

பாரதியாருக்குப் பிறகு தமிழை ஒரு இயக்கமாக மாற்றியது பாரதிதாசன் தான்.

"எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சத்தமிடு!"

"தமிழுக்கும் அமுதென்று பேர் - அந்தத் தமிழின்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்"

தமிழை இழிவுபடுத்தியவர்களை "செந்தமிழைச் சாகடித்த அந்தப் பேய்களைச் சாட வேண்டாமா?" என்ற தொனியில் பாடி, சாதாரண மக்களிடமும் தமிழ் உணர்வை ஒரு நெருப்பாகப் பரப்பினார்.

ரோலோவின் பேச்சுக்குப் பிறகு, பச்சையப்பன் கல்லூரியிலேயே பல மாற்றங்கள் நிகழ்ந்தன.

கா. நமச்சிவாய முதலியார் போன்ற அறிஞர்கள் கல்வித் துறையில் தமிழுக்கு முக்கியத்துவம் கொடுக்கச் செய்தனர். பாடப்புத்தகங்கள் தமிழில் எழுதப்பட்டன.

"தமிழ் படிக்கத் தகுதியற்ற மொழி" என்ற பிம்பம் உடைக்கப்பட்டு, அது ஒரு தகுதியான பாடமாக (Academic Subject) மாறியது.

திரு.வி.க போன்றவர்கள் இதழ்களில் எளிய தமிழில் எழுதத் தொடங்கினார்கள்.

"தமிழ் நடை" என்பது கடினமான பண்டிதர்களுக்கு மட்டுமே உரியது என்ற நிலையை மாற்றியவர்.

ஆங்கிலம் கலந்த மணிப்பிரவாள நடை ஒழிந்து, அழகான தமிழ் நடை உருவானது.

அரசியல் மேடைகளிலும், பொதுக் கூட்டங்களிலும் தமிழ் முழங்கத் தொடங்கியது. இது தமிழுக்கு ஒரு பெரும் மக்கள் செல்வாக்கைத் தேடித் தந்தது.

தமிழை உலக மொழிகளின் தாய் என்று நிரூபிப்பதையே தன் வாழ்நாள் லட்சியமாகக் கொண்டவர் தேவநேயப் பாவாணர் (மொழிஞாயிறு)

தமிழ் ஒரு தன்னாட்சி கொண்ட மொழி (Sovereign Language) என்பதை மொழியியல் ரீதியாக நிறுவினார். ரோலோ போன்ற ஐரோப்பியர்களுக்குத் தமிழின் வேர்ச்சொல் சிறப்பைத் தனது ஆராய்ச்சிகள் மூலம் பதிலடியாக வழங்கினார்.

தமிழ் இன்று வெறும் தமிழ்நாட்டோடு மட்டும் சுருங்கவில்லை.

- செம்மொழி அந்தஸ்து: 2004-ல் இந்திய அரசு தமிழை 'செம்மொழி' (Classical Language) என அறிவித்தது.
- புலம்பெயர் தமிழ்: சிங்கப்பூர், இலங்கை ஆகியவற்றின் அதிகாரப்பூர்வ மொழியாகவும், கனடா, ஆஸ்திரேலியா, லண்டன் போன்ற நாடுகளில் கல்வி மொழியாகவும் தமிழ் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- ஆராய்ச்சி: அமெரிக்காவின் ஹார்வர்டு பல்கலைக்கழகம் உள்ளிட்ட உலகப் புகழ் பெற்ற பல்கலைக்கழகங்களில் 'தமிழ் இருக்கைகள்' (Tamil Chair) அமைக்கப்பட்டுள்ளன.
- ஆரம்பத்தில் 'தமிழ் 99' (Tamil 99) விசைப்பலகை அரசு தரப்படுத்தியது. இன்று போனில் நாம் பயன்படுத்தும் Gboard (Google Keyboard) மூலம் தமிழ் குரல் தட்டச்சு (Voice Typing) வரை முன்னேறியுள்ளோம்.
- டச் மாடல் (Touch Interface): கையெழுத்து அங்கீகாரம் (Handwriting recognition) மூலம் திரையில் விரலால் எழுதினாலே அது எழுத்துக்களாக மாறும் வசதி இன்று தமிழில் உள்ளது.

J.C.Rollo, Principal, pachaiyappa's college, Maadras

- *AI மற்றும் தமிழ்: கூகுள் டிரான்ஸ்லேட் (Google Translate) முதல் சாட் ஜிபிடி போன்ற AI கருவிகள் வரை தமிழ் சரளமாகப் பேசுகிறது. தமிழ் மொழிக்கான தரவுத் தொகுப்புகள் (Datasets) இன்று பிரம்மாண்டமாக வளர்ந்துள்ளன.*
- *உலகிலேயே மிக அதிகமான தொலைக்காட்சிகள் மற்றும் டிஜிட்டல் ஊடகங்கள் (YouTube/Podcast) கொண்ட மொழிகளில் ஒன்றாகத் தமிழ் திகழ்கிறது*

ரோலோவின் அந்தப் பழைய பச்சையப்பன் கல்லூரியிலேயே இன்று தமிழ் வளர்ச்சித் துறை மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது என்பதும், அந்த மண்ணிலேயே ரோலோவின் கூற்று பொய்யாக்கப்பட்டது.

தமிழ் சாகும் என்று சொல்பவன் மூடன்; அதை வளர்க்காமல் இருப்பவன் துரோகி" என்ற கருத்தில் பாரதியார் தனது கட்டுரைகளைத் தொகுத்துவந்தார்.

ரோலோவின் அந்த அவதூறுதான், பாரதியாரை "வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி" என்று பாட வைத்தது. இன்று தமிழ் சாகவில்லை; மாறாக ரோலோ போன்றவர்களின் கணிப்புகள்தான் வரலாற்றில் புதைந்து போயின.

பீனிக்ஸ் பறவை சாம்பலில் இருந்து எழுவது போல, மேற்கத்தியவர்களால் மறைந்து போனதாகக் கருதப்பட்ட தமிழின் பெருமை எகிப்தின் மணல் பரப்பில் சிகை கொற்றனாக மீண்டும் உயிர்த்தெழுந்தது...

இறுதியில் நாம் ஒரு முக்கியமான உண்மையை உரக்கச் சொல்ல வேண்டியிருக்கிறது. இன்றும் பல மேடைப் பேச்சாளர்களும், இணையவாசிகளும் 'மெல்லத் தமிழினிச் சாகும்' என்ற வரியைப் பாரதியார் சொன்னதாகக் கூறி, அவர் தமிழைச் சபித்தது போன்ற ஒரு பிம்பத்தை உருவாக்கி வருகிறார்கள்.

ஆனால், பாரதியார் ஒருபோதும் அப்படிச் சொல்லவில்லை. மாறாக, ஜான் ரோலோ (John Rollo) சொன்ன அந்த வசைச் சொல்லை மேற்கோள் காட்டி, 'இப்படி ஒரு பேதை சொன்னானே... இந்த வசை எனக்கு வரலாமா?' என்று இரத்தம் கொதித்துப் பாடினார்.

'என்றந்தப் பேதை உரைத்தான் - ஆ!
இந்த வசை எனக்கெய்திட லாமோ?'

என்ற பாரதியின் அடுத்த வரியைப் படிக்காமல், முதல் வரியை மட்டும் பிடித்துக்கொண்டு அவர் மீது பழி போடுவது ஒரு வரலாற்றுத் துரோகம். பாரதி தமிழைச்சாவச் சொல்லவில்லை; சாகும் என்று சொன்னவனின் நாவடக்கத்தைத்தான் கேள்வி கேட்டார்.

எனவே, இனி எங்கேனும் யாராவது 'பாரதியார் மெல்லத் தமிழினிச் சாகும் என்று சொன்னார்' எனப் பதிவிட்டால், அவர்களுக்கு இந்த வரலாற்றைச் சுட்டிக்காட்டுங்கள்.

முசிரியும் நைலும்: சேர–எகிப்திய தொடர்புகள், சீசரியனின் தப்பித்தல் மற்றும் எகிப்து அரசர்களின் பள்ளத்தாக்கில் தமிழ்-பிராமி கல்வெட்டுகள்:

Bp Dr J இரவிக்குமார் ஸ்றீஃபன் G
நிறுவனர்,திராவிட மறுமலர்ச்சி மையம்

அறிமுகம்:

பழங்கால சேர நாடு — இன்றைய கேரளத்தை மையமாகக் கொண்டிருந்தது. ரோமர் ஆட்சிக் கால எகிப்துக்கும், சேரநாட்டுக்கும் இடையில் கி.மு. 1ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. ஆரம்ப நூற்றாண்டுகள் வரை நுட்பமான மற்றும் நேரடி வர்த்தக உறவு இருந்தது என்பதை தொல்லியல் கண்டுபிடிப்புகள் அதிகரித்த அளவில் உறுதிப்படுத்துகின்றன.

எகிப்தில் சேரர்களின் நாணயங்கள்:

சேரர் வம்சத்தின் வில்-அம்பு சின்னம் பொறிக்கப்பட்ட, கி.பி. 1–2ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த செப்பு நாணயம், 2007ஆம் ஆண்டு பெரெனிக்கே மற்றும் அதற்கு அருகிலுள்ள அன்றைய காலத்து ரோமப் படைத்தளம் டையோஸ் (முதல் படம் காண்க) ஆகிய இடங்களில் கண்டெடுக்கப்பட்டது. இது ரோமர்-எகிப்தில் இந்திய நாணயங்கள் பரவலாக பயன்படுத்தப்பட்டதற்கான அரிய மற்றும் வலுவான சான்றாகும்.

குசெயிர் அல்-காதிம் பகுதியில் நடைபெற்ற அகழாய்வுகளில் தமிழ் பெயர்கள் பொறிக்கப்பட்ட பானைச்சிதல்கள்(இரண்டாம் படம் காண்க) கண்டெடுக்கப்பட்டுள்ள. இது தென்னிந்தியர்கள் எகிப்தில் இருந்ததற்கான மேலும் ஒரு உறுதிப்படுத்தலாகும்[1].

கி.பி. 2ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு பப்பிரஸ் ஆவணம் — தற்போது வியன்னா அருங்காட்சியகத்தில் (மூன்றாம் படம் காண்க) பாதுகாக்கப்படுகிறது — ‘முசிரி’ (இன்றைய

கேரளத்தின் பட்டணம் /கொடுங்கல்லூர் என அடையாளம் காணப்பட்டுள்ளது) முசிரியிலிருந்து எகிப்துக்கு அனுப்பப்பட்ட சரக்குகளுக்கான கடல்சார் கடன் ஒப்பந்தம் அலெக்ஸாண்டிரிய வணிகருக்கும், முசிரியில் நிதியளிப்பவருக்கும் இடையே பதிவு செய்யப் பட்டதாகும். இந்த ஆவணம் இந்திய-மத்தியதரைக் கடல் வர்த்தகத்தின் நீண்ட தொடர்புகளையும், மேலும், சட்ட ரீதியான நுட்பத்தைக் காட்டுகிறது

முந்தைய தொடர்புகள் - சாலமோனிலிருந்து ரோமர் உலகம் வரை:

இத்தகைய தொடர்புகள் நம்மை ஆச்சரியப்படுத்த வேண்டியதில்லை. ஏனெனில் விவிலியம் சாலமோன் அரசாண்ட காலத்தில் நடந்த கடல்சார் பரிமாற்றங்களை குறிப்பிடுகின்றன; கி.மு. 970-திலிருந்து கி.மு. 931 வரையான காலத்தில், தூரத்திலிருந்த நாடுகளிலிருந்து கப்பல்கள் மூலம் ஒவ்வொரு மூன்று ஆண்டுகளுக்கொருமுறையும், யானைத்தந்தம், குரங்குகள் மற்றும் அபூர்வப் பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டன. இவை தென்னிந்தியாவிலிருந்து தான் வந்திருக்க வாய்ப்புகள் அதிகம். வர்த்தகப் பாதைகள் வணிகத்தை மட்டுமன்றி அரசியல் கூட்டணிகளையும் உருவாக்கி இருக்க வாய்ப்புகள் அதிகம்.

சீசரியன் சேரநாட்டுக்கு தப்பிச் செல்லல் — ஒரு கருதுகோள்:

கி.மு. 31ஆம் ஆண்டில் நடைபெற்ற ஆக்டியம் போர் இல் கிளியோபாட்ரா VII மற்றும் மார்க் ஆன்டனி தோல்வியடைந்ததையடுத்து, ஜூலியஸ் சீசர் மூலம் பிறந்த தனது 17 வயது மகன் சீசரியன் (ப்டோலமி XV) ஐ, ஆகஸ்டஸ் (ஆக்டேவியன் — ஜூலியஸ் சீசரின் தத்தெடுத்த மகனும் பேரப்பெரனும்) இடமிருந்து காப்பாற்ற, பெரெனிக்கே வழியாக இந்தியாவுக்கு அனுப்பியதாக கூறப்படுகிறது.

புளூட்டார்க் போன்றோர் வழங்கிய பண்டைய ஆதாரங்கள், சீசரியன் பெரெனிக்கேவிலிருந்து அலெக்சாண்டரியாவுக்கு திரும்பி வந்து பின் கொல்லப் பட்டதாக விவரிக்கின்றன. இருப்பினும், ஜார்ஜ் வுட்காக் உள்ளிட்ட சில நவீன வரலாற்றாசிரியர்கள், சீசரியனின் உண்மையான இலக்கு தென்னிந்தியாவின் சேர, பாண்டிய அல்லது சாத்தவாஹன அரசுகளாக இருக்கக்கூடும் என்று கருதுகின்றனர்; இவை அனைத்தும் அந்நாளில் எகிப்தின் முக்கிய வர்த்தகத் துணை நாடுகளாக இருந்தன.

அந்தகாலக் கடலோடிகள் ஹிப்பாலஸ் (தென்மேற்கு பருவமழைக் காற்று) காற்றைப் பயன்படுத்தினர்; இதனால் இந்தியப் பெருங்கடலைக் கடந்து மலபார் கரையை சுமார் நாற்பது நாட்களில் அடைய முடிந்தது. கேரளாவின் உள்ளூர் மரபுக் கதைகள், சீசரியன் தென்னிந்திய அரச குடும்பத்தில் திருமணம் செய்து கொண்டு இந்திய இளவரசராக வாழ்ந்ததாகக் கூறுகின்றன.

முசிரியில் ஆகஸ்டஸின் ஆலயம்:

ரோமப் பாதை வரைபடத்தின் நடுக்கால (கி.பி. 4-ஆம் நூற்றாண்டு) பிரதியான டபுலா பேட்டிங்கேரியானா, முசிரியில் ஆகஸ்டஸ் ஆலயம் (நான்காம் மற்றும் ஐந்தாம் படங்கள் காண்க) இருந்ததைத் தெரியப்படுத்துகிறது. இது சேர நாட்டில் நிரந்தர ரோமர் இருப்பை சுட்டிக் காட்டுகிறது.

வரலாற்றாசிரியர் *P J* சேரியன் தலைமையில் பட்டணம் என்னுமிடத்தில் நடைபெற்ற அகழாய்வுகளில் 2,000-க்கும் மேற்பட்ட ரோமர் ஆம்போரா, டெர்ரா சிகில்லாட்டா மற்றும் கண்ணாடிப் பொருட்களின் துண்டுகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இது இந்தியாவில் கண்டெடுக்கப்பட்ட ரோமர் பானைப் பொருட்களில் மிகப்பெரிய தொகுப்பாகும். இவ் அடையாளப் பொருட்கள் சேரர்களுக்கும் ரோமர்களுக்கும் இடையேயான பரிமாற்றத்தின் ஆழத்தை தெளிவாக்குகின்றன.

சீசரியன் உண்மையில் சேரர் நாட்டை அடைந்தார் என்பதற்கான உறுதியான தொல்லியல் ஆதாரங்களுக்காக இன்னுமும் காத்திருக்க வேண்டியதாக இருக்கிறது. இருப்பினும் இலக்கிய, வரைபட மற்றும் பொருளாதார ஆதாரங்கள் இக் கூற்றை நோக்கியதாக இருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

எகிப்திய 'அரசர்களின் பள்ளத்தாக்கில்' தமிழ்-பிராமி:

எகிப்தின் அரசர்களின் பள்ளத்தாக்கு பகுதியில் கண்டெடுக்கப்பட்ட தமிழ்-பிராமி கல்வெட்டுகள் அதே அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்தவை. *'École Française d'Extrême-Orient'*-இன் சார்லட் ஷ்மிட் மற்றும் சுவிட்சர்லாந்தின் லோசான் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர்ப்ரொஃ. இங்கோஸ்ட்ராஹ் ஆகியோர் முன்னைய ஆய்வுகளை மறுபரிசீலனை செய்து, அப்பகுதியில் சுமார் இருபது தமிழ்-பிராமி கல்வெட்டுகளை பதிவு செய்துள்ளனர் (ஆறாம் படம் காண்க).

"கோரன்" (தமிழில் "அரசன்" அல்லது "தலைவர்" எனப் பொருள்படும்) என்ற பெயர் பல கல்லறைகளில் மீண்டும் மீண்டும் தோன்றுகிறது. ஆச்சரியமாக, "கோரன்" என்ற பெயர் இன்றும் தெலிச்சேரியில் பலரிடம் காணப்படுகிறது; அதில் என் மனைவியின் தந்தை வழித் தாத்தாவும் ஒருவர். ஒரு கல்வெட்டில் "சிகை கோரன் – வர கண்ட" ("கோரன் வந்து கண்டான்") என வாசிக்கப்படுகிறது. கோபன், சாத்தன், கீரன் போன்ற பெயர்களும் இங்கு காணப்படுகிறது. அம்மன்கோவில்பட்டி (ஏழாம் படம் காண்க) மற்றும் அரச்சலூர் (புகலூர் / வேலாயுதம்பாளையம் – எட்டாம் படம் காண்க) போன்ற இடங்களில் தென்னிந்தியாவின் ஆரம்பகால தமிழ்-பிராமி கல்வெட்டுகளிலும் — இப் பெயர்கள் காணப்படுகின்றன.

எகிப்து 'அரசர்களின் பள்ளத்தாக்கில்' காணப்படும் இத் தமிழ்-பிராமி கல்வெட்டுகள், அங்கு காணப்படும் கிரேக்கச் சுவரெழுத்துகளுடன் ஒத்த பாணியில் உள்ளன. இது முக்கிய விருந்தினர்களின் வருகையைப் பதிவு செய்யும் குறிப்பாக இருக்கலாம் — அதாவது

இன்றைய காலத்து விருந்தினர்களின் சிறப்பு வருகைப் பதிவேட்டைப் போன்றதாக பொறிக்கப் பட்டிலிருக்கலாம்.

பெரெனிக்கே உடன் சேர இளவரசருக்குமான தொடர்பு:

புளூட்டார்க் போன்ற வரலாற்றாசிரியர்கள், சீசரியனின் ஆசான் ரோடோன் சீசரியனினை பெரெனிக்கே துறைமுகத்திலிருந்து அலெக்ஸாண்டிரியாவிற்கு திரும்பச் செய்ததாகக் கூறுகின்றனர். ஆனால் 1995-ஆம் ஆண்டு பெரெனிக்கே பகுதியில் கண்டெடுக்கப்பட்ட ஒரு பானைச்சிதலில் "கொற்றபெருமான்" என்ற தமிழ்-பிராமி பெயர் பொறிக்கப்பட்டிருந்தது; இது ஒரு சேர இளவரசரின் பட்டமாக விளக்கப்படுகிறது ("பெருமான்" = மன்னன்; "குமாரன்" = மகன்).

ஆக்டியம் போர் கி.மு. 31ஆம் ஆண்டு செப்டம்பர் 2ஆம் தேதி முடிவுற்றது; அது தென்மேற்கு பருவக் காற்று காலமாக இருந்தது — எகிப்திலிருந்து மலபார் கரைக்கு பாதுகாப்பாகப் பயணிக்க ஏற்ற காலமாகும். இத்தகைய தமிழ்-பிராமி கல்வெட்டுகள், ஒரு சேர இளவரசர் மத்தியதரை அரசியல் நிகழ்வுகளில் ஈடுபட்டிருக்கலாம் என்றும், ரோமரோடு அடைந்த தோல்விக்குப் பின்னர் பெரெனிக்கே வழியாக சீசரியனுடன் கிழக்கே தன்நாட்டிற்கு பயணித்திருக்கலாம் என்பதையும் சுட்டிக்காட்டுகின்றன.

முடிவுரை:

தீர்மானமான ஆதாரங்கள் இன்னும் முழுமையாக இல்லாவிட்டாலும், தொல்லியல், கல்வெட்டு மற்றும் இலக்கிய ஆதாரங்கள் ஒன்றிணைந்து, மலபார் கடற்கரையும் நைல் ஆற்றையும் வெறும் வர்த்தகக் காற்றால் மட்டுமல்லாது நீடித்த கலாச்சார மற்றும் அரசியல் உறவுகளால் இணைக்கப்பட்டிருந்த ஒரு உயிர்ப்பான மற்றும் பரஸ்பரம் இணைந்த பண்டைய உலகை வெளிப்படுத்துகின்றன.

குறிப்புகள்:

1. டெலாவேர் பல்கலைக்கழகம் மற்றும் போலந்து மெடிட்டரேனிய தொல்லியல் மையம், தமிழ்-பிராமி கல்வெட்டுகள் உள்ளிட்ட இந்திய-ரோமர் வர்த்தகத்திற்கான பலத்த ஆதாரங்களை கண்டறிந்துள்ளன.
2. புளூட்டார்க், "லைஃப் ஆஃப் ஆண்டனி" (அத்தியாயம் 81–82, பக்கம் 4): சீசரியன் தப்பிச் சென்ற விவரத்திற்கான முதன்மை ஆதாரம். கிளியோபாட்ரா தனது மகனை பெரும் செல்வத்துடன் "எத்தியோப்பியா" வழியாக இந்தியாவிற்கு அனுப்பியதாக அவர் குறிப்பிடுகிறார் (இங்கு "எத்தியோப்பியா" என்பது பொதுவாக சிவப்பு கடல் பகுதியைக் குறிக்கும்).
3. ஜார்ஜ் வுட்காக், "தி கிரீக்ஸ் இன் இந்தியா" (1966): வரலாற்றுக் குறிப்புகள் தியோடோரஸ் மற்றும் ரோடோன் ஆகியோரை சீசரியனின் ஆசான்களாக குறிப்பிடுகின்றன. ரோடோன், ஒரு அரசு வழங்கிய தவறான வாக்குறுதியுடன் சீசரியனினை சிவப்பு கடல் துறைமுகத்திலிருந்து அலெக்ஸாண்டிரியாவிற்கு திரும்பச் செய்ததாகச் சொல்லப்படுகிறது. வுட்காக் கருத்துப்படி, சீசரியன் "இந்தியா" நோக்கிச் சென்றது ஏதோ ஒரு தப்பிச் செல்லும் திசை அல்ல; சேர, பாண்டிய அல்லது சாத்தவாஹன அரசுகளோடு நிலை பெற்றிருந்த வர்த்தக வலையமைப்பின் அடிப்படையில் தஞ்சம் பெற்றிருக்கலாம்.
4. ஐராவதம் மகாதேவன் போன்ற அறிஞர்கள் இக்கல்வெட்டுகளை ஆய்வு செய்து, கி.மு. 1ஆம் நூற்றாண்டில் தென்னிந்திய அரச குடும்பத்தினர் அல்லது உயர்பதவியிலுள்ள அதிகாரிகள் துறைமுகத்தில் இருந்ததைக் குறிக்கும் பெயர்கள் மற்றும் பட்டங்களை அடையாளம் கண்டுள்ளனர்.
5. "பெரிப்ளஸ் ஆஃப் தி எரித்ரேயன் சீ" (ஒரு பண்டைய கடற்பயண குறிப்பேடு) குறித்த கடல்சார் ஆய்வுகள், தென்மேற்கு பருவக் காற்று காலத்திலும், இலையுதிர் காலம் முடிந்து கோடை காலம் ஆரம்பம் ஆகும் வரை செங்கடலிலிருந்து மலபார் கரைக்கு நேரடி மற்றும் விரைவான கடற்பயணம் சாத்தியமானது என்பதை உறுதிப்படுத்துகின்றன

.

போர்ப் பொருளாதாரம்

ச. அய்யம்பிள்ளை,
பொருளாதார துறை, மேனாள் பேராசிரியர், பாரதிதாசன் பல்கலைக்கழகம்,
திருச்சிராப்பள்ளி

13.03.2026 **அன்றைய கள நிலவரப்படி, இந்தியா முழுமைக்கும் பல இடங்களில் எரி வாயு இன்றி உணவகங்கள் மூடப்பட்டன; விடுதிகள் முடக்கப்பட்டன; இல்லத்தரசிகள் எரிச்சலடைந்தனர்; பெட்ரோல், டீசல் இன்றி வாகனங்கள் வரிசையாக நின்றன....காரணம், மேற்கு ஆசிய நாடுகளில் அமெரிக்கக் குண்டு மழை.**

சமீப காலமாகப் போர் மேகங்கள் பல நாடுகளைச் சூழ்ந்துள்ளன. ***U.S sinks Iranian vessel near Sri Lanka, (The Hindu, March 5, 2026, p.1); W Asia burns as both sides go full blast, (The New Indian Express, March 4, 2026, p.1); India has fuel stocks only for 6-8 weeks: Petroleum ministry, (The New Indian Express, March 4, 2026, p.14); Battered Iran attacks oil infra targets in West Asia, Tehran strikes US Embassies in Saudi Arabia, Kuwait…, (The Hindu, March 4, 2026, p.1);*** "**இந்தியா** ஒரு மாதத்திற்குத் தேவையான பெட்ரோலியப் பொருள்களை **ரஷ்யா**விடம் இருந்து இறக்குமதி செய்துகொள்ளலாம் என **அமெரிக்க** அதிபர் அனுமதி வழங்கியுள்ளார்"; "லெபனான் தாக்கப்பட்டது" போன்ற செய்திகள் போர்களின் தாக்கத்தை உறுதிப்படுத்துகின்றன. அமெரிக்க நாடு நீண்ட காலமாக இந்தியாவிற்கும், முகமதிய நாடுகளுக்கும் மற்றும் சில நாடுகளுக்கும் பல இடையூறுகள் செய்துள்ளது, செய்துவருகிறது என்பது உலகறிந்த செய்தி. அவையெல்லாம் போதாது என, இப்போது அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் **(Donald Trump)**, உலகுக்கே அவர்தான் அதிபர் என எண்ணிக்கொண்டு, புதிய பிரச்சனைகளைக் கிளப்பி வருகிறார். அவர் செய்துவரும் அட்டூழியங்கள் கொஞ்சமல்ல. அவர் பல நாடுகளின் இயற்கை வளங்களைக் கொள்ளையடிக்கும் நோக்கத்தோடு, பிற நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட்டுப் பல புதிய குழப்பங்களை உருவாக்கி வருகிறார். முதலில், அவற்றுள் சில லீலைகளைக் காணலாம்.

டொனால்ட் ட்ரம்ப் வெனிசுலா நாட்டு அதிபரையும் அவரின் மனைவியையும் பிடித்துக்கொண்டு சென்றுள்ளார்; வெனிசுலா நாட்டு எண்ணைப் பொருள்கள் கியூபா நாட்டுக்குச் செல்லக்கூடாது என்கிறார்; சுத்திகரிப்பதற்குச் சிரமமான, வெனிசுலா நாட்டு எண்ணைப் பொருள்களை இந்தியா இறக்குமதி செய்யவேண்டும் என வற்புறுத்துகிறார்.

கனாடா நாடு தன் ஐம்பத்தொன்றாவது மாநிலம் என்று கூறிவருகிறார்; கனடா **Detroit** ஆற்றின் குறுக்கே அணை கட்டுவதற்கு, அமெரிக்க இரும்பைப் பயன்படுத்தவில்லை என்கிற காரணத்தைக் கூறி, அங்கே கட்டப்பட்ட அணையைக் கனடா மக்கள் பயன்பாட்டுக்குத் திறப்பதைத் தடுத்து வருகிறர்.

ரஷ்யாவிடம் இருந்து எண்ணை வளங்களை இந்தியா இறக்குமதி செய்யக்கூடாது என நெருக்குதல் கொடுக்கிறார்; அமெரிக்காவின் பருத்தி விதைகளை இந்தியாவும் வங்காளமும் வாங்குவதில் பல சிரமங்கள் மற்றும் அதிக செலவுகள் இருக்கின்றபோதும், அமெரிக்க பருத்தி விதைகளையே இந்தியாவும் வங்காளமும் வாங்க வேண்டும் எனக் கட்டளை இடுகிறார்.

புதிய நூற்றாண்டு பிறந்த உடனேயே, **2001** ஆம் ஆண்டு செப்டம்பர் **11** அன்று, ஒரு தனி நபரின் சூழ்ச்சியால், உலகமே அதிர்ச்சி அடையும் வகையில், ஒரு சில நொடிகளுக்குள் அமெரிக்காவின் இரட்டைக் கோபுரமும் பென்டகனும் தகர்க்கப்பட்டதை மறந்துவிட்டு, ஈரான் யுரேனியப் பயன்பாட்டைக் குறைக்கவில்லை எனில், தாக்குதல் மேகொள்ளப் போவதாகத் தெரிவிக்கிறார்; முகமதிய நாடுகளுடன் வணிகத்தொடர்பு கொண்டுள்ள நாடுகளின் மீது அதிக இறக்குமதி வரி விதிக்கப்போவதாகப் பயமுறுத்துகிறார்.

உக்ரைனை **NATO**வில் **(North Atlantic Treaty Organisation)** சேரச்சொல்லி, உக்ரைனுக்கும் ரஷ்யாவுக்கும் சண்டை மூட்டிவிட்டு, இந்த ஆண்டு ஜூன் மாதத்திற்குள் ரஷ்யாவும் உக்ரையினும் போர் நிறுத்த உடன்படிக்கையினைக் கொண்டுவரவேண்டும் எனக் கட்டளை பிறப்பிக்கிறார்; இந்தோனேசியாவில் இருந்து நாம் இறக்குமதி செய்கிற நிலக்கரியை நிறுத்திவிட்டு, அதனை அமெரிக்காவிடம் இருந்து இறக்குமதி செய்ய வேண்டும் என்கிறார்; கிரீன்லாந்து தன்னுடைய காலனி நாடு எனக் கூறிவருகிறார்;

இஸ்ரேல் – பாலஸ்த்தீனப் போரிலும் மூக்கை நீட்டி வருகிறார்; இவைபோல இன்னும் பல....

1981 முதலாகவே, உலக வர்த்தக நிறுவனத்தில் **(1991வரை, General Agreement on Tariffs and Trade : GATT; 1991க்குப் பின்னர் World Trade Organisation : WTO)** உறுப்பினராக இருந்துகொண்டு, அமெரிக்கா இந்தியாவிற்குத் தொடர்ந்து நிபந்தனைகள் விதித்து வருகிறது. முன்பு இருந்த அமெரிக்க வர்த்தகப் பிரதிநிதி, கார்லா ஹில்ஸ் **(Carla Hills)** என்பவர் பல இடையூறுகள் செய்துவந்தார். அவர் கூறிவந்த புகார்களில் "இந்தியாவில் அறிவுசார் சொத்துரிமை சரியாகப் பாதுகாக்கப் படவில்லை; அமெரிக்க முதலீட்டை இந்தியா தடை செய்கிறது" போன்றவை சில. அமெரிக்கா இந்தியப் பொருள்களை இறக்குமதி செய்வதைக் குறைக்கவும், அமெரிக்கா இந்தியாவிற்குச் செய்கின்ற ஏற்றுமதியை அதிகரிக்கவும் பல முயற்சிகள் செய்துவந்தார்.

"கடலில் இருந்து இந்திய மீனவர்கள் இறால் பிடிக்கும்போது, சிறிய கடலாமைகள் இறந்து, சுற்றுப்புறச் சமநிலை பாதிக்கப்படுகிறது" எனக்கூறி, இந்தியாவின் இறால் ஏற்றுமதியைக் குறைத்தார். மேலும் "இந்திய மீனவர்கள் இறால் பிடிக்க அமெரிக்க மீன்வலையைப் பயன்படுத்த வேண்டும்" என நிர்ப்பந்தித்தார்.

இந்தியாவில் உற்பத்தியாகும் பாஸ்மதி அரிசிக்குப் பதிலாக, டெக்ஸ்மதி அரிசி ஒன்றைக் கொண்டுவந்து, வர்த்தகக் காரணங்களுக்கு, இரண்டும் ஒன்றுதான் எனச் சொன்னது அமெரிக்கா. இதை எதிர்த்து, இந்தியா உலக வர்த்தக நிறுவனத்தின் **(GATT, WTO)** குறைதீர் அமைப்பில் **(Dispute Settlement Mechanism)** அவை இரண்டும் வேறு வேறு என நிரூபிக்க வேண்டி இருந்தது. "பாஸ்மதி அரிசியைச் சமைக்கும்போது அதில் இருந்து ஒரு நல்ல வாசம் வரும்; அரிசியின் நீளம் மிக அதிகரிக்கும்; அதை வாயில் மெல்லும்போது கூழாக மாறும்; அனால் இந்த குணாதிசயங்கள் டெக்ஸ்மதி அரிசிக்கு இல்லை" என்று நிரூபித்தனர் நம் அறிவியலாளர்கள்.

எரி சக்திக்காக, வெளிநாட்டு எண்ணைப் பொருள்களை வாங்குவதால் இந்தியாவிற்கு அதிக பணவிரயம் ஏற்படுகிறது. இதைக் குறைக்க, இந்தியாவில் சூரிய ஒளி மூலம் பெறும் மின்சார உற்பத்தி அதிகமாகி வரும்போது, அதற்கு அரசு, மானியம் அளிக்கக் கூடாது எனவும், அதற்கு அமெரிக்க இரும்புத்தகடுகளையே பயன்படுத்தத் வேண்டும் எனவும் அமெரிக்கா கட்டளை இட்டது.

மேலே கூறியதைப் போல, வர்த்தகப் போர்கள் பல தொடர்ந்து நிகழ்ந்துள்ளன. தம் கட்டுப்பாட்டுக்குள் வரும் இடப் பரப்பையும், வளங்களையும், அதிகாரத்தையும் அதிகப்படுத்தும் அதீத ஆசைகளால், நீண்ட காலமாகவே, மன்னர்களுக்குள்ளும், நாடுகளுக்குள்ளும் போர்கள் நிகழ்ந்துள்ளன. அவற்றில் இறந்த, கொல்லப்பட்ட ஏதுமறியா அப்பாவி மக்கள், பெண்கள், குழந்தைகள், சிறார்கள் பல கோடி; போர்களுக்கு ஈடுபடுத்தப்பட்ட போர்த்தளவாடங்கள், அவற்றிற்குப் பயன்படுத்தப்பட்ட தாதுப்பொருட்கள் ஏராளம். அவற்றை எல்லாம் சரியாகப் பயன்படுத்தியிருந்தால், உலகில் இன்று காணப்படும் வறுமை, பசி, பட்டினி, நோய்கள் எனப் பல மனிதப் பிரச்சனைகளைத் தவிர்த்து இருக்கலாம் என ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.

போர் இந்தப் பூமிக்குப் புதிதல்ல. ***"From Ancient Egypt to Iraq" (Editorial Consultant: Saul David, First Published in Great Britain in 2009 by Dorling Kindersley Limited, London.)*** என்கிற நூல், கடந்த ஐயாயிரம் ஆண்டுகளாக உலக நாடுகளில் நடந்த போர்கள் பற்றிய விளக்கங்களைத் தருகிறது. போர்களும், சுதந்திரப் போராட்டங்களும் தொடர்ந்து நடந்துள்ளன. கப்பல்கள், விமானங்கள், யானைகள், குதிரைகள் என ஏகப்பட்டவை அழிக்கப்பட்டுள்ளன. கோடிக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டு உள்ளனர். மழை, வெள்ளம் இல்லாது இருந்திருந்தால், இந்த பூமிப் பரப்பு சிவப்பாக மாறி, இரத்தத்தால் பலமுறை குளிப்பாட்டப் பெற்றது யாவர்க்கும் தெரிந்திருக்கும்; பூமியில் இரத்தக் கவிச்சை இன்னும் இருந்திருக்கும்.

ஐயாயிரம் ஆண்டுகளுக்கும் முன்பே பதிவிடப்பட்ட உலக வரலாற்றில் முதன்முதலாக வருவது எகிப்தைப் பிடிக்க நடந்த போராக அறியப்படுகிறது ***(Saul David,, 2009).*** அது தொடங்கி, மெசபடோமியா, சீனா, கிரேக்கம், பாரசீகம், ரோம் ஆகிய பகுதிகளில் போர்கள் தொடர்ந்து நிகழ்ந்துள்ளன. கி.மு.***333***இல் ஐரோப்பாவில் இருந்து வட இந்தியாவரை படை எடுத்த, முப்பத்து இரண்டு வயதிலேயே இறந்துவிட்ட, அலெக்சாண்டரை மறந்துவிட முடியுமா? ***1,50,000*** படை வீரர்கள் பங்குபெற்றதாகவும் ***13,000.***வீரர்கள் மரணித்ததாகவும் செய்திகள் வந்துள்ளன. கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் நடந்த

ரோமானியப் படை எடுப்புகளில் *680* கப்பல்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன; *2,86,000* வீரர்கள் போர்களில் ஈடுபட்டுள்ளனர். இதுபோன்ற இழப்புகளைப் படிக்கும்போது, இப்போதுள்ள சூழல் எவ்வளவோ பரவாயில்லை என்றே தோன்றுகிறது.

1914-1918 மற்றும் *1939-1945* ஆண்டுகளில் நடந்த முதலாம் மற்றும் இரண்டாம் உலகப்போர்களிலும், நெப்போலியன் போர், வியட்நாம் போர், கொரியன் போர்களிலும் பல்லாயிரக்கணக்கோர் மடிந்தனர். ஹிட்லரும் (பல ஆயிரம் யூதர்களையும் ரோமனியர்களையும்) மங்கோலிய மன்னன் செங்கிஸ்கானும் ஏராளமான மக்களைக் கொன்று குவித்துள்ளனர். அமெரிக்கா, *1945*ஆம் ஆண்டு அகஸ்ட் மாதம் *6, 9* ஆகிய தேதிகளில் ஜப்பானின் ஹிரோஷிமா, நாகசாகி நகரங்களில் அணு குண்டுகளை வீசி, பல இலட்சம் உயிர்களைக் குடித்தது; அத்துடன் ஏகப்பட்ட சொத்து சேதங்கள்; வளங்கள் வீணடிக்கப்பட்டன. ஆனாலும், மனிதன் நாகரிகம் அடைந்துவிட்டான் என்று சொல்கிற இன்றும், இஸ்ரேல்- பாலஸ்தீனம், உக்ரைன்-ரஷ்ய, அமெரிக்கா-மேற்கு ஆசியா போர்களினால்அப்பாவிப் பெண்களும் குழந்தைகளும் தொடர்ந்து கொல்லப்படுகின்றனர் என அறியும்போது குலை நடுங்குகிறது. மனிதர்கள் பூமிக்குள் புதைகுழி தோண்டி தங்கத்தையும் போர்த்தளவாடங்களையும் புதைத்து வைப்பதோடு நின்று விடாமல், எதிரிகளின் தாக்குதல்களுக்குப் பயந்து நீண்ட நாட்களாக இன்னும் பதுங்கு குழிகளுக்குள் வாழ்ந்து வருகிறார்கள்; இப்போது பதுங்கு குழிகளுக்குள் இருப்பவர்களையும் தாக்கிக் கொல்லும் அளவிற்கு, அமெரிக்கா ஆயுத பலம் பெற்றுள்ளது என அறியும்போது, அறிவியல் வளர்ச்சியின் விளைவு வினாவுக்குள்ளாகிறது. அந்தமான் தீவில், ஜப்பானியப் பதுங்கு குழியினையும், அதற்கு அருகிலேயே குண்டு விழுந்து உருவான கிணறு போன்ற மிக ஆழமான குழியையும் இன்றும் காணலாம்.

போர்த்தளவாடங்கள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி மிகுந்த இலாபம் சம்பாதிக்கும் தொழிலாகவும், வேலைவாய்ப்பு அளிக்கும் தொழிலாகவும் இன்று வளர்ந்துள்ளது. பல நாடுகள், தம் மூன்றில் ஒரு பங்குக்கு மேலான தேசிய உற்பத்தியை இராணுவத் தளவாடங்கள் உற்பத்திக்கும், கொள்முதலுக்குமே செலவிடுகின்றன. அந்த உற்பத்தியின் மூலம் பலருக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கிறது; வியாபாரமும் பெருகுகிறது; வருவாயும் உயர்கிறது. ஏழை நாடுகளுக்குப் போர்த்தளவாடங்களை விற்பதன் மூலம், பல வளர்ந்த நாடுகள் பெரும் பயன் அடைகின்றன. நம்மைப் போன்ற ஏழை நாடுகள், தம் மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யாமல், போர்த்தளவாடங்களை வாங்கிக் குவிப்பதிலேயே அதிகப் பணத்தை விரயமாக்குகின்றன. அமெரிக்கா போன்ற வளர்ந்த நாடுகள் ஏழை நாடுகளுக்குள் சண்டை மூட்டிவிட்டு, போர்த்தளவாடங்களை விற்று, வருவாயைப் பெருக்கிக்கொள்கின்றன.

“புதியதோர் உலகு செய்வோம்; கெட்ட போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்” என்ற பாரதிதாசனின் கனவு என்று நனவாகுமோ?

குறிஞ்சிக் கடவுள் குறுக்குத்துறை முருகன் கோயில்

பொதிகை குடும்பன் சண்முகக் குமார்
தென் பொதிகை ஆவணக் காப்பகம், தென்காசி

முன்னுரை:

திக்கெல்லாம் புகழும் திருநெல்வேலி நெல்லையப்பர் காந்திமதி கோயிலால் சிறப்புறுகிறது. 'தண் பொருநை' என்று செம்மொழி தமிழ் இலக்கியத்திலும், 'தாமிரபரணி' என்று வால்மீகி இராமாயணத்திலும் அழைக்கப்பெறும் நீர் வற்றாத தாமிர வருணியாற்றாலும், அவ்வாற்றின் நடுவே வீற்றிருக்கும் குறிஞ்சி கடவுள் குறுக்குத்துறை முருகன் கோயிலாலும் திருநெல்வேலிக்கே பெருமை உண்டு.

ஊரின் அமைப்பு:

திருநெல்வேலி தமிழ் நாட்டின் தென் பகுதியில் மதுரையிலிருந்து தெற்கே 108 கி.மீ தொலைவிலும், நாகர்கோவிலிலிருந்து வடமேற்கே 81 கி.மீ தொலைவிலும் அமைந்துள்ளது. இவ்வூர் சந்திப்பு, நகர் என இரு பெரும் பிரிவுகளைக் கொண்டது. நகரத்தில் நெல்லையப்பர், காந்திமதியம்மன் திருக்கோயில் அமைந்துள்ளது. கோயிலைச் சுற்றி நாற்பெருந் தேரோடும் வீதிகள் அமைந்துள்ளன. நகரின் புறவெளியில் தென்மேற்காகப் பொருணையாறு பாய்ந்து இவ்வூரை வளப்படுத்துகிறது.

ஊரின் பெயர்க்காரணம்:

திருநெல்வேலி என்பது 'நெல்லை' என்று மரூஉப் பெயரால் தமிழில் வழங்கி வருகிறது. வேதபட்டர் உலர வைத்த நெல்லை சிவன் மழையிலிருந்து நனையாமல் காத்து அருள்புரிந்தார். எனவே நெல்லுக்கு வேலியிட்டமையால் இவ்வூர் 'நெல்வேலி' என்றாயிற்று. 'திரு' என்ற அடைமொழி சேர 'திருநெல்வேலி' என வழங்கி வருகிறது. இப்புராண வழக்கிற்கு முன்னால் இவ்வூருக்கு வேறு ஒரு பெயர் இருந்திருக்க வேண்டும். திருநெல்வேலி தல புராணத்தில் 'வேணுவனபுரம்' என்று இவ்வூருக்குப் பெயர் வழங்கி வந்ததாகக் காணப்படுகிறது. இதன் வடமொழிப் பெயர் 'சாலிவாடீஸ்வரம்' என்பதாகும்.

குறுக்குத்துறையின் வரலாறு:

நெல்லையப்பர் கோயிலிலிருந்து தெற்கே இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் பாய்ந்து வரும் தாமிரபரணி ஆற்றின் நடுவே அமைந்துள்ள இவ்விடத்திற்குத் திருவுருமாமலை என்றும், குறுக்குத்துறை என்றும் பெயர் உண்டு.

திருவுருமாமலை எனும் இவ்விடத்திலிருந்து முருகனின் திருவுருவங்கள் உருவாக்கப்பட்டு பல கோயில்களுக்குக் கொண்டு செல்லப்பட்டன. இவ்விடத்திலிருக்கும் பாறையிலிருந்துதான் திருச்செந்தூர் மூலவர் முருகப் பெருமானுடைய திருவுருவம் கி.பி. 1653-இல் செதுக்கப்பெற்றது. அதனை ஆக்கிக் கொண்டிருந்த சிற்பி அப்பாறையிலும் முருகப் பெருமான் திருவுரு ஒன்று ஆக்கினான்.

வடமலையப்ப பிள்ளையுடைய தாயார் அந்த திருவுருவை நாள்தோறும் பூஜித்து வந்ததினால் இப்பாறைக்கு ஆச்சிப்பாறை என்ற பெயரும் உண்டு. பாறையில் புடைப்புச் சிற்பமாக அமைந்த

முருகப் பெருமானை திருநெல்வேலியிலிருந்து நாள்தோறும் பலர் வந்து வழிபடத் தொடங்கினர். நாளடைவில் முருகப்பெருமானுக்கு திருக்கோயிலும் எழுந்தது.

இன்று இக்கோயிலில் நாள் வழிபாடுகளும், திருவிழாக்களும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

கோயில் அமைப்பு

குறுக்குத்துறை கோயிலின் கருவறையில் உள்ள மூலவர் சுப்பிரமணியர், வள்ளி, தெய்வானை ஆகியோரின் திருவுருவங்கள் பாறையிலேயே புடைப்புச் சிற்பமாக கிழக்கு முகமாக இருக்கும் நிலையில் செதுக்கப்பட்டுள்ளன. கருவறையானது கோயிலின் மற்ற பகுதிகளை விட மிகச் சிறியதாகவும் ஒரே வாயிலை மட்டும் கொண்டதாகவும் உள்ளது.

கருவறையை அடுத்து அர்த்த மண்டபம் அமைந்துள்ளது. இதற்குக் கிழக்கு வாயிலும், தெற்கு வாயிலும் உள்ளன. அர்த்த மண்டபம் கருவறையை விட சற்று பெரிய மண்டபமாகும். குருக்கள் இம் மண்டபத்தில் நின்றுதான் முருகப் பெருமானுக்கு பூசை செய்வார். மக்கள் அர்த்த மண்டபத்தை அடுத்து அமைந்துள்ள மகா மண்டபத்தில் நின்றுகொண்டு முருகனை வழிபடுவார்கள். மகா மண்டபத்திலிருந்து அர்த்த மண்டபத்திற்குச் செல்லும்...

கிழக்கு வாயிலின் இருபுறமும் வீரபாகு, வீரமகேந்திரர் ஆகியோரின் திருவுருவங்கள் அமைந்துள்ளன. மகா மண்டபத்தின் வட திசையில் நடராசரின் செப்புத் திருமேனியும், அப்பர், சுந்தரர், மாணிக்க வாசகர், திருஞானசம்பந்தர் ஆகியோரின் செப்புத் திருமேனிகளும், தென் திசை நோக்கி அமைந்துள்ளன. வீரமகேந்திரர் திருவுருவத்தின் இடப்பக்கம் கிழக்கு முகமாக லிங்க வடிவ சிவபெருமான், செகதாம்பாள், நெல்லையப்பர், காந்திமதியம்மாள் ஆகியோரின் திருவுருவங்கள் உள்ளன. மகா மண்டபத்தின் வடதிசையில் நடராசர் செப்புத் திருமேனியின் இடப்பக்கம் சண்முகர், வள்ளி, தெய்வானை ஆகியோரின் செப்புத் திருமேனிகளும் அமைந்துள்ளன.

கருவறைக்கு இடப்பக்கம் உள்ள அறையில் உற்சவர் சுப்பிரமணியர், வள்ளி, தெய்வானை, அஸ்திர தேவர், நித்ய உற்சவர் செப்புத் திருமேனிகளும் உள்ளன. கோயிலை வலம் வருவதற்கு அமைக்கப்படும் இடம் திருச் சுற்று எனப்படும். கருவறையைச் சுற்றி திருச்சுற்று அமைந்துள்ளது. தெற்கு திருச்சுற்றில் பூமியிலிருந்து ஒரு மீட்டர் உயரத்தில் பாறையிலேயே புடைப்புச் சிற்பமாகச் செய்யப்பட்ட சிறு மாடத்தில் தட்சிணாமூர்த்தி திருவுருவம் அமைந்துள்ளது.

திருச்சுற்றின் தென்மேற்கு மூலையில் கன்னி விநாயகரின் திருவுருவமும், வடமேற்கு மூலையில் பாலசுப்பிரமணியரின் திருவுருவமும், வடக்கு திருச்சுற்றில் சண்டிகேசுவரர், சனீஸ்வரர் ஆகியோரின் திருவுருவங்களும் அமைந்துள்ளன.

கோயிலின் கிழக்கு நுழைவுவாயிலை அடுத்து பலிபீடம், கொடிமரம், மயில் வாகனத் திருவுருவம், கும்பரத்தின சதுக்கம், சண்முக விலாச மண்டபம் ஆகியன அமைந்துள்ளன. சண்முக விலாச மண்டபத்தின் வடதிசையில் மடைப்பள்ளியும், யாகசாலை அறையும், பைரவரின் திருவுருவமும் அமைந்துள்ளன. கோயிலின் தெற்கு நுழைவுவாயிலின் முன்னால் தீர்த்தவாரி மண்டபமும், தாமிரபரணி ஆறும், பூசை மடமும் அமைந்துள்ளன. தெற்கு நுழைவுவாயிலையடுத்து கோயிலின் விற்பனைக்கூடம் உள்ளது. கருவறையின் மேல் அரை வட்ட வடிவமான விமானமும், கிழக்கு நுழைவுவாயிலின் முன்பால் சிறிய கோபுரமும் அமைந்துள்ளன.

நூல்கள்

குறுக்குத்துறை குமரன் மீது திருப்பள்ளி எழுச்சி, பிள்ளைத்தமிழ், குறவஞ்சி கலம்பகம் போன்ற சிற்றிலக்கியங்களும் இயற்றப்பட்டுள்ளன.

நூல் விலைப்பட்டியல்

Mob.: 7010997639

வ. எண்	நூல்கள்	விலை (Rs.)
1.	திருவிளையாடல் புராணக் கதைகள் எளிய உரைநடையில்	200

கவிஞர் முத்தமிழ் விரும்பியின் கவிதை நூல்கள்

2.	உன்னோடு உரையாடுதல்	100
3.	காதல் மொழி	80
4.	பார்வையில் பூத்த நிலா	100
5.	தேனடையும் வரலாறு	100
6.	நுண்கலை மருத்துவன்	200
7.	தொடரும் புழுதிக்கால்கள்	100

முனைவர் செ. இராஜேஸ்வரியின் எம்.ஜி.ஆர். பற்றிய நூல்கள்

1.	வெற்றித்திருமகன் எம்.ஜி.ஆர்.	200
2.	எம்.ஜி.ஆர். நிழல் நிஜம் நிரந்தரம்	200
3.	சிக்கு மங்கு சிக்கு மங்கு சச்ச பப்பா (எம்.ஜி.ஆர். கற்பிக்கும் குழந்தை வளர்ப்பு முறைகள்)	200
4.	வீரமகன் போராட வெற்றி மகள் பூச்சூட	200
5.	மகளிர் போற்றும் மக்கள் தலைவர் எம்.ஜி.ஆர்.	200
6.	எம்.ஜி.ஆர். ஒரு ஜீவ நதி	200
7.	எம்.ஜி.ஆர். ஒரு கலியுகப்போராளி	200
8.	ஒளி விளக்கு எம்.ஜி.ஆர்.	200
9.	வெற்றிப் படிக்கட்டில் நாடோடி மன்னன் – I	200
10.	நீங்க நல்லா இருக்கணும் [எம்.ஜி.ஆரின் திரைப்படப் பாடல்கள் -I]	200
11.	பாட்டுடைத் தலைவன் எம்.ஜி.ஆர். [எம்.ஜி.ஆரின் திரைப்படப் பாடல்கள் - II]	200
12.	இரசிகர்களின் இதய தெய்வம் எம்.ஜி.ஆர்.	200
13.	முத்தமிழ்க் காவியம் மதுரை வீரன்	200
14.	இரட்டை வேடத்தில் ஜொலிக்கும் எம்.ஜி.ஆர்.	200
15.	எம்.ஜி.ஆர். படங்களில் அறிவியல் புனைவு	200
16.	படகோட்டி, மீனவ நண்பன் ஓர் ஒப்பீடு	200
17.	Unique Fandom of MGR	200
18.	எம்.ஜி.ஆர். படங்களில் தொழில் தர்மம்	200
19.	எம்.ஜி.ஆர். படத்தில் சண்டைக் காட்சிகளின் சுவாரஸ்யங்கள் – I	200
20.	எங்க வீட்டுப்பிள்ளை	200
21.	எம்.ஜி.ஆர். வீடும் விருந்தும்	200

முனைவர் சந்திரிகா சுப்பிரமணியன் நூல்கள்

1.	தலைமை பொறுப்பேற்கலாம்	120

2.	இணையத் தமிழ்	*150*
3.	ஊடகச் சட்டங்கள்	*250*
4.	ஆஸ்திரேலியாவில் அருந்தமிழ்	*200*
5.	கொசு வீட்டில் பாயாசம் (சிறுவர் நூல்)	*100*
6.	மாயோன் வீட்டுத் தோட்டத்தில் (சிறுவர் நூல்)	*50*

சமூகப்பண்பாட்டு ஆய்வு நூல்கள்

1	பண்பாட்டு நகர்வுகள் (தமிழ் நாட்டில் இருந்து ஜப்பானுக்கு)	*200*
2.	பெண் தெய்வ வழிபாடு	*200*
3.	தேவேந்திரன்	*200*
4.	மருதநிலப் பெண் தெய்வங்கள் (வராகி, பிடாரி, தவ்வை)	*200*
5.	இரு நிலத்தில் திருமுருகன்	*200*
6.	முன்னோர் வழிபாடு (கதிரவன், காலதேவன், நாகர் வழிபாடும்)	*200*
7.	வேளாண்மரபில் விதைப்பும் பூப்பும்	*200*
8.	யானைக்கடவுள்	*200*
9.	பெண் பூப்பின் புனித வழிபாடு	*200*
10.	பெண் தெய்வ வழிபாடு தோற்றமும் வரலாறும்	*300*
11	வழிபாட்டின் வேர்களைத் தேடி	*300*

சமய விளக்க நூல்கள்

1	சாமிகளின் சரித்திரம் (வரலாறும். வழிபாடும்)	*300*
2	விரதங்களின் விளக்கம்	*200*

முனைவர் செ. இராஜேஸ்வரியின் கவிதைத் திறனாய்வு நூல்கள்

1.	பாடுபொருளும் பாசப்பொருளும்	*250*
2.	"பூ மர நிழலி"ன் களமும் காலமும்	*200*
3.	"2020 தைமாதத்தில் இன்று" கவிதையில் அடிக்கருத்தியல் ஆய்வு	*100*
4.	கவிஞர் முத்தமிழ் விரும்பியின் கவிதையில் காதல்	*100*
5.	பயணக் கவிதைகள்	*100*

ஆங்கிலக் கவிதைகளின் தமிழ் மொழி பெயர்ப்பு முனைவர் செ. இராஜேஸ்வரி

1.	எட்டுத்திக் கும் செல்வீர்	*200*
2.	அவன் கடவுளுக்கு நிகரானவன்	*200*
3.	செக்கச் சிவந்த ரோஜா	*200*
4.	கலீல் ஜிப்ரா னின் "மணலும் நுரையும்"	*200*
5.	கலீல் ஜிப்ரானின் "பாடல்கள் 14"	*200*
6.	மொழிபெயர்ப்பியல் ஆய்வு (ஆய்வு நூல்)	*200*
7.	கவிதை மொழிபெயர்ப்பு	*200*
8.	நவீன மொழிபெயர்ப்பு உத்திகள் *(Co-author)*	*300*
9.	மொழிபெயர்ப்பில் பெயரும் பொருளும்	*200*
10.	*Translating Tamil poetry*	*300*

சிறு கதை நூல்

1.	அமராவதியின் காதல் - சத்யப்பிரபா	*120*
2.	ரோஜா மொட்டு *(கவிதை சித்திரங்கள்)*	*100*
3.	மகிழ் பேரின்பம் *(poems)*	*200*
4.	பொன் வேலி *(poems)* நூல்கள்	*200*
5.	திருக்குறள் கதைகள் - பகை மாட்சி	*100*

தே. ஞானசேகரனின் நூல்கள் ஆங்கிலத்தில் – முனைவர் செ. இராஜேஸ்வரி

1.	*Emerging Mallarism*	*100*
2.	*Festival of lord Indra*	*250*
3.	*Role of Devendirar's in Indian war of Independence (Sundaralingam Kudumbanar)*	*200*
4.	*Re reading of Pallu literature (in print)*	*300*
5.	*Mallariyan Literature (in print)*	*200*
7.	*Frontyard without My Dad (Poem)*	*200*
2.	*Emerging Mallarism*	*100*

English Novel Part

1.	*Aranyani – Vijeni*	*300*
2.	*Genetic traits of Vengai anchor by Tamilmagan*	*250*
1.	*Love Thamizh (online multilingual monthly about Tamilnadu History Language and Culture)*	*500*

Tamil Classics in English (Selected Poems)

1.	*Ainkurunuuru*	*200*
2.	*Kurunthokai*	*200*
3.	*Puranaanuuru*	*200*
4.	*Pastoral Literature of Classic Tamil (Mullai Pattu & Mullai Kali)*	*300*
5.	*A Classic Portrait of Madurai City (Madurai – Kanchi (Tamil) – the earliest heroic poetry)*	*300*
6.	*Songs of Classic Tamil Poetess Avvai*	*300*

Didactic Literature

1.	*Naaladiyaar*	*200*
2.	*Aacharak Kovai*	*200*

Medievel Literature

1	*A peasant with two wives (Mukoodal Pallu)*	*300*

2	*A Predictress from the Hill (Thiru Kutrala Kuravanji)*	*300*
3	*One line guidelines in Tamil*	*200*

திருக்குறள் ஆய்வுநூல் வரிசை

1	உலகத் தமிழர்களின் ஒரே நூல் - திருக்குறள்	*200*
2	வாழ்வியல் வழிகாட்டி திருக்குறள்	*200*

Sangam Classics in Modern Tamil

1.	குறுந்தொகைக் கவிதைகள் (தற்காலத் தமிழில்)	*200*

Studies on Tamil Grammar

1.	தமிழ் இலக்கணத்தில் வேற்றுமை உருபுகள்	*300*

ஜோதிட நூல்கள்

1. மேஷ ராசி சூட்சும ரகசியம்

2 ரிஷப ராசியின் சூட்சம ரகசியம்

3 நவரத்தினமும் உபரத்தினமும்

4 மிதுன ராசியின் சூட்சம ரகசியம்

வாங்கிப் பயன் பெறவீர்!!! தொடர்புக்கு:

சம்சுல் ஹுதா பானு

99403 35306

பொருள் நலத்தால் ஓரளவு ஒத்துச் செல்லும் குறட்பாக்கள்



மு. பழநிச்சாமி
நூலக அதிகாரி– பணி ஓய்வு
நாகமலை, மதுரை –19

முந்தய இதழின் தொடர்ச்சி...

24. உடைமையில் இன்மையும் இன்மையுள் இன்மையும்
உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா
மடமை மடவார்கண் உண்டு. 89

இன்மையுள்இன்மை விருந்தொரால் வன்மையுள்
வன்மை மடவார்ப் பொறை. 153

கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு அடுக்கிய
கோடிஉண் டாயினும் இல். 1005

25. பணிவு - இனிய பண்பின் இயல்பு.
பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு
அணியல்ல மற்றுப் பிற. 95

எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்
செல்வர்க்கே செல்வம் தகைத்து. 125.

பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து. 960

நலம்வேண்டி னாணுடைமை வேண்டுங் குலம்வேண்டின்
வேண்டுக யார்க்கும் பணிவு. 978

ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அதுசான்றோர்
மாற்றாரை மாற்றும் படை. 985

26. பண்பு படிந்த சொல்லும்- தீச்சொல்லும்.
நயன்ஈன்று நன்றி பயக்கும் பயன்ஈன்று
பண்பின் தலைப்பிரியாச் சொல்.97

ஒன்றானுந் தீச்சொல் பொருட்பயன் உண்டாயின்
நன்றாகா தாகி விடும். 128

27. புன்மைப் பேச்சும்- பண்புடைப் பேச்சும்.
சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்
இம்மையும் இன்பம் தரும். 98

நகையுள்ளும் இன்னா திகழ்ச்சி பகையுள்ளும்
பண்புள பாடறிவார் மாட்டு. 995

28. தினை அளவும்- பனை அளவும்.
தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார். 104

தினைத்துணையாங் குற்றம் வரினும் பனைத்துணையாக்
கொள்வர் பழிநாணு வார். 433

29. மாசற்றார் கேண்மை.
மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க
துன்பத்துள் துப்பாயார் நட்பு. 106

மருவுக மாசற்றார் கேண்மைஒன் றீத்தும்
ஒருவுக ஒப்பிலார் நட்பு. 800

30. **நேர்மையற்ற வழியில் ஈட்டும் பொருள் தரும் கேடு.**
நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை
அன்றே யொழிய விடல். 113

நடுவின்றி நன்பொருள் வெஃகின் குடிபொன்றிக்
குற்றமும் ஆங்கே தரும். 171

களவினால் ஆகிய ஆக்கம் அளவிறந்து
ஆவது போலக் கெடும். 283

31. **பின் வருகிற சந்ததி (எச்சம்)**
செப்பம் உடையவன் ஆக்கஞ் சிதைவின்றி
எச்சத்திற் கேமாப்பு உடைத்து. 112

தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப் படும். 114

மனந்தூயார்க் கெச்சம்நன் றாகும் இனந்தூயார்க்கு
இல்லைநன் றாகா வினை. 456

32. **உபகாரி பற்றிய உலகியல் பார்வை.**
கெடுவாக வையாது உலகம் நடுவாக
நன்றிக்கண் தங்கியான் தாழ்வு. 117

நயனுடையான் நல்கூர்ந்தா னாதல் செயும்நீர
செய்யாது அமைகலா வாறு. 219

ஒப்புரவி னால்வரும் கேடெனின் அஃதொருவன்
விற்றுக்கோள் தக்க துடைத்து.220.

அறிவின்மை இன்மையுள் இன்மை பிறிதின்மை
இன்மையா வையா துலகு. 841.

இன்மை ஒருவற்கு இளிவன்று சால்பென்னும்
திண்மைஉண் டாகப் பெறின். 988.

33. **காக்க வேண்டியவை.**
காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்
அதனினூஉங் கில்லை உயிர்க்கு. 122.

பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கம் தெரிந்தோம்பித்
தேரினும் அஃதே துணை.132.

குற்றமே காக்க பொருளாகக் குற்றமே
அற்றந் த்ரூஉம் பகை. 434.

34. **அடக்கமும்- பொறுமையும்- பொய்யாமையும்.**
செறிவறிந்து சீர்மை பயக்கும் அறிவறிந்து
ஆற்றின் அடங்கப் பெறின். 123.

ஒறுத்தாரை ஒன்றாக வையாரே வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து. 155.

உள்ளத்தாற் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்து ளெல்லாம் உளன். 294.

35. நாவடக்கம்.
யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு. 127

ஆக்கமுங் கேடும் அதனால் வருதலால்
காத்தோம்பல் சொல்லின்கட் சோர்வு. 642.

36. **குடியும் குலமும்.**
ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும். 133.

குலஞ்சுடும் கொள்கை பிழைப்பின் நலஞ்சுடும்
நாணின்மை நின்றக் கடை. 1019.

37. **பொறாமையின் போக்கு.**
அழுக்கா றுடையான்கண் ஆக்கம்போன்று இல்லை
ஒழுக்க மிலான்கண் உயர்வு. 135.

அழுக்காறு எனஒரு பாவி திருச்செற்றுத்
தீயுழி உய்த்து விடும். 168.

38. **ஒழுக்கம் தவறினால் கேடு வரும்.**
அழுக்கா றுடையான்கண் ஆக்கம்போன்று இல்லை
ஒழுக்க மிலான்கண் உயர்வு. 135.

கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉம் இன்றிக் கெடும். 166.

39. **இழுக்கு நேராமல் ஒழுக்கம் ஓம்புக.**
ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின்
ஏதம் படுபாக் கறிந்து. 136

அழுக்காற்றின் அல்லவை செய்யார் இழுக்காற்றின்
ஏதம் படுபாக்கு அறிந்து. 164

40. **பெருமை பல பெற்றிருந்தும் என்ன பயன்?**
எனைத்துணையர் ஆயினும் என்னாம் தினைத்துணையும்
தேரான் பிறனில் புகல். 144.

வானுயர் தோற்றம் எவன்செய்யும் தன்னெஞ்சம்
தான்அறி குற்றப் படின். 272.

41. **விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலும்.**
அறன்வரையான் அல்ல செயினும் பிறன்வரையாள்
பெண்மை நயவாமை நன்று. 150.

அறங்கூறான் அல்ல செயினும் ஒருவன்
புறங்கூறான் என்றல் இனிது. 181.

42. **எள்ளி இகழ்ந்தவரைப் பொறுத்தலே தலை.**
அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தன்னை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை.151

திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து
அறனல்ல செய்யாமை நன்று. 157.

43. **தமக்குத் தாமே பகையாகி போதல்.**
அழுக்காறு உடையார்க்கு அதுசாலும் ஒன்னார்
வழுக்கியும் கேடீன் பது. 165.

அறிவிலார் தாந்தம்மைப் பீழிக்கும் பீழை
செறுவார்க்கும் செய்தல் அரிது. 843.

44. **திருமகள் தன் இடத்தை காலி செய்யும் இடங்கள்.**
அவ்வித்து அழுக்காறு உடையானைச் செய்யவள்
தவ்வையைக் காட்டி விடும். 167

வினைக்கண் வினையுடையான் கேண்மைவே றாக
நினைப்பானை நீங்கும் திரு. 519

இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்
திருநீக்கப் பட்டார் தொடர்பு. 920

45. **பாவியாகி வந்த வரவு.**
ழுக்காறு எனஒரு பாவி திருச்செற்றுத்
தீயுழி உய்த்து விடும். 168

இன்மை எனவொரு பாவி மறுமையும்
இம்மையும் இன்றி வரும். 1042

46. **வறுமையைச் சொல்லி, தீயவை செய்யற்க.**
இலமென்று வெ ்குதல் செய்யார் புலம்வென்ற
புன்மையில் காட்சி யவர்.174

இலன்என்று தீயவை செய்யற்க செய்யின்
இலனாகும் மற்றும் பெயர்த்து. 205

47. **பாழ்படும் அறிவு.**
அ ்கி அகன்ற அறிவென்னாம் யார்மாட்டும்
வெ ்கி வெறிய செயின். 175

அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்
தந்நோய்போல் போற்றாக் கடை. 315

48. **அருளும் பொருளும்**
அருள்வெ ்கி ஆற்றின்கண் நின்றான் பொருள்வெ ்கிப்
பொல்லாத சூழக் கெடும். 176

அருள்கருதி அன்புடைய ராதல் பொருள்கருதிப்
பொச்சாப்புப் பார்ப்பார்கண் இல். 285

49. **கள்ளப் பொருள் கொள்ளித் தீ**
வேண்டற்க வெ ்கியாம் ஆக்கம் விளைவயின்
மாண்டற் கரிதாம் பயன். 177

களவின்கண் கன்றிய காதல் விளைவின்கண்
வீயா விழுமம் தரும். 284

50. **உற்றாரைத் தூற்றாதீர்**

துன்னியார் குற்றமும் தூற்றும் மரபினார்
என்னைகொல்ஏதிலார் மாட்டு.188

துப்பின் எவனாவர் மன்கொல் துயர்வரவு
நட்பினுள் ஆற்று பவர். 1165

51. **பூமிக்குப் பாரம்**

அறன்நோக்கி ஆற்றுங்கொல் வையம் புறன்நோக்கிப்
புன்சொல் உரைப்பான் பொறை. 189

ஈட்டம் இவறி இசைவேண்டா ஆடவர்
தோற்றம் நிலக்குப் பொறை. 1003

கல்லார்ப் பிணிக்கும் கடுங்கோல் அதுவல்லது
இல்லை நிலக்குப் பொறை. 570

கண்ணோட்டத் துள்ளது உலகியல் அஃதிலார்
உண்மை நிலக்குப் பொறை. 572

சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலந்தான்
தாங்காது மன்னோ பொறை. 990

52. **பற்றிய குற்றங்களை நீக்கிப் பண்பு படிய வாழ்வதே வாழ்வு**

ஏதிலார் குற்றம்போல் தங்குற்றங் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு.190

தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றங் காண்கிற்பின்
என்குற்ற மாகும் இறைக்கு. 436

53. **தீயது ஒழியின்- நல்லது விளையும்.**

தீப்பால தான்பிறர்கண் செய்யற்க நோய்ப்பால
தன்னை அடல்வேண்டா தான்.206

நோயெல்லாம் நோய்செய்தார் மேலவாம் நோய்செய்யார்
நோயின்மை வேண்டு பவர். 320

54. **தீய சினத்தை, மனத்தே கொள்ளாதீர்**

எனைப்பகை யுற்றாரும் உய்வர் வினைப்பகை
வீயாது பின்சென்று அடும்.207

தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை
வீயாது அடிஉறைந் தற்று. 208

சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு
நிலத்தறைந்தான் கைபிழையாதற்று. 307

55. **தீவினை, உயிரைத் துயர் உறுத்தும்.**

தன்னைத்தான் காதல னாயின் எனைத்தொன்றும்
துன்னற்க தீவினைப் பால்.209

தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லுஞ் சினம்.305

56. **பிரதி பலன் பாராது பிறர்க்கு உதவுக.**
கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு
என்ஆற்றுங் கொல்லோ உலகு.211

கடன்என்ப நல்லவை எல்லாம் கடன்அறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு.981

57. **செல்வம் சுருங்கிய பொழுதும், மேன் மக்கள் உள்ளம் சுருங்கார்.**
இடனில் பருவத்தும் ஒப்புரவிற்கு ஒல்கார்
கடனறி காட்சி யவர். 218

வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பில் தலைப்பிரிதல் இன்று.955

சீருடைச் செல்வர் சிறுதுனி மாரி
வறங்கூர்ந் தனையது உடைத்து.1010

58. **கொள்வதும் கொடுப்பதும்**
ஒப்புரவி னால்வரும் கேடெனின் அஃதொருவன்
விற்றுக்கோள் தக்க துடைத்து.220

நல்லாறு எனினும் கொளல்தீது மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று.222

புரந்தார்கண் நீர்மல்கச் சாகிற்பின் சாக்காடு
இரந்துகோள் தக்கது உடைத்து.780

59. **நற்குடியில் பிறந்த மேலோர் பண்பு நலன்**
இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல்
குலனுடையான் கண்ணே யுள.223

நகைஈகை இன்சொல் இகழாமை நான்கும்
வகையென்ப வாய்மைக் குடிக்கு. 953

60. **வையம் புகழ வழங்கியருளுக**
உரைப்பார் உரைப்பவை எல்லாம் இரப்பார்க்கொன்று
ஈவார்மேல் நிற்கும் புகழ்.232

வசையென்ப வையத்தார்க் கெல்லாம் இசையென்னும்
எச்சம் பெறாஅ விடின்.238

எச்சம்என்று என்எண்ணும் கொல்லோ ஒருவரால்
நச்சப் படாஅ தவன்.1004

61. **அரிய பெரிய செல்வம்**
அருட்செல்வம் செல்வத்துள் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணும் உள.241

செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்து ளெல்லாந் தலை.411

62. **கருணை நீங்கின் கடும் துயர் எய்தும்**
பொருள்நீங்கிப் பொச்சாந்தார் என்பர் அருள்நீங்கி
அல்லவை செய்தொழுகு வார்.246

உயிர்உடம்பின் நீக்கியார் என்ப செயிர்உடம்பின்
செல்லாத்தீ வாழ்க்கை யவர்.330

63. **இகபர இன்பங்கள்**
அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு.247

பொருளாட்சி போற்றாதார்க்கு இல்லை அருளாட்சி
ஆங்கில்லை ஊன்தின் பவர்க்கு.252

64. **அருள் இல்லாதவனும் அறிவு இல்லாதவனும்**
தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால் தேரின்
அருளாதான் செய்யும் அறம்.249

அறிவிலான் நெஞ்சுவந்து ஈதல் பிறிதியாதும்
இல்லை பெறுவான் தவம்.842

65. **கொல்லாமையும் ஊன் தின்னாமையும்**
அருளல்ல தியாதெனிற் கொல்லாமை கோறல்
பொருளல்ல தவ்வூன் தினல்.254

அறவினை யாதெனின் கொல்லாமை கோறல்
பிறவினை எல்லாந் தரும்.321

66. **கொல்லா நலனும் சகித்துப் போவதுமே தவம்.**
உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு.261

கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு.984

67. **அற்புதக் கற்பகம்**
வேண்டிய வேண்டியாங் கெய்தலால் செய்தவம்
ஈண்டு முயலப் படும்.265

உள்ளிய தெல்லாம் உடனெய்தும் உள்ளத்தால்
உள்ளான் வெகுளி எனின்.309

வேண்டின்உண் டாகத் துறக்க துறந்தபின்
ஈண்டுஇயற் பால பல.342

68. **எமனையும் வெல்லலாம்**
வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்கும் கல்.38

கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட் டவர்க்கு.269

கொல்லாமை மேற்கொண் டொழுகுவான் வாழ்நாள்மேல்
செல்லாது உயிருண்ணுங் கூற்று.326

69. **மனச்சாட்சியே சீவசாட்சி**
வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும்.271

தன்நெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்நெஞ்சே தன்னைச் சுடும்.293

70. **தோற்றமும் ஏற்றமும்**
கணைகொடிது யாழ்கோடு செவ்விதுஆங் கன்ன
வினைபடு பாலால் கொளல்.279

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்.505

எனைவகையான் தேறியக் கண்ணும் வினைவகையான்
வேறாகும் மாந்தர் பலர்.514

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்.972

71. **மெய்யும் பொய்யும்**
யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற.300

ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று.323

72. **கோபத்தைக் கட்டுப்படுத்துக.**
இணர்எரி தோய்வன்ன இன்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று.308

கறுத்துஇன்னா செய்தவக் கண்ணும் மறுத்தின்னா
செய்யாமை மாசற்றார் கோள்.312

73. **குணநல முடையோரே சான்றோர்**
இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயஞ் செய்து விடல்.314

இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு.987

74. **நிலையற்றதும்பொருளற்றதும்**
நில்லாத வற்றை நிலையின என்றுணரும்
புல்லறி வாண்மை கடை.331

பொருளல்ல வற்றைப் பொருளென்று உணரும்
மருளானாம் மாணாப் பிறப்பு. 351

75. **முற்றாகத் துடைத்தெறிய வேண்டும்**
அடல்வேண்டும் ஐந்தன் புலத்தை விடல்வேண்டும்
வேண்டிய வெல்லாம் ஒருங்கு.343

வினைபகை என்றிரண்டின் எச்சம் நினையுங்கால்
தீயெச்சம் போலத் தெறும்.674

76. **உண்மைப் பொருளை உணர்தல்**
பொருளல்ல வற்றைப் பொருளென்று உணரும்
மருளானாம் மாணாப் பிறப்பு.351

அவாஎன்ப எல்லா உயிர்க்கும் எஞ்ஞான்றும்
தவாஅப் பிறப்பீனும் வித்து.361

பொருளானாம் எல்லாம்என்று ஈயாது இவறும்
மருளானா மாணாப் பிறப்பு.1002

77. ஒளி பெரும் வழி

இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு. 5

இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி
மாசறு காட்சி யவர்க்கு.352

78. செல்வம் நிலைப்பதும் போவதும்

செப்பம் உடையவன் ஆக்கஞ் சிதைவின்றி
எச்சத்திற் கேமாப்பு உடைத்து.112

பரியினும் ஆகாவாம் பாலல்ல உய்த்துச்
சொரியினும் போகா தம.376

அழக்கொண்ட எல்லாம் அழப்போம் இழப்பினும்
பிற்பயக்கும் நற்பா லவை.659

79. வறுமை யாரையும் வாட்டும்

துறப்பார்மன் துப்புர வில்லார் உறற்பால
ஊட்டா கழியு மெனின்.378

துப்புர வில்லார் துவரத் துறவாமை
உப்பிற்கும் காடிக்கும் கூற்று.1050

80. இன்ப துன்பத்தில் சமனொத் திருத்தல்

நன்றாங்கால் நல்லவாக் காண்பவர் அன்றாங்கால்
அல்லற் படுவ தெவன்.379

தெரிந்துணரா நோக்கிய உண்கண் பரிந்துணராப்
பைதல் உழப்பது எவன்.1172

81. தன் நற்பண்பால், உலகோரைத் தன்வசம் வைத்திருத்தல்

இன்சொலால் ஈத்தளிக்க வல்லார்க்குத் தன்சொலால்
தான்கண் டனைத்திவ் வுலகு.387

செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கும் உலகு.389

பகைநட்பாக் கொண்டொழுகும் பண்புடை யாளன்
தகைமைக்கண் தங்கிற்று உலகு.874

82. கற்றலும் கற்றபடி நிற்றலும்

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.391

ஓதி உணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப்
பேதையின் பேதையார் இல்.834

83. **கண்ணும் புண்ணும்**
கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.393

கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம் அஃதின்றேல்
புண்ணென்று உணரப் படும்.575

84. **கற்ற அளவிற்கு ஏற்ப அறிவு வளரும்**
தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு.396

நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு.783

அறிதோறு அறியாமை கண்டற்றால் காமம்
செறிதோறும் சேயிழை மாட்டு.1110

85. **கல்லாதவனின் செருக்கு**
கல்லா ஒருவன் தகைமை தலைப்பெய்து
சொல்லாடச் சோர்வு படும்.405

கல்லாத மேற்கொண் டொழுகல் கசடற
வல்லதூஉம் ஐயம் தரும்.845

86. **செல்வம் பற்றிய சிந்தனை**
நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னாதே
கல்லார்கண் பட்ட திரு.408

இன்மையின் இன்னாது உடைமை முறைசெய்யா
மன்னவன் கோற்கீழ்ப் படின்.558

பழிமலைந்து எய்திய ஆக்கத்தின் சான்றோர்
கழிநல் குரவே தலை.657

இன்மையின் இன்னாதது யாதெனின் இன்மையின்
இன்மையே இன்னா தது.1041

87. **கற்றார், கல்லாதார் வேறுபாடு**
விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர்.410

குறித்தது கூறாமைக் கொள்வாரோ டேனை
உறுப்போ ரனையரால் வேறு.704

88. **சொல்வதும் கேட்பதும்**
எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்ப தறிவு.424

சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லுஞ்சொல் இன்மை அறிந்து.645

89. **ஆவது அறியும் அறிவு**
அறிவுடையார் ஆவ தறிவார் அறிவிலார்
அஃதறி கல்லா தவர்.427

எதிரதாக் காக்கும் அறிவினார்க் கில்லை
அதிர வருவதோர் நோய்.429

வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்.435

90. **பேதையர் செயல்**
அஞ்சுவ தஞ்சாமை பேதைமை அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில்.428

நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும்
பேணாமை பேதை தொழில்.833

91. **உலோபியின் செல்வம்**
செயற்பால செய்யா திவறியான் செல்வம்
உயற்பால தன்றிக் கெடும்.437

கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு அடுக்கிய
கோடிஉண் டாயினும் இல்.1005

92. **பெரியாரைப் பேணுதல்**
அரியவற்று ளெல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்.443

சிறியார் உணர்ச்சியுள் இல்லை பெரியாரைப்
பேணிக்கொள் வேம்என்னும் நோக்கு.976

93. **பலரின் பகையைத் தேடிக் கொள்ளாதீர்**
பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல்.450

நல்லினத்தி னூங்குந் துணையில்லை தீயினத்தின்
அல்லற் படுப்பதூஉம் இல்.460

ஏமுற் றவரினும் ஏழை தமியனாய்ப்
பல்லார் பகைகொள் பவன்.873

94. **நீரும் நிலமும்**
நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்கு
இனத்தியல்ப தாகும் அறிவு.452

புலத்தலின் புத்தேள்நாடு உண்டோ நிலத்தொடு
நீரியைந் தன்னார் அகத்து.1323

95. **முதலுக்கு மோசம் போகும் காசாசை**
ஆக்கம் கருதி முதலிழக்கும் செய்வினை
ஊக்கார் அறிவுடை யார்.463

பேதைமை என்பதொன்று யாதெனின் ஏதங்கொண்டு
ஊதியம் போக விடல்.831

96. **அடங்கி இருந்து செயல் புரிக**
அமைந்தாங் கொழுகான் அளவறியான் தன்னை
வியந்தான் விரைந்து கெடும்.474

செறுநரைக் காணின் சுமக்க இறுவரை
காணின் கிழக்காம் தலை.488

97. மட்டுமீறிப் போனால் மாட்டிக் கொள்ள நேரிடும்
நுனிக்கொம்பர் ஏறினார் அஃதிறந் தூக்கின்
உயிர்க்கிறுதி ஆகி விடும்.476

சிறுபடையான் செல்லிடம் சேரின் உறுபடையான்
ஊக்கம் அழிந்து விடும்.498

98. தன் முன்னேற்றச் சிந்தனை
அருவினை யென்ப உளவோ கருவியான்
காலம் அறிந்து செயின்.483

அரியஎன்று ஆகாத இல்லைபொச் சாவாக்
கருவியால் போற்றிச் செயின்.537

உள்ளியது எய்தல் எளிதுமன் மற்றுந்தான்
உள்ளியது உள்ளப் பெறின்.540

அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்.611

எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்.666

சூழாமல் தானே முடிவெய்தும் தம்குடியைத்
தாழாது உஞற்று பவர்க்கு.1024

99. குடிப்பிறப்பு
குடிப்பிறந்து குற்றத்தின் நீங்கி வடுப்பரியும்
நாணுடையான்கட்டே தெளிவு.502

குடிப்பிறந்து தன்கண் பழிநாணு வானைக்
கொடுத்தும் கொளல்வேண்டும் நட்பு. 794

100. யாரைப் பணிக்கு வைக்க வேண்டும்
அற்றாரைத் தேறுதல் ஓம்புக மற்றவர்
பற்றிலர் நாணார் பழி.507

அறிந்தாற்றிச் செய்கிற்பாற்கு அல்லால் வினைதான்
சிறந்தானென்று ஏவற்பாற் றன்று. 515.

101. பழமை
பற்றற்ற கண்ணும் பழைமைபா ராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே உள.521

எல்லைக்கண் நின்றார் துறவார் தொலைவிடத்தும்
தொல்லைக்கண் நின்றார் தொடர்பு.806

102. செயலாற்றல்
அச்ச முடையார்க்கு அரணில்லை ஆங்கில்லை
பொச்சாப் புடையார்க்கு நன்கு.534

எனைத்திட்பம் எய்தியக் கண்ணும் வினைத்திட்பம்
வேண்டாரை வேண்டாது உலகு.670

எனைமாட்சித் தாகியக் கண்ணும் வினைமாட்சி
இல்லார்கண் இல்லது அரண்.750

103. **சமன் செய்து சீர் தூக்கும் கோல்**
அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
நின்றது மன்னவன் கோல்.543

ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூல்மறப்பர்
காவலன் காவான் எனின்.560

104. **இரக்கம் (தாட்சண்யம்)**
கண்ணோட்டம் என்னும் கழிபெருங் காரிகை
உண்மையான் உண்டிவ் வுலகு.571

பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மன்.996

105. **அளவு கடந்த இரக்கம்**
உளபோல் முகத்தெவன் செய்யும் அளவினால்
கண்ணோட்டம் இல்லாத கண்.574

கருமம் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு
உரிமை உடைத்திவ் வுலகு.578

106. **உயர்வையே கருதுக**
உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினுந் தள்ளாமை நீர்த்து.596

பொறியின்மை யார்க்கும் பழியன்று அறிவறிந்து
ஆள்வினை இன்மை பழி.618

உள்ளற்க உள்ளம் சிறுகுவ கொள்ளற்க
அல்லற்கண் ஆற்றறுப்பார் நட்பு.798

107. **உதவி- உபகாரம்- விடாமுயற்சி**
உள்ளம் இலாதவர் எய்தார் உலகத்து
வள்ளியம் என்னுஞ் செருக்கு.598

தாளாண்மை என்னும் தகைமைக்கண் தங்கிற்றே
வேளாண்மை என்னுஞ் செருக்கு.613

தாளாண்மை இல்லாதான் வேளாண்மை பேடிகை
வாளாண்மை போலக் கெடும்.614

108. **தள்வதும் கொள்வதும்**
நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்
கெடுநீரார் காமக் கலன்.605

குடிசெய்வார்க் கில்லை பருவம் மடிசெய்து
மானங் கருதக் கெடும்.1028

109. எடுத்த காரியத்தை மிச்சம் வைக்காமல் செய்ய வேண்டும்

வினைக்கண் வினைகெடல் ஓம்பல் வினைக்குறை
தீர்ந்தாரின் தீர்ந்தன்று உலகு.612

வினைபகை என்றிரண்டின் எச்சம் நினையுங்கால்
தீயெச்சம் போலத் தெறும்.674

110. குடும்பத்தை, மேல் நிலைக்குக் கொண்டு வருபவன்

இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்
துன்பம் துடைத்தூன்றும் தூண்.615

அமரகத்து வன்கண்ணர் போலத் தமரகத்தும்
ஆற்றுவார் மேற்றே பொறை.1027

111. தீயவனின் நெருக்கமும் மூடனின் நட்பும்

பழுதெண்ணும் மந்திரியின் பக்கத்துள் தெவ்வோர்
எழுபது கோடி உறும்.639

பேதை பெருங்கெழீஇ நட்பின் அறிவுடையார்
ஏதின்மை கோடி உறும்.816

112. பழி கலந்த இழி செயலைச் செய்யலாகாது

இடுக்கட் படினும் இளிவந்த செய்யார்
நடுக்கற்ற காட்சி யவர்.654

ஈன்றாள் பசிகாண்பான் ஆயினுஞ் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை.656

அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்தல் இலர்.954

இன்றி அமையாச் சிறப்பின ஆயினும்
குன்ற வருப விடல்.961

113. கழிவிரக்கம்

எற்றென்று இரங்குவ செய்யற்க செய்வானேல்
மற்றன்ன செய்யாமை நன்று.655

ஊறொரால் உற்றபின் ஒல்காமை இவ்விரண்டின்
ஆறென்பர் ஆய்ந்தவர் கோள்.662

114. கொடுத்துக் கொள்வதும் கொடுத்து விலக்குவதும்

குறிப்பிற் குறிப்புணர் வாரை உறுப்பினுள்
யாது கொடுத்தும் கொளல்.703

குடிப்பிறந்து தன்கண் பழிநாணு வானைக்
கொடுத்தும் கொளல்வேண்டும் நட்பு.794

மருவுக மாசற்றார் கேண்மைஒன் றீத்தும்
ஒருவுக ஒப்பிலார் நட்பு.800

கொடுத்தும் கொளல்வேண்டும் மன்ற அடுத்திருந்து
மாணாத செய்வான் பகை.867

115. முகக் குறிப்பறிந்து செய்வதே உதவி
முகம்நோக்கி நிற்க அமையும் அகம்நோக்கி
உற்ற துணர்வார்ப் பெறின்.708

கரப்பிலார் வையகத்து உண்மையால் கண்ணின்று
இரப்பவர் மேற்கொள் வது.1055

116. இழுத்து மூச்சு விட்டால் என்னாகும்?
ஒலித்தக்கால் என்னாம் உவரி எலிப்பகை
நாகம் உயிர்ப்பக் கெடும்.763

உயிர்ப்ப உளரல்லர் மன்ற செயிர்ப்பவர்
செம்மல் சிதைக்கலா தார்.880

117. பேராண்மையும் இல்லாண்மையும்
பேராண்மை என்ப தறுகண்ஒன் றுற்றக்கால்
ஊராண்மை மற்றதன் எஃகு.773

நல்லாண்மை என்பது ஒருவற்குத் தான்பிறந்த
இல்லாண்மை ஆக்கிக் கொளல்.1026

118. பயன்பட்ட நல்ல நாள்
விழுப்புண் படாதநாள் எல்லாம் வழுக்கினுள்
வைக்கும்தன் நாளை எடுத்து.776

கேளிழுக்கம் கேளாக் கெழுதகைமை வல்லார்க்கு
நாளிழுக்கம் நட்டார் செயின்.808

119. இடித்துச் சொல்லித் தோள் கொடுத்து உதவுவதே நட்பு
அழிவி னவைநீக்கி ஆறுய்த்து அழிவின்கண்
அல்லல் உழப்பதாம் நட்பு.787

அழச்சொல்லி அல்லது இடித்து வழக்கறிய
வல்லார்நட்பு ஆய்ந்து கொளல்.795

120. பண்பிலார் மற்றும் பேதையர் நட்பு
பருகுவார் போலினும் பண்பிலார் கேண்மை
பெருகலிற் குன்றல் இனிது.811

பெரிதினிது பேதையார் கேண்மை பிரிவின்கண்
பீழை தருவதொன் றில்.839

121. வஞ்சரை .அஞ்சி அகல வேண்டும்
நகைவகைய ராகிய நட்பின் பகைவரால்
பத்தடுத்த கோடி உறும்.817

முகத்தின் இனிய நகாஅ அகத்தின்னா
வஞ்சரை அஞ்சப் படும்.824

122. நடித்து வரும் நயவஞ்சகரை அணுகலாகாது
ஒல்லும் கருமம் உடற்று பவர்கேண்மை
சொல்லாடார் சோர விடல்.818

மிகச்செய்து தம்மெள்ளு வாரை நகச்செய்து
நட்பினுள் சாப்புல்லற் பாற்று.829

பகைநட்பாம் காலம் வருங்கால் முகநட்டு
அகநட்பு ஒரீஇ விடல்.830

123. **உள்ளம் பொருந்தாத கள்ள நட்பு**
கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு.819

இனம்போன்று இனமல்லார் கேண்மை மகளிர்
மனம்போல வேறு படும்.822

124. **நடிக்கும் நண்பர்களின் சொற்களை நம்பாதீர்**
நட்டார்போல் நல்லவை சொல்லினும் ஒட்டார்சொல்
ஒல்லை உணரப் படும்.826

செப்பின் புணர்ச்சிபோல் கூடினும் கூடாதே
உட்பகை உற்ற குடி.887

125. **நட்பில் ஊடாடும் வில்லும் வாளும்**
சொல்வணக்கம் ஒன்னார்கண் கொள்ளற்க வில்வணக்கம்
தீங்கு குறித்தமை யான்.827

வாள்போல பகைவரை அஞ்சற்க அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு.882

126. **தாமே தம்மைத் துன்பத்திற்கு ஆளாக்குதல்.**
ஒருமைச் செயலாற்றும் பேதை எழுமையும்
தான்புக் கழுந்தும் அளறு.835

அறிவிலார் தாந்தம்மைப் பீழிக்கும் பீழை
செறுவார்க்கும் செய்தல் அரிது.843

127. **ஓட்டை நெஞ்சும் மறப்பும் கேடும்**
அருமறை சோரும் அறிவிலான் செய்யும்
பெருமிறை தானே தனக்கு.847

அறைபறை அன்னர் கயவர்தாம் கேட்ட
மறைபிறர்க்கு உய்த்துரைக்க லான்.1076

128. **பண்பற்ற பகை என்னும் நோய்**
இகலென்ப எல்லா உயிர்க்கும் பகலென்னும்
பண்பின்மை பாரிக்கும் நோய்.851

பகைஎன்னும் பண்பி லதனை ஒருவன்
நகையேயும் வேண்டற்பாற்று அன்று.871

129. **மானம் காத்து நிற்க வேண்டும்**
நோவற்க நொந்தது அறியார்க்கு மேவற்க
மென்மை பகைவர் அகத்து.877

பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய
சுருக்கத்து வேண்டும் உயர்வு.963

130. பிஞ்சுப் பருவத்திலேயே பகையைக் கிள்ளி எறிந்து விடு

இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து.879

எட்பக வன்ன சிறுமைத்தே ஆயினும்
உட்பகை உள்ளதாங் கேடு.889

131. தாயாலும் தவிர்க்கப்படும் நிலை

ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால் என்மற்றுச்
சான்றோர் முகத்துக் களி.923

அறஞ்சாரா நல்குரவு ஈன்றதா யானும்
பிறன்போல நோக்கப் படும்.1047

132. உண்பதும் செரிப்பதும்

மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்.942

உணலினும் உண்டது அறல்இனிது காமம்
புணர்தலின் ஊடல் இனிது.1326

133. மானமும் நாணமும்

மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்.969

நாணால் உயிரைத் துறப்பர் உயிர்ப்பொருட்டால்
நாண்துறவார் நாணாள் பவர்.1017

134. சிறியாரின் செருக்கு

இறப்பே புரிந்த தொழிற்றாம் சிறப்புந்தான்
சீரல் லவர்கண் படின்.977

அகப்பட்டி ஆவாரைக் காணின் அவரின்
மிகப்பட்டுச் செம்மாக்கும் கீழ்.1074

135. பெருமையும் சிறுமையும்

அற்றம் மறைக்கும் பெருமை சிறுமைதான்
குற்றமே கூறி விடும்.980

கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு.984

ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அதுசான்றோர்
மாற்றாரை மாற்றும் படை.985

உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல்
வடுக்காண வற்றாகும் கீழ்.1079

136. சால்பு

அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு
ஐந்துசால் ஊன்றிய தூண்.983

ஊனைக் குறித்த உயிரெல்லாம் நாண்என்னும்
நன்மை குறித்தது சால்பு.1013

137. ஈகை இலான் செல்வம் வீண்

பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்
கலந்தீமை யாற்றிரிந் தற்று.1000

அற்றார்க்கொன்று ஆற்றாதான் செல்வம் மிகநலம்
பெற்றாள் தமியள்மூத் தற்று.1007

நச்சப் படாதவன் செல்வம் நடுவூருள்
நச்சு மரம்பழுத் தற்று.1008

138. வறுமையில் துன்பங்கள் திரண்டு வந்து குலை நடுங்கச் செய்யும்

நல்குரவு என்னும் இடும்பையுள் பல்குரைத்
துன்பங்கள் சென்று படும்.1045

இன்றும் வருவது கொல்லோ நெருநலும்
கொன்றது போலும் நிரப்பு.1048

139. பிச்சை எடுத்து வாழாமல் முயன்று வாழ்க

தெண்ணீர் அடுபுற்கை ஆயினும் தாள்தந்தது
உண்ணலின் ஊங்கினிய தில்.1065

தம்மில் இருந்து தமதுபாத்து உண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு.1107

140. காம வயப்பட்டார் கருத்தழிவர்

ஒண்ணுதற் கோஒ உடைந்ததே ஞாட்பினுள்
நண்ணாரும் உட்குமென் பீடு.1088

நாணொடு நல்லாண்மை பண்டுடையேன் இன்றுடையேன்
காமுற்றார் ஏறும் மடல்.1133

காமக் கடும்புனல் உய்க்கும் நாணொடு
நல்லாண்மை என்னும் புணை.1134

141. கள்ளினும் காமம் இனிது

உண்டார்கண் அல்லது அடுநறாக் காமம்போல்
கண்டார் மகிழ்செய்தல் இன்று. 1090

தீராப் பெருமகிழ் செய்தலால்
கள்ளினும் காமம் இனிது.1201

உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும்
கள்ளுக்கில் காமத்திற் குண்டு 1281

142. காம தாபத்தின் இயல்பு

தாம்விழ்வார் மென்றோள் துயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணான் உலகு. 1103

நீங்கின் தெறூஉம் குறுகுங்கால் தண்ணென்னும்
தீயாண்டுப் பெற்றாள் இவள். 1104

தொடிற்சுடின் அல்லது காமநோய் போல
விடிற்சுடல் ஆற்றுமோ தீ.1159

143. **காதலியுடனான இன்பானுபவம்**
வேட்ட பொழுதின் அவையவை போலுமே
தோட்டார் கதுப்பினாள் தோள். 1105

தம்மில் இருந்து தமதுபாத்து உண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு.1107

அறிதோறு அறியாமை கண்டற்றால் காமம்
செறிதோறும் சேயிழை மாட்டு. 1110

144. **ஊடலும் கூடலும்**
ஊடல் உணர்தல் புணர்தல் இவைகாமம்
கூடியார் பெற்ற பயன். 1109

ஊடுதல் காமத்திற்கு இன்பம் அதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின்.1330

145. **அழகு தவழும் கண்ணும், அழகிழந்த கண்ணும்.**
காணின் குவளை கவிழ்ந்து நிலன்நோக்கும்
மாணிழை கண்ணொவ்வேம் என்று. 1114

சிறுமை நமக்கொழியச் சேட்சென்றார் உள்ளி
நறுமலர் நாணின கண்.1231

146. **சிற்றிடையுடனும் சிற்றடியுடனும் ஒட்டி வந்த அனிச்சப்பூ**
அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாள் நுகப்பிற்கு
நல்ல படாஅ பறை.1115

அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம்.1120

147. **காதலன் காதலி உயிரொன்றி நிற்றல்**
உடம்பொடு உயிரிடை என்னமற் றன்ன
மடந்தையொடு எம்மிடை நட்பு. 1122

வாழ்தல் உயிர்க்கன்னள் ஆயிழை சாதல்
அதற்கன்னள் நீங்கும் இடத்து. 1124

எளிய முறையில் யாப்பறிவோம்.

நெருப்பலையார்.இராம இளங்கோவன்
பொருளாளர், பெங்களூர் தமிழ்ச் சங்கம், பெங்களூர்.

பாடம்: 39.
வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா

அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பாவுக்கு அடுத்து வரும் பாடம், **வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா** வாகும். இவ் வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பாவுக்கு அடிதோறும் நான்கு சீர்கள் கொண்ட அளவடிகளாக ஆறடித் **தரவு,** அடி தோறும் நான்கு நான்கு சீர்கள் கொண்ட அளவடியாக நான்கு அடிகளில் பயின்று வந்த மூன்று **தாழிசைகள்** அடுத்து வருவது **அராகம்** என்னும் **வண்ணகம்** எழுச்சீர் கொண்ட நான்கடிகள், தொடர்ந்து, நாற்சீர் ஈரடியால் ஆன இரண்டு **பேரெண்,** நாற்சீர் அளவடியில் ஓரடியால் வந்த நான்கடியின் **அளவெண்,** முச்சீர் பெற்ற எட்டடியில் வரும் **இடையெண்,** இரு சீர்களில் அமைந்த பதினாறடிகள் கொண்ட **சிற்றெண்** ஆகிய இவ் உறுப்புகளைப் பெற்ற **அம்போதரங்கம்,** பின்னர் **தனிச்சொல்** பாடலின் ஈற்றில் தரவோடொத்து வந்த ஆறடி ஆசிரியம் அல்லது வெண்பாவில் அமையும் **சுரிதகம்** வந்து பாடல் நிறைவுறும்.

கடை எண் என்னும் சிற்றெண் தவிர்த்து, மற்ற உறுப்பின் அடிகள் அடி தோறும் முதல் சீருக்கும் மூன்றாம் சீருக்கும் பொழிப்பு மோனையில் அமைதல் வேண்டும். எல்லா உறுப்புகளிலும் இரண்டடிக்கோர் எதுகை அமைந்து வரும். சுரிதகத்தின் ஈற்றடியில் ஈற்றுச் சீர் **ஏகாரத்தில்** முடிதல் வேண்டும். ஈற்றயலடி என்ற ஈற்றடிக்கு முன்னால் அமைந்த அடி மூச்சீராக அமையும். இனி, வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பாவுக்காக ஓர் எடுத்துக் காட்டுப் பாடலைக் கீழே காண்போம்.

வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பாவுக்கான எடுத்துக் காட்டுப் பாடல் கீழே காண்போம்:

ஆறடியில் அமைந்த தரவு:

படிப்படியாய் முன்னேற, படிப்படியாய் ஏறிடவே,
படிப்படிநீ உலகினையும்; படிப்படிநீ ஒவ்வொன்றை;
படிப்படியாய் அளக்காமல், பாரளவு படித்திடுவாய்;
படித்தல்போல் வேறொருநல் பழகிடும்சீர் நண்பனில்லை;
படிப்பதாலே நல்லநல்ல பண்புடைய வடிவமாவாய்;

படிப்பதையும் உணர்ந்திட்டால் பாருமேதான் ஒன்றாகும்!

நான்கடித் தாழிசை:1.

விண்ணுலகை, வெண்ணிலவு, விடிவெள்ளி, விரிகதிரை,
விண்மீன்கள், வானவில்லை, வீசுகின்றப் பெருங்காற்றை,
எண்ணியெண்ணி ஒவ்வொன்றாய் இயற்கையான அனைத்தையுமே,
கண்விரியப் படித்திடுவாய்; கண்டதையும் படித்துணர்வாய்!

நான்கடித் தாழிசை:2.

மரஞ்செடிகள், கொடிகளையும், மறைந்திருக்கும் மூலிகையும்,
அரவத்தைத் தேளினையும், ஆய்ந்தறிந்து படித்திடுவாய்;
அரணாக எவையெவைகள் அதுகாக்கும் என்பதையும்,
இரவினையும் இருளோட்டும் இன்னொளியும் படித்திடுவாய்!

நான்கடித் தாழிசை:3.

ஓரறிவின், ஈரறிவின் உயிரினமும், மூன்றறிவின்
ஆருயிராம் நான்கறிவின் ஐந்தறிவின் ஆறறிவின்
சீருயிராம் மாந்தனையும் சின்னசின்ன ஆற்றலையும்
பாருக்குள் அனைத்துயிரைப் பாங்குடனே படித்திடுவாய்!

அறுசீர்கள் கொண்ட நான்கடி அராகம்:

கார்முகில் பயன்தனை, கரைகிற மழைதனை, காற்றெனும் தென்றல்தனை,
நீர்வரும் அருவியை, நீண்டோடும் ஆற்றினை, நீரோடை வழிகள்தனை,
வேர்களின் வேட்கையை, விழுததின் வேள்வியை, விழுந்திடும் இலைகள்தனை,
சீர்மரக் கொடிகளின் செடிகளின் காய்க்கனி, சீருடன் படித்திடுகவே!

நான்கு சீர்களில் நான்கடியில் அமைந்த இரண்டாம் அம்போதரங்கப் பேரெண்:

அறிவியல் படித்திடு; அடிமனம் படித்திடுவாய்;
வறியவர் வாழ்வியலை, வறுமையைப் படித்திடுவாய்;
நெறிமுறை வாழ்வியலை நேர்மையைப் படித்திடுவாய்;
குறியெனக் கொள்கையைக் குன்றிடாது படித்திடுவாய்!

நான்கு சீர்களில் நான்கடியில் அமைந்த நான்காம் அம்போதரங்க அளவெண்:

பிறப்பினையும் வளர்ப்பினையும் பெரிதுவக்கும் கல்வியையும்,
இறப்பினையும் இருக்கின்ற இன்பமான வாழ்வினையும்,
மறவத்தை மாண்பினையும், மழலையினை, விளையாடலை,
உறவுகளை உற்றபல உறவுகளைப் படித்திடுவாய்!

முச்சீர்களில் அமைந்த எட்டடிக் கொண்ட அம்போதரங்க இடையெண்:

கொந்தளிக்கும் ஆழ்கடலைக் காண்;
குமுறுகிற எரிமலையைக் காண்;
கடலுக்குள் வாழ்வதையும் கேள்;

கப்பலையும் அணுவணுவாய் அறி;
நங்கூரம் போலுதவ நினை;
நடுக்கடலில் பவழத்தை எடு;
மழையுமது முத்தாவ தெப்படி?
மாந்தனேநீ முத்தாகப் படி!

இரு சீர்களில் பதினாறடியில் அமைந்த அம்போதரங்கக் கடையெண்.(சிற்றெண்):

வீட்டினதன் விலங்கையறி;
காட்டிலுள்ள விலங்கையறி;
நாட்டிலுள்ள விலங்கையறி;
நன்றாகப் படித்தறிநீ;
கற்றதையும் கலந்தாய்ந்து
பற்றுடனே படித்தறிநீ;
ஒவ்வொரு விலங்கதின்
ஒவ்வொரு குணத்தையும்
படிப்படியாய் படித்தறிநீ;
இடியென நெஞ்சினில்
இறங்கிடவே படித்தறிநீ;
இறக்கமும் இரக்கமும்
வேறுவேறு என்றுணர்ந்தே
கூறுகூறாய் ஆக்கியேநீ
நாருநாராய்த் தீமையைப்
பாருக்கு ணர்த்தபடி!

தனிச்சொல்: *இதனால்,*

தரவோடொத்து வந்த ஆறடியில் அமைந்த ஆசிரியச் சுரிதகம்:

உள்ளமும் உணர்ந்தே ஊன்றியே படித்திடு;
கள்ளமும் நீக்கிக் கனிவுடன் படித்திடு;
படிப்பதின் ஆழமும் பக்க அகலமும்
படிப்பதில் அளந்தே பாங்காய்ப் படித்திடு;
பலவும் நாளும் படித்திடு;
உலகில் நீயே உயர்வாய்த் தானே!

வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பாவைத் தொடர்ந்து அடுத்து வரும் பாடம், **தரவு கொச்சகக் கலிப்பா** வகையிலே **தரவு, தனிச்சொல், சுரிதகம்** போன்ற உறுப்புகள் மாறி மாறி வரும் வேறு வகைப் பாடலை யாப்பிலக்கணக் குறிப்புடன் ஆய்ந்தறிந்து பயிற்சி எடுப்போம்.

யாப்பிலக்கணம் வளரும்.

தொடரும் இன்காவின் தங்க வேட்டை !!

டாக்டர். அண்ணாமலை சுகுமாரன்
ஆராய்ச்சியாளர், புதுவை

நூற்றுக்கணக்கான டன்கள் எடையுள்ள புதையல் தங்கத்தைத் தேடி நெடுநாட்களாக நடைபெறும் ஒரு தொடர் ஆய்வை ப்பற்றி அறிவீர்களா ? நமது நாட்டின் திருவனந்த புரம் பத்மநாபர் கோவில் பற்றியது அல்ல அது தென்னமஇன்கா ரிக்காவின் இன்கா நாகரீகத்தின் அளவிடமுடியாத தங்கப்புதையலைப்பற்றிய வரலாறு .

இன்கா நாகரிகம்என்பது தென்னமெரிக்காவில் நிலவிய குறிப்பிடத்தக்க தொல் நாகரிகமாகும். அது வீழ்ச்சியடைந்த போது உலகின் மிகப் பெரிய பேரரசுகளில் ஒன்றாக இன்கா பேரரசு விளங்கியது . பெருவின் உயர்நிலப்பகுதிகளில்கி. பி. 1200 ஆம் ஆண்டளவில் இந்த நாகரீகம் தோன்றியது. 1533 வரையான காலப்பகுதியில் போர்கள் மூலமும் சமாதான வழிமுறைகளாலும் மேற்குத் தென்னமெரிக்காவின் பெரும்பகுதியை, குறிப்பாக இன்றைய ஈக்குவடோர், பெரு, பொலிவியா, ஆர்ஜென்டீனா போன்றவற்றை உள்ளடக்கி இன்காப் பேரரசாக வளர்ந்ததுஇதன் தோற்றம் குறித்து தென்னமெரிக்க சோழர்கள் என்று ஒரு ஆய்வுபுத்தகமாக சுமார் 30 ஆண்டுகளுக்கு முன் மனோகரன் என்பவரால்

வெளியிடப்பட்டிருந்தது .அது தனி ஆய்வு .இப்போது காணப்போவது அந்த நாகரீகத்தின் வரலாறு .அல்ல , அந்த நாகரீகத்தின் கடைசி பகுதியில் நிகழ்ந்த சோக நிகழ்வுகள் ஆகும் ..1533 இல் அடஹுஅல்பா

(Atahualpa)என்ற கடைசி இன்காப் பேரரசர் வஞ்சகமாக கொலை செய்யப்பட்டதோடு ஸ்பானிய ஆட்சி தொடங்கியது. 1572 இல் கடைசி இன்கா ஆட்சியாளரும் கொல்லப்படதோடு இன்கா அரசு முழுமையாக இல்லாதொழிந்தது.வெறும் 177 வீரர்களுடன் மட்டுமே வந்த ஸ்பானிஷ் தளபதி பிசாரோ இன்காவின் அடஹுஅல்பா என்ற இன்கா மன்னரை வஞ்சகமாக கொடூரமாகக் கொன்றான். மன்னன் தெய்வாம்சம் பொருந்தியவன், அவனையே கொன்று விட்டார்கள் என கருதியதால் மக்கள் கிளர்ந்தெழவில்லை. அதன் விளைவாக 433 ஆண்டுகள் சாயாதிருந்த இன்கா பேரரசின் முடி சாய்ந்தது

1532 இல் ஸ்பானிஷ் சிறிய படையின் தளபதி பிசரியோ தனது 177 பேர் கொண்ட மிகத் சிறியப்படையுடன் இக்காவின் பக்கம் வருகிறார் அதன் செலவச் செழிப்பும் ,மக்களின் சீரிய வாழ்க்கையும் அவரின் பேராசையு ம் பொல்லாத குணத்தைத் தூண்டிவிடுகிறது .அவர் ஒரு மிகப்பெரிய வஞ்சக முயற்சி ஒன்றை மேற்கொள்ள திட்டமிடுகிறார்.அங்கிருந்த பிரம்மாண்டமான கற்சிலைகளையும்,கட்டிடங்களும் கொட்டிக் கிடக்கும் தங்கக்

குவியலையும் பார்த்து வாயைப் பிளந்தான் அந்தக் கொள்ளைக்காரன். அவர்களும் தமிழர்களைப் போலவே இளிச்சவாயர்கள். ஸ்பானிய கும்பலை நம்பி மோசம் போனார்கள். அப்போது இன்கா பேராசை ஆண்டவர்

அடஹுஅல்பா எனும் பண்பாளர் அந்தக்காலகட்டத்தில் அவருக்கும் அவரது ஒன்று விட்ட சகோதரருக்கும் ஆட்சி உரிமை சம்பந்தமாக ஒரு சச்சரவு இருந்து வந்தது .அதனால் அவர் அங்கும் இங்கும் தெரிந்து கொண்டு இருந்தார் .அப்போது அவரின் படையில் இரண்டு லக்ஷம் போர்வீரர்கள் இருந்தார்கள் .இன்கா படை என்பது இன்கா பேரரசினைக் காக்கவும், அதன் எல்லையை விரிவுபடுத்தவும், எதிரிகளைக் கட்டுப்படுத்தவும் உருவாக்கப்பட்ட ஒரு பல் இனப் படையாகும். இன்கா பேரரசு வளர்ந்ததைப் போலவே அதன் படைபலமும் அதிகரித்தது. இன்கா பேரரசு அதன் உச்சத்தில் இருந்த போது இன்கா படையில் 2 இலட்சம் பேர் இருந்தனர்.

இன்கா படையினர் தாங்கள் சார்ந்திருந்த இனத்திற்கேற்ப வெவ்வேறு வகையான எளிய ஆயுதங்களைக் கையாண்டனர்.

பாதுகாப்புதலைக்கவசம், மார்புக்கவசம், ஆயுதங்கள், கோடாரிகள், ஈட்டிகள், போலா எனப்படும் நுனியில் கற்களைக் கொண்ட கயிறு

கவண்வில்ஆனால் துப்பாக்கி எனும் ஆயுதம் அவர்கள் அறியாதது .

சிறியப்படையுடன் ஊசுற்றிப்பார்க்கவந்த ஸ்பானிஷ் தளபதி ,பிசாரோ அப்போதைய இன்கா மன்னரைப்பார்க்க அனுமதிக்கேட்டார் .மன்னர் அடஹுஅல்பா முதலில் அவரது பிரபுக்களின் சிலரை அனுப்பி அவர்களைப்பற்றி அறிந்தார் அவர்கள் மிகச் சிறிய 170 வீரர்களுடன் இருப்பதை அறிந்த மன்னர் அவர்களின் அழைப்பை ஏற்றார் .தனது சொந்த படையான 80,000 வேர்களில் இருந்து 6000 வேர்களை மட்டும் அழைத்து கொண்டு அவரது நாட்டுக்கு வந்த வித்தியாசமான வெள்ளை விருந்தினரை சந்திக்க வெள்ளை மனதுடன் சென்றார் .அவரை பல்லக்கில் போர்வீரர்கள் சுமந்து சென்றனர் .போகும் வழியெங்கும் விருந்தும் கேளிக்கையும் ,மது விருந்துடன் சென்றார் .அவர் சென்றதுவேஎறிந்தினரை சந்திக்கத்தானே ?ஆனந்தமாக சென்றார் .

ஸ்பானிஷ் வீர்கள் தங்கியிருந்த இடத்திற்கு சென்றனர் .அங்கே வீர்கள் யாரும் தென்படவில்லை .வெள்ளை மனதுடன் நம்பிக்கைக்கொண்டு அந்த தளபதியின் அழைப்பை நம்பி கட்டிடம் ஒன்றில் சிலருடன் சென்றார் .அப்போது ஒளிந்திருந்த வீர்களின் துப்பாக்கி முழங்கத்தொடங்கியது .அது வரை துப்பாக்கியை அறியாதவர்கள் திகைத்துப்போயினர் . பாதுகாப்புக்கு உடன்வந்த வீர்களைக்கொன்று மன்னர் அடஹுஅல்பாவை கைதியாகப்பிடித்தனர் .

பின்பு வெளியில் காத்திருந்த 6000 வீரர்களும் அழைக்கப்பட்டனர் .மன்னர் கைதானதும் வீரர்களும் கதிகலங்கிப்போனார்கள் .பல்லக்கில் வந்த மன்னர் வஞ்சகமாக ஸ்பானிஷ் தளபதியின் கைதி ஆனார் .

அப்போது மன்னர் அடஹுஅல்பாதன்னை அப்போது கொல்லாமல் விட்டால் அவர் அப்போது இருந்த அந்த பெரியக்கூடத்தின் நிறைய தங்கத்தைத்தருவதாக வாக்களித்தார் . பேராசை கொண்ட தளபதிஅதற்க்கு ஒப்புக்கொண்டனர் .அந்தக்கூடம் இரண்டு மாதங்களுக்குள்தங்கத்தாலும் அதன்அளவில்இருபங்கு வெள்ளியால்நிரப்பப்படவேண்டும் என்று நிபந்தனை விதித்தனர் .இன்காவின் தங்கம் தினசரி அங்கே வந்து குவிய ஆரபித்தது . தினசரி வந்து குவிந்த தாகத்தின் அளவைக்கண்டு திகைத்துப்போயினர் .அவை எங்கிருந்து கொண்டு வரப்படுகிறது இன்னமும் எவ்வளவு தங்கம் அந்த நாட்டில் இருக்கிறது என்பதை அறிய ஆவல் கொண்டனர் .இதை அறிய மன்னரை வதை செய்ய ஆரபித்தனர் .இதில் எதிர்பாராத விதமாக மன்னர் அடஹுஅல்பா கொல்லப்பட்டார் .இந்த தங்கத்தை கொண்டுவருவதில் முக்கிய பங்கேற்ற இன்காவின் தளபதிRumiñahui அவர் பெருமளவு தங்கசுமையுடன் கூடத்தை நிரப்ப போதுமானத்தங்கத்தை கொண்டு வந்தவர்தளபதி வரும் வழியிலேயே மன்னர் கொல்லப்பட்டதை அறிந்து கோபம் கொண்டார்.உடன் கொண்டுவந்த தங்கம் அனைத்தையும் அங்கிருந்த மலைப்பகுதிக்குகையில் ஒளி த்து வைத்து விட்டு தானும் தற்கொலை செய்துகொண்டார் .

இது நடந்தது *July 26, 1533,* இல் இது நடைப்பெற்ற இடம் *Cajamarca*

அதுவரை ஸ்பானிஷ் வீரர்களுக்கு தரப்பட்ட தங்கத்தை அரைப்பகுதி கூடம் நிறைய தங்கம் அப்போது அந்த கொள்ளையில் பங்கேற்ற 170 பெரும் பிரித்துக்கொண்டதாக வரலாறு கூறுகிறது .அதுமட்டும்

13,000 பவுண்டுகள் எதைக்கொண்டு தங்கமும் அதன் இருபங்கு எடைகொண்ட வெள்ளியும் ஆகும் .ஆனால் அறிய வேலைப்பாடு கொண்ட தக நகைகள் ஆயிரம் ஆண்டுகள் நாகரீகத்தின் சான்றாக தங்க வேலைப்பாடுகள் கொண்ட அத்தனையும் உருக்கப்பட்டன . கொள்ளையர்களால் பங்கிட்டுக்கொள்ளப்பட்டது

தென் அமெரிக்காவில் ஸ்பானியர்கள் தங்கம், வெள்ளி அள்ளிச் செல்வதைப் பற்றி கேள்விபட்ட ஒல்லாந்தர்களும், ஆங்கிலேயர்களும் அவற்றை வழிப்பறி செய்தனர். ஒல்லாந்து, ஆங்கில கடற்கொள்ளையர்கள் ஸ்பானிய கப்பல்களை வழிப்பறி செய்து தமது தாயகத்திற்கு கொண்டு சென்றனர். 1628 ம் ஆண்டு, Piet Hein என்ற ஒல்லாந்து கடற் கொள்ளைக்காரன் அபகரித்த செல்வம் வரலாற்றில் பதியப்பட்டுள்ளது. கியூப கடலோரம் வழிப்பறி செய்யப்பட்டு ஒல்லாந்து கொண்டுவரப்பட்ட கப்பலில், 177000 கிலோ வெள்ளி, 66 கிலோ தங்கம், 1000 முத்துக்கள் இருந்தன. கொள்ளையடிக்கப்பட்ட சரக்கின் மொத்த பெறுமதி எட்டு மில்லியன் யூரோக்கள்.

.இன்கா நாகரீக மக்கள் கயிற்றில் முடிச்சுகளைப் போட்டு கணக்கு எழுதினர். முடிச்சுகள் மூலம் வேறு பல விஷயங்களையும் பதிவு செய்தனர். இது பற்றிய புதிய கண்டு பிடிப்புகள் புகழ்பெற்ற விஞ்ஞான சஞ்சிகை நியூ ஸைன்டிஸ்டில் (NEW SCIENTIST) வெளியாகியுள்ளது.

எழுதிய காகிதங்கள் எதையும் அவர்கள் விட்டுச் செல்லவில்லை என்பது உண்மையே. ஆயினும் அவர்கள் வித விதமான முடிச்சுகள் உள்ள வண்ண, வண்ண கயிறுகளை விட்டுச் சென்றுள்ளனர். இதை கீ பூ (KHIPU) என்று அழைப்பர். இதில் சீன அபெக்கஸ் (ABACUS) (கணக்கீட்டுப் பலகை) போல கணக்கு வழக்குகளை எழுதியது முன்னரே தெரியும். ஒருவேளை இந்த கயிற்று முடிச்சுகள் பழங்கால கதைகளையும் சொல்லுமோ என்ற சம்சயம் ஆராய்ச்சியாளர் இடையே எழுந்தது. அதை மேலும் ஆராய, ஆராய இவை வெறும் முடிச்சுகள் அல்ல– கதை சொல்லும் முடிச்சுகள்– பாடல் பாடும் முடிச்சுகள்– என்பது தெரிய வந்தது. அதனால்தான் நியூ ஸைண்டிஸ்ட் போன்ற புகழ் மிகு அறிவியல் வார இதழும் கூட 5 பக்கக் கட்டுரையை படங்கள் சஹிதம் வெளியிட்டது..இன்கா இளவரசிக்கும் ஸ்பெயின் நாட்டு ஆக்ரமிப்பாளனுக்கும் பிறந்த கவிஞர் கார்ஸிலாஸோ டெ லா வேகா 1609-ம் ஆண்டில் முடிச்சு மொழியின் மூலம் அவர்கள் என்ன என்ன எழுதினர் என்று விளக்கியிருந்தார். அவர் ஒரு துப்புத் தகவல் கொடுத்திருந்தார். இன்காக்கள் கயிற்றில் போடும் முடிச்சு மூலம், அவர்கள் போட்ட சண்டைகள், வாதப் பிரதிவாதங்கள், சம்பாஷணைகள், வரி விதிப்பு வசூல், நிலுவை விவரம், யார் யார் வந்து மன்னர்களைப் பார்த்தனர் என்றும் எழுதிவைத்ததாக 400 ஆண்டுகளுக்கு முன் சொல்லியிருந்தார். முடிச்சுகளில் எண்களைக் காண்பது எளிதாக இருந்தது. ஆனால் வரலாற்றைக் காண்பது இதுவரை புதிராக இருந்தது.

ஆனால் மரீஇத்து வைக்கப்பட்ட புதையலின் ரகசியம் இன்னமும் வெளிவரவில்லை .

அவைகளை அடுத்தப்பகுதியில் கூறுகிறேன் .மிகவும் நீண்டுவிட்டது .இதற்காக இன்காவின் வரலாற்றைப்படிக்க ஆரபித்த நான் , கொட்டிக்கிடக்கும் தகவல்களில் மிகச் சிறிய அளவே மிகவும் சுருக்கமாகக்கூறியிருக்கிறேன் .இப்போதே சோகம் மனதை சூழ்ந்து விட்டது .எப்படி இருந்தவர்கள் எப்படி அழிக்கப்பட்டார்கள் ? இது வித்தியா ?

இப்படித்தான் ஆயிரம் ஆண்டுகள் வரலாறு கொண்ட பிலிப்பைனும் ,தனது மிகப்பெரிய தக செல்வத்தையும் நெடிய வரலாற்றையும் மறந்து போன சோகத்தை முன்பு எழுதி இருந்தேன் .இனமும் விரிவாக எழுதுகிறேன் .

மரபின் வேர்கள் - நூல் திறனாய்வு - 4 (முன் இதழ்த் தொடர்ச்சி)

டாக்டர் புதேரி தானப்பன்
டில்லி

திறனாய்வாளர் : டாக்டர் புதேரி தானப்பன்
நூல் பெயர்: மரபின் வேர்கள் (சொல்லாய்வுக் கவிதைகள்)
ஆசிரியர்: பாவலர் கருமலைத்தமிழாழன்
வசந்தா பதிப்பகம்
தொடர்பு எண்: 94434 58550
பக்கங்கள்: 160
விலை: உரூபா: 200 - 00

76) மட்டி - மடையன் என்னும் சொற்கள்:

'மட்டி' என்பவன் யார்? 'மடையன்' என்பவன் யார்? மட்டிக்கும் மடையனுக்கும் உள்ள வேறுபாடு யாது? என்பதை விளக்குகிறது "மட்டி - மடையன்" என்னும் கவிதை.

"அறிவுதனை வளர்க்கின்ற முயற்சி யின்றி
அமர்ந்தபடி பெருக்குகின்ற சிந்தை யின்றி
அறிவில்லா திருப்பவனே மட்டி யாவான்"

என்னும் வரிகள் 'மட்டி' என்பவன் யார் என்பதைச் சொல்லுகின்றன.

"மடைக்குள்ளே வெள்ளத்தை அடைத்தல் போல
மண்டைக்குள் சிந்தனையை அடைத்து வைத்துத்
தடைபோட்டுச் சிந்திக்கும் ஆர்வ மின்றித் !
தற்குறியாய் அலைபவனே மடையன் ஆவான்!"

என்னும் வரிகள் மடையன் என்பவன் யார் என்பதைச் சொல்லுகின்றன. ஆகவே மட்டியாகவும் இல்லாமல் மடையனாகவும் இல்லாமல் அறிவுடையவனாக இருக்க வேண்டுமானால் படிப்போடு அனுபவத்தில் அறிவுதன்னைப் பெற வேண்டும் என்று பாவலர் செப்புகிறார்.

77) பிடி என்னும் சொல்:

'பிடி' என்னும் சொல்லைப் பிடித்துக் கொண்டு பாவலர், 'பிடி' என்னும் தனது கவிதையில் அலசுகிறார்.

பிடி என்றால் பெண் யானை என்று பொருள். ஆண் யானைக்குக் களிறு என்று பெயர்.

பிடி நடையாள் என்று பெண்களின் நடையழகைக் கவிஞர்கள் உவமிப்பார்கள்.

பிடி என்றால் ஒன்றைப் பற்றிக் கொள்ளுதல் என்று பொருள். "இந்தா பிடி சாபம்" என்று முனிவர்கள் சாபம் இடுவார்கள் என்று புராணங்களில் படிக்கிறோம்.

பிடிப்புடன் எந்த ஒரு செயலையும் செய்ய வேண்டும் என்னும் இடத்தில் பற்றுதலோடு, உறுதியுடன் என்னும் பொருளாகிறது.

பிடி என்றால் ஒரு கைப்பிடி அளவு என்னும் பொருளாகிறது. ஒரு பிடிச் சோறேனும் பிச்சையிட வேண்டும் என்று சொல்வார்கள்.

பிடி கொடுக்க மறுக்கிறான் என்னும் இடத்தில் நெருங்கி வந்து பேச மறுக்கிறான் என்று பொருள்.

அடம்பிடித்தல் என்றால் போரிடும் குணம் என்று பொருள்.

பிடிவாதம் என்றால் மறுத்தல் என்று பொருள்.

சளி பிடித்துக் கொண்டது என்று சொன்னால் உடல் மிகவும் குளிச்சியாகிவிட்டது என்று பொருள். இங்கே குளிர்ச்சி என்னும் பொருளைத் தருகிறது.

புகை பிடித்தல் என்று சொன்னால் இங்கே புகையை இழுத்தல் என்று பொருள்.

மதமான பேய் பிடியாதிருக்க வேண்டும் என்னும் இடத்தில் கொள்கை என்று பொருளாகிறது.

கடைபிடித்தல் என்றால் பின்பற்றுதல் என்று பொருள்.

காதலி தான் காதலித்த ஒருவனைக் கரம்பிடித்தாள் என்று சொன்னால் இங்கே திருமணம் என்று பொருளாகிறது.

தீப்பிடித்தல் என்றால் தீ எரிகிறது என்று பொருள்.

எனக்கு மிகவும் பிடிக்கும் என்று சொன்னால் இங்கே விருப்பம் என்னும் பொருளைத் தருகிறது.

இவ்வாறு பிடி என்னும் ஒரு சொல், சொல்லுக்கு ஏற்பவும் இடத்திற்கு ஏற்பவும் பொருள் தருவதைப் பாவலர் சொல்லிச் செல்லுகிறார்.

இவற்றை எண்ணியெண்ணி நாம் இறும்பூதெய்தலாம்.

78) இலைகள் என்னும் சொல்:

மரம், செடி, கொடி அனைத்திலும் அழகழகாய்த் துளிர்க்கின்றவற்றைப் பொதுவாக எல்லா மொழிகளிலும் இலை என்றே சொல்வார்கள். மா இலை, பலா இலை, வாழை இலை இப்படி அனைத்தையுமே இலை என்றுதான் சொல்வார்கள். ஆனால் நமது இனிமைத் தமிழ் மொழியில் சிலவற்றுக்கு வெவ்வேறு சொற்களில் பெயர்கள் உள்ளன.

மா மரம், பலா மரம், வாழை மரம் போன்ற மரம், செடி, கொடிகளில் உள்ளவற்றை இலைகள் என்கிறோம்;

தென்னை, பனை, பாக்கு போன்ற மரங்களில் உள்ளவற்றை ஓலை என்கிறோம்.

கரும்பு, நாணல் போன்றவற்றில் உள்ளவற்றைச் தோகை என்கிறோம்.

நெற்பயிர் விளைவதனைத் தாள்கள், வைக்கோல் என்கிறோம்.

ஆடு மாடுகள் விரும்பித் தின்பவற்றைப் புல் என்கிறோம்.

முட்கள் நிறைந்த சப்பாத்தி, வாசனை மிகுந்த நீள நீளமான பூக்களைத் தரும் தாழையில் உள்ளவற்றை மடல என்கிறோம்.

உண்பதற்குப் பயன்படும் இலைகளைக் கீரை என்கிறோம்

என்று எடுத்துச் சொல்லி, இப்படி அடுக்கடுக்காய்ப் பல சொற்கள் நமது அருந்தமிழில் இருப்பதை உணராமல் அடுத்த மொழிக்கு அடிமையாய்க் கிடக்கிறோம் என்று பாவலர் வருத்தப்படுகிறார். பிற மொழியைவிட நமது மொழிக்கு இன்றியமையாத் தன்மையை வழங்கி நமது மொழியைக் காப்போம்.

79) வல்லினம் மிகுமிடம்:

தமிழ் இலக்கணத்தின் அருமை பெருமைகளை உணர்வது என்பது இக்காலத்தில் பெரிதும் குறைந்துவிட்டது. தமிழ் இலக்கணத்தைச் சிலர் மட்டுமே பயில்கிறார்கள். அந்தச் சிலரும் சொற் புணர்ச்சியைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. சொற்புணர்ச்சி இலக்கணம் கடுமையானது என்றும் குழப்பம் மிகுந்தது என்றும் தேவையில்லாதது என்றும் கருதுகின்றனர். இது தவறான மனப்போக்கு.

இத்தகைய இலக்கணத்தின் ஒரு சிறு பகுதியாகிய வல்லினம் மிகும் இடங்களைச்

சொல்லுகிறார் பாவலர். இவை கல்வியாளர்களால் கட்டாயம் பின்பற்றப்பட வேண்டியவையாகும்.

அ, இ என்னும் சுட்டெழுத்துகளுடன் புணரும் வல்லினம் மிகும்.

'எ' என்னும் வினா எழுத்துடன் புணரும் வல்லினம் மிகும்.

அந்த, இந்த, எந்த என்னும் சொற்களுடன் புணரும் வல்லினம் மிகும்.

அங்கு, இங்கு எங்கு என்னும் சொற்களுடன் புணரும் வல்லினம் மிகும்.

ஆங்கு, ஈங்கு, யாங்கு என்னும் சொற்களுடன் புணரும் வல்லினம் மிகும்.

ஆண்டு, ஈண்டு, யாண்டு என்னும் சொற்களுடன் புணரும் வல்லினம் மிகும்.

அப்படி, இப்படி , எப்படி என்னும் சொற்களுடன் புணரும் வல்லினம் மிகும்.

அதற்கு, இதற்கு, எதற்கு என்னும் சொற்களுடன் புணரும் வல்லினம் மிகும்.

எண்களை எழுத்தில் குறிக்கும் எட்டு, பத்து போன்ற சொற்களுடன் புணரும் வல்லினம் மிகும்.

இரண்டாம் வேற்றுமை விரியுடனும் நான்காம் வேற்றுமை விரியுடனும் புணரும் வல்லினம் மிகும்.

இருபெயரொட்டுப் பண்புத்தொகையுடன் புணரும் வல்லினம் மிகும்.

ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்துடன் புணரும் வல்லினம் மிகும்.

அகர, இகர, ஈற்று வினையெச்சத்துடன் புணரும் வல்லினம் மிகும்.

ஆய், போய், ஆக, போக, செய்யா ஆகிய வினையெச்சங்களுடன் புணரும் வல்லினம் மிகும்.

முன்னர், பின்னர், இனி ஆகிய இடைச் சொற்களுடனும் இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழ்ச் சொற்களுடனும் மாதப் பெயர்களுடனும் புணரும் வல்லினம் மிகும்.

நிலை மொழி ஈற்றில் உயிரெழுத்து வரினும் நிலை மொழி ஓரெழுத்து ஒரு மொழியானாலும் அவற்றுடன் புணரும் வல்லினம் மிகும்.

இப்படி இன்னும் உள்ளன .

(இவற்றின் விரிவை இலக்கண நூல்களில் காண்க)

80) வலி மிகா இடம்:

வலி மிகும் இடங்களைப் போலவே வலி மிகா இடங்களையும் பாவலர் சொல்லுகிறார்.

அது, இது என்னும் சுட்டுப் பெயர்களுடன் புணரும் வல்லினம் மிகாது.

எது, யாது என்னும் வினாப் பெயர்களுடன் புணரும் வல்லினம் மிகாது.

அவை, இவை, அத்தனை, இத்தனை எத்தனை என்னும் சொற்களுடன் புணரும் வல்லினம் மிகாது.

அவ்வாறு, இவ்வாறு, எவ்வாறு, அவ்வளவு, இவ்வளவு, எவ்வளவு என்னும் சொற்களுடன புணரும் வல்லினம் மிகாது.

அன்று, இன்று என்னும் சொற்களுடன் புணரும் வல்லினம் மிகாது.

முதல் வேற்றுமையாகிய எழுவாயுடனும் இரண்டாம் வேற்றுமைத் தொகையுடனும் விரியுடனும் புணரும் வல்லெழுத்து மிகாது.

ஐந்தாம் வேற்றுமை விரியுடனும் ஆறாம் வேற்றுமை விரியுடனும் நான்காம் வேற்றுமைத் தொகை மற்றும் ஆறாம் வேற்றுமைத் தொகையின் உயர்திணையுடனும் ஏழாம் வேற்றுமைத் தொகையுடனும் புணரும் வல்லினம் மிகாது.

அல்வழிப் புணர்ச்சியில் வலி மிகாது. வினைத் தொகையிலும் உம்மைத் தொகையிலும் வினை முற்றுத் தொடர்களிலும் வலி மிகாது.

பெயரெச்சம், வினையெச்சம் இவற்றின் முன் வலி மிகாது.

அடுக்குத் தொடரிலும் இரட்டைக் கிளவியிலும் வலி மிகாது.

உரிச்சொல்லின் பின் வலி மிகாது. விகாரப்பட்ட எண்ணுப் பெயர்களுக்குப் பின் வல்லினம் மிகாது. இப்படி இன்னும் சில உள.

(இவற்றின் விரிவை இலக்கண நூல்களில் காண்க)

81) இளமைப் பெயர்கள்:

இளமையில் உள்ள சிலவற்றுக்கு நமது முன்னோர்கள் குஞ்சு என்றும் சிலவற்றுக்குக் குட்டி என்றும் இன்னும் சிலவற்றுக்குக் கன்று என்றும் பெயர் வைத்திருக்கிறார்கள். அதைப்பற்றிப் பாவலர் தனது கவிதை ஒன்றில் என்ன சொல்லுகிறார் என்று பார்ப்போம்.

துள்ளித் துள்ளிக் குதித்தோடும் இளம் மானுக்கு மான்குட்டி என்று பெயர். ஓய்வெடுக்காமல் ஓடிக்கொண்டே இருக்கும் இளம் முயலுக்கு முயல்குட்டி என்று பெயர். இப்படியே நாய்க்குட்டி என்றும் பூனைக்குட்டி என்றும் சிங்கக்குட்டி என்றும் குரங்குக்குட்டி என்றும் ஆட்டுக்குட்டி என்றும் சில விலங்குகளின் இளமைப் பெயர்களைக் குட்டி என நமது முன்னோர் பெயரிட்டு அழைத்தனர்.

ஆனால் மாடுகளின் இளமையை யாரும் மாட்டுக்குட்டி என்று அழைப்பதில்லை. மாறாக, கன்று என்றே அழைத்தனர். எருமையின் சேயை எருமைக்கன்று என்று அழைத்தனர். விலங்குகள் அன்றி, வாழை மரத்தின் சேய்தனையும் வாழைக்கன்று என்றே சொன்னார்கள். தென்னை முளைத்து வருவதனைத் தென்னம் பிள்ளை என்று சொன்னார்கள்.

பறவைகளின் இளமையைக் குஞ்சு என்று அழைகிறோம். குருவிக்குஞ்சு, கோழிக்குஞ்சு, காக்கைக்குஞ்சு என்றும் மீன்களின் முட்டையிலிருந்து பொரித்தவற்றை மீன்குஞ்சு என்றும் அழைக்கிறோம். ஆனால் அதே தண்ணீரில் வாழ்கின்ற திமிங்கிலத்தின் சேயைத் திமிஙங்கிலக் குட்டி என்கிறோம். பாம்பின் இளமையையும் குட்டி என்கிறோம்.

சில பறவைகள், விலங்குகளின் குட்டிகளுக்குக் குருளை என்றும் பார்ப்பு என்றும் மறி என்றும் பெரியோர் கூறுவர்.

மக்களின் இளமைக்குக் குழந்தை என்றும் மகவு என்றும் குழவி என்றும் பெயரிட்டு அழைத்த பெரியோர், நெற்பயிரின் இளமைக்கு நாற்று என்று பெயரிட்டனர். மரத்தின் இளமைக்குச் செடி என்றும் பக்கலில் இருக்கும் கொம்பைப் பிடித்துக்கொண்டு படர்வதைக் கொடி என்றும் அழைத்தனர்.

இவ்வாறு வெவ்வேறு இளமைக்கு வெவ்வேறு பெயர்களால் அழைத்த நமது முன்னோரின் பாங்கினையும் தமிழ் மொழியின் பெருமையினையும் போற்றிக் காப்பது நமது கடமையாகும்.

(தொடர்ச்சி காண்க)

பாவலர்
கருமலைத்தமிழாழன்

திருவிதாங்கூர் சமஸ்தானம்: திரிக்கப்படும் வரலாறும் மறைக்கப்படும் உண்மைகளும்

லயன் வெங்கடேசன்
நோபல் ஹார்ட்ஸ் அரிமா சங்கம்

வரலாறு என்பது வெறும் கடந்த கால நிகழ்வுகளின் தொகுப்பு மட்டுமல்ல; அது நிகழ்காலத்தின் பல சமூகச் சிக்கல்களுக்கு விடை சொல்லும் ஒரு ஆவணம்.

ஆனால், சமீபகாலமாகச் சமூக ஊடகங்களில் வரலாற்றைத் தங்களுக்குச் சாதகமாகத் திரிப்பதும், அடிப்படைத் தரவுகளை மறைத்துப் பேசுவதும் ஒரு வாடிக்கையாகிவிட்டது.

குறிப்பாக, திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் வரலாறு மற்றும் அங்கு மிஷனரிகள் ஆற்றிய சமூகப் பணிகள் குறித்து ஒரு மதவாத நண்பர் முன்வைத்த விமர்சனம் கவனிக்கத்தக்கது:

"Mr பாவாடை திருவாங்கூர் சமஸ்தானம் யார் கட்டுப்பாட்டில் இருந்தது? மிஷனரி வெள்ளைக் காரன் கட்டுப் பாட்டில். அப்போ காட்டியும் கூட்டியும் கொடுத்தீங்க."

இத்தகைய தரம் குறைந்த மற்றும் வரலாற்றுப் பிழைகள் நிறைந்த வாதங்களுக்கு, ஆவணங்களின் அடிப்படையில் விடையளிக்க வேண்டியது வரலாற்று வாசகன் என்ற முறையில் கடமையாகும்.

தன்னாட்சி அதிகாரமும் பிரிட்டிஷ் தலையீடும்

திருவிதாங்கூர் சமஸ்தானம் ஒருபோதும் ஆங்கிலேயர்களின் நேரடி ஆட்சியின் கீழ் *(Direct British Rule)* இருந்ததில்லை என்பதை முதலில் தெளிவுபடுத்த வேண்டும். *1795* மற்றும் *1805*-ஆம் ஆண்டுகளில் ஆங்கிலேயர்களுடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்களின்படி, திருவிதாங்கூர் ஒரு 'சுதேச சமஸ்தானமாகவே' *(Princely State)* நீடித்தது.

ஆங்கிலேயப் பிரதிநிதி *(Resident)* ஒரு மேற்பார்வையாளராக மட்டுமே செயல்பட்டார். உள்நாட்டு நிர்வாகம், வரி வசூல், நீதி வழங்கல் மற்றும் சமூகக் கட்டுப்பாடுகள் என அனைத்தும் மன்னர் மற்றும் திவான்களின் முழுமையான அதிகாரத்தின் கீழேயே இருந்தன. எனவே, அங்கு நிலவிய சமூக ஒடுக்குமுறைகளுக்கும், மனிதாபிமானமற்ற வரி விதிப்புகளுக்கும் அன்றைய உள்ளூர் அதிகார வர்க்கமே பொறுப்பே தவிர, மிஷனரிகள் அல்ல.

தோள் சீலைப் போராட்டம்: ஒரு சமூக அறப்போர்

திருவிதாங்கூர் வரலாற்றில் மிக மோசமான அத்தியாயம் 'முலைவரி' (Breast Tax) மற்றும் கீழ்நிலைச் சமூகப் பெண்கள் மேலாடை அணியக் கூடாது என்ற கட்டுப்பாடு. மானத்தைக் காக்கப் போராடிய நாடார் மற்றும் ஒடுக்கப்பட்ட சமூகப் பெண்களுக்குத் தார்மீக வலுவை வழங்கியது யார்?

சமஸ்தானத்தின் ஆதிக்கச் சக்திகள் இந்தப் பெண்களை வீதியில் வைத்து அவமானப்படுத்தியபோது, அவர்களுக்குக் கல்வியையும், தைரியத்தையும் வழங்கி, அவர்கள் மேலாடை அணியும் உரிமையைப் (Channar Revolt) பெற்றுத் தந்ததில்

மிஷனரிகளின் பங்கு ஈடு இணையற்றது.

இதை "காட்டிக்கொடுப்பது" என்று விமர்சிப்பது, அடிப்படை மனித உரிமைகளுக்காகப் போராடிய ஒரு சமூகத்தின் தியாகத்தைக் கொச்சைப்படுத்துவதாகும்.

மிஷனரிகளின் கல்வி மற்றும் சமூகப் புரட்சி

மிஷனரிகள் அணிந்த அங்கி போன்ற உடையை "பாவாடை" எனக் கேலி செய்வது, அவர்களின் அறிவுசார் உழைப்பைச் சிறுமைப்படுத்தும் செயலே.

கல்வி: 1819-ல் நாகர்கோவிலில் பெண்களுக்கான முதல் பள்ளியை (Martha School) மிஷனரிகள் தொடங்கினர்.

அடிமை ஒழிப்பு: 1855-ல் திருவிதாங்கூரில் நிலவிய கொடூரமான அடிமை முறையை ஒழிக்கக் கோரி மன்னருக்குத் தொடர் மனுக்களையும், அழுத்தங்களையும் கொடுத்தவர்கள் அவர்களே.

இன்று கேரளா கல்வி மற்றும் மருத்துவத் துறையில் பெற்றுள்ள முன்னேற்றத்திற்கு, மிஷனரிகள் தங்களின் நாடுகளிலிருந்து கொண்டு வந்த நிதி ஆதாரங்கள் தான் அஸ்திவாரமாக அமைந்தன.

முடிவுரை

மன்னராட்சியின் தவறுகளையும், அங்கு நிலவிய சாதியக் கொடுமைகளையும் மறைப்பதற்காக மிஷனரிகள் மீது பழி சுமத்துவது வரலாற்று நேர்மையல்ல. திருவிதாங்கூர் மக்கள் அனுபவித்த துயரங்களுக்கு அந்த மண்ணின் ஆதிக்க மனநிலையே காரணம். வரலாற்றைச் சாதி-மதக் கண்ணாடிகளைக் கழற்றிவிட்டுப் பார்த்தால் மட்டுமே, உண்மையான சமூகப் புரட்சியாளர்கள் யார் என்பது விளங்கும்.

TAMILMAGAN's Gene Notes in Vengai Anchor

Dr. C. Rajeswari M.A., M.Phil., Ph.D
Translator, Publisher, Madurai

Chapter 13

2038, New York

Renauld read all the reports of Dev. Dr.Maran had discussed each and every point in that, so Renauld had no way to rise any questions or doubts. Maran had attached a digital print of Dev's brain as well.

He could clearly notice a search for the truth related to the genesis of a language. It is a search based on a historical present. He coined the term 'historical present

He looked for the next search in the digital print of his brain.

That is.... primitive age.



Snow cladded land and shivering people around. They had wrapped themselves with the hides of the animals, only to protect from the chill weather and not to cover their bodies. They planned to move to someplace where they could have some sunlight and vegetation. Here, this snow is not suitable for people to live in. Many die day after day. So they started in search of a warm place. Many died on the way. Those who survived found mountain caves and entered in. There they found some deer and tigers too. Animals also found their way into those caves. Initially, they lived with beasts and reptiles. If it rains, they went into the caves otherwise, they come out in search of food. They made weapons with stones. They sharpened them and used them to kill animals and shared the meat among themselves. They learned to make fire by rubbing stones and started cooking the meat and found it tasty. The dancing fire gave them warmth at night and added taste to food. So they started to keep the fire burning for nights and days. If it is put off, it was again a difficult process to bring out. One person was good at it. One day when he died, people stopped bringing fire.

When the cold season started, they needed fire for warmth. A woman found the dried nests of the birds and tried to burn them with the fire she made by rubbing the stones. A raindrop fell down and put off her fire. The group shouted at her, but she reacted back. She cried, showing her teeth and nails in a gesture to attack them. A young man approached her

and helped her to bring the fire again. Then she brought the dried nests and twigs to keep the fire burning. Now the secret of fire is known.

They cooked food, wrapped it with the hides, and now started communicating with sounds and gestures. When the spark hurt a man, he cried thii and the sound of the fire was in a rhyme of theep theep.

It rained heavily and the water sources were full. The fire rescued them from all dangers and protected them for centuries. Now they used many monosyllabic words like poe, vaa, thaa, kai, kaal and many others. They had almost a hundred words to communicate essential matters. They had names such as Aathan, Nhithan, Saaththan, Nhaathan, Murukan, Arukan, Manthi, Thaathi, Neeli, Valli, Alli, and so on.

After the rain stopped and the sky is clear. A hunter from the hills guided them. He was called Seevan.

Dev felt that he had another name called Kadamaban. On another hill lived a young man called Kadamban. He placed a stone in the burial place when somebody died. Finally, he added Valli to his list of women. Once she refused to marry him, but when the elephant chased her, she came and embraced Kadamban and the physical contact led them to marry each other.

It was bubbling from Dev's memory of Kadamban, Kaarththikeyan, Murugan, Velan, and Subramaniyan. Oh, how many names for a single man! No, they are the names of the chiefs of their clans in the Tamil-speaking group. One person had a dialogue with Avvai, another had fought and killed an asuran, the next one had an argument with his dad, and one more person married Theiyvayanai. All are Murugan. Our great grandfather,...

This race developed their language in the script and started recording important and lovable happenings in their lives.

Dev thought 'Why don't we marry a Valli'? He planned to marry a girl name, Valli. Why did we leave the habit of marrying a woman? Let me marry a girl now? If the marriage didn't work out, I shall easily come out of it. No problem.

It is the golden moment a tiny sharp blade of grass shot out into dry land.

Renauld stopped his digital analyzer. He called Dr. Maran and asked, 'Had Dev married Valli or in a plan to marry Valli? Please let me know that.'

Maran said, Yes Sir.

He wondered and asked himself 'Is there a name Valli'

The Whispers of the Indian Ocean: Unveiling the Enigma of Lemuria and Kumari Kandam

Ms. Prabha S. Rajesh,
Chennai

Beneath the azure expanse of the Indian Ocean lies a mystery that has captivated the human imagination for centuries. It is the story of a lost world—a submerged continent known to the West as Lemuria and to the Tamil people of South India as Kumari Kandam. While mainstream science and ancient folklore often exist in separate spheres, the legend of this sunken land provides a fascinating intersection where Victorian zoology, ancient poetry, and modern geophysics meet.

1. The Victorian Origin: The Rise of Lemuria

The name "Lemuria" did not originate from an ancient scroll, but from the desk of an English zoologist named Philip Sclater in 1864. Sclater was puzzled by a biological anomaly: lemurs (and their fossils) were found in Madagascar and India, but were conspicuously absent from the African mainland and the Middle East.

In an era before the theory of plate tectonics was understood, Sclater proposed a radical solution: a massive land bridge or continent must have once connected India to Madagascar. He dubbed this hypothetical land "Lemuria."

From Science to Mysticism

Sclater's idea was quickly embraced by other scientists of his time, including Ernst Haeckel, who even suggested Lemuria might be the "cradle of humanity." However, the concept took a turn into the esoteric when Helena Blavatsky, founder of the Theosophical Society, integrated Lemuria into her spiritual doctrines. She claimed it was the home of the "Third Root Race"—giant, telepathic beings. This transition from a biological hypothesis to a mystical "lost Eden" ensured that Lemuria would remain a staple of alternative history long after its scientific basis was challenged.

2. Kumari Kandam: The Tamil Cradle of Civilization

While Westerners were debating lemur fossils, the people of South India held a much older tradition of a lost southern land. Tamil literature, dating back over two millennia, speaks of Kumari Kandam (the "Maiden Continent").

The Sangam Legends

According to ancient Tamil works like the Silappatikaram and the Kalithogai, a vast territory once stretched south from Kanyakumari, the southernmost tip of India. This land was said to be the home of the first two Tamil Sangams (literary academies) where gods and sages gathered to refine the Tamil language.

The legend tells of a catastrophic "Kadal Kol" (seizure by the ocean) or a series of massive tsunamis that swallowed the land, forcing the survivors to migrate north into what is now modern-day Tamil Nadu. To Tamil revivalists in the early 20th century, Sclater's "Lemuria" felt like a scientific confirmation of their own ancestral history, leading to the two names becoming almost synonymous in popular discourse.

3. The Geological Reality: Plate Tectonics and Mauritia

By the 1960s, the scientific "need" for Lemuria vanished. The discovery of plate tectonics proved that continents do not sink like Atlantis; instead, they drift. Geologists realized that India and Madagascar were once part of the supercontinent Gondwana and simply broke apart millions of years ago, drifting to their current positions.

However, recent discoveries have added a layer of "truth" to the myth. In 2013, geologists found evidence of a microcontinent beneath the waves of the Indian Ocean, which they named Mauritia.

The Evidence for Mauritia

Ancient Zircons: Scientists found 3-billion-year-old zircon crystals on the relatively young volcanic island of Mauritius. These crystals could only have come from an ancient continental crust buried deep underwater.

The Continental Ribbon: Mauritia is believed to have been a "ribbon" of land—roughly the size of Greenland—that acted as a buffer between India and Madagascar before it was stretched and submerged by tectonic forces about 84 million years ago.

Note: While Mauritia is a real submerged landmass, it sank tens of millions of years before humans existed. Therefore, while it confirms that "lost lands" exist beneath.

புதிய வெளியீடுகள்









சந்திரோதயம் பதிப்பகம், மதுரை -18.
போன் 7010997639